பெப்ரவரி 2026

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை
ரூபா 100/=



309

10 கதைகள்
15 கவிதைகள்
3 கட்டுரைகள்
2 நூல் விமர்சனங்கள்

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

309

ஒளி : 26 சுடர் : 09

ஸ்தாபகர், ஆலோசகர் : தி. ஞானசேகரன்

ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானலக்ஷ்மி
ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. இலங்கை
தொலைபேசி: + 94 11 258 6013
+ 94 71 736 2862
மின்னஞ்சல்: editor@gnanam.info

சந்தா விபரம் : இலங்கை Rs. 1500/=
வெளிநாட்டுச் சந்தா $ 100
(தபால் செலவு உட்பட)

வங்கி விபரம்
G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX


பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

## இதழினுள்ளே.....

### கவிதைகள்


- தேன்தமிழினி 04
- காப்பியக்கோ ஜின்னாஹ் 08
- கலாநிதி செ.சுதர்சன் 11
- த.பிரியதர்ஷனி 16
- வதிரி சி.ரவீந்திரன் 17
- ஏ.எம்.மிஹ்ழார் 21
- யோகேந்திரன் பிரசாந் 29
- பேராசிரியர் என்.சண்முகலிங்கன் 31
- அநபாய சோழன் (அவுஸ்.) 34
- வெலிகம ரிம்ஸா முஹம்மத் 37
- சித்ரா சின்னராஜன் 46
- கீத்தா பரமானந்தன் 53
- பா.கிருபாலினி 55
- Dr. ஜலீலா முஸம்மில் 59
- கலாநிதி செ.ஞானராசா 64


### கட்டுரைகள்


- பேராசிரியர் சபா ஜெயராசா 07
- தமிழ்மணி அகளங்கன் 18
- எ.மிலானி 51


### சிறுகதைகள்


- பாலரத்னம் சரண்யா 02
- நவஜோதி ஜோகரட்னம் (லண்டன்) 12
- கலாபூஷணம் என்.தியாகராசா 25
- ஏ.ஏ.ஹெச்.கே. கோரி 35
- மகேந்திரன் கோவர்த்தனா 42
- வெல்லாவெளி விவேகானந்தம் 47
- சுந்தரிமணியன் (இந்தியா) 57
- கலைமாமணி கா. தவபாலன் 62


### குறுங்கதைகள்


- ந.பார்த்திபன் 32
- ரிஸ்மியா நாகூர்கனி ஹாபி (லண்டன்) 33


### நூல் விமர்சனம்


- கே.எஸ்.சுதாகர் (அவுஸ்.) 30
- சிவானந்தி பாஸ்கரன் 38


### பத்தி


- பேராசிரியர் துரை. மனோகரன் 60



### வாசகர் பேசுகிறார் 64



- ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
- புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.
- ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.

# ஆசிரியர் பக்கம்...




## அனைவருக்கும் அன்பு வணக்கம் !

**உலகளாவிய அச்சுறுத்தல்**
**– பொய்த் தகவல்களும், திரிபுத் தகவல்களும்**

உலகப் பொருளாதார மன்றம் (World Economic Forum - WEF) வெளியிட்டுள்ள 2026ஆம் ஆண்டிற்கான "உலகளாவிய இடர் அறிக்கையின்படி" (Global Risks Report 2026), "பொய்த் தகவல்களும், திரிபுத் தகவல்களும்" (Misinformation and Disinformation) உலகின் **இரண்டாவது அச்சுறுத்தலாக** முன்வைக்கப்பட்டுள்ளது. நாடுகளுக்கிடையிலான புவிசார் பொருளாதார மோதல்கள் முதலாவது அச்சுறுத்தலாக இருக்க, காலநிலை மாற்ற இடர்பாடுகள் மற்றும் ஆயுதப் போர்களைக் காட்டிலும், பொய் – திரிபு தகவல்களினால் ஏற்படும் குழப்பங்கள் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளமை நம் கவனத்திற்குரியது.

2024ஆம் ஆண்டின் அறிக்கையில் முதன்முறையாக அடையாளப்படுத்தப்பட்ட இந்த உலகளாவிய அச்சுறுத்தல், இன்று பேராபத்தாக உருவெடுத்துள்ளது. குறிப்பாக, செயற்கை நுண்ணறிவின் (AI) அசுர வளர்ச்சியால் இது மேலும் தீவிரமடைந்துள்ளது. நவீன தொழில்நுட்பங்கள் மூலம் பொய்யான மற்றும் திரிபான செய்திகள், காணொளிகள், ஒலிவடிவங்கள் போன்றவற்றை நம்பகத்தன்மையுடன் உருவாக்கமுடிகிறது. இதனால், எதனை நம்புவது என்பதில் தகவல்களை நுகர்வோர் பெரும் குழப்பத்திற்கு உள்ளாகின்றனர்.

இந்தத் தகவல்சார் பிரச்சனைகள், தமிழ் இலக்கிய உலகிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். வரலாற்று ரீதியாகச் சரிபார்க்கப்படாத தரவுகள், குறிப்பிட்ட சித்தாந்தங்களுக்காகத் திரிக்கப்படும் கருத்துகள், மற்றும் ஓர் எழுத்தாளரின் பாணியைப் பின்பற்றிச் செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்படும் செயற்கைப் படைப்புகள், ஆகியவை இலக்கியத்தின் தனித்துவத்தைச் சிதைத்துவிடும்.

உதாரணத்துக்கு, பாரதியின் கையெழுத்து மாதிரிகளைக் கொண்டு, அவர் யாழ்ப்பாணம் வந்து சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரின் வீட்டில் தங்கிச் சென்றதாக, பாரதி எழுதியதைப் போன்ற கடிதமொன்றினை தற்போது உருவாக்கி, இணையத்தில் தரவேற்றிவிடமுடியும். அல்லது, பேராசிரியர் சிவத்தம்பி, நடந்துவந்து, மேடையில் ஏறி, அவரின் குரலினால் எஸ்.பொ.வை புகழ்ந்து உரையாற்றுவதாகவும், அவையிலிருந்து பேராசிரியர் கைலாசபதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்றோர் ரசிப்பதாகவும் நம்பகத்தன்மையுடைய காணொளி ஒன்றை உருவாக்கி சமூகவலைத் தளங்களில் பரப்பிவிடமுடியும். இதையொத்து, விரிவுபடுத்தி உதாரணங்களை எண்ணிக்கொள்க.

இவை ஆய்வாளர்களிடையே நம்பகத்தன்மைச் சிக்கலை உருவாக்குவதுடன், தமிழ் இலக்கியத்தின் செழுமையையும், அதன் வரலாற்று உண்மைகளையும் பாதுகாப்பதில் பெரும் சவாலாக அமைந்துவிடும்.

இது வெறும் தகவல் சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல. மாறாக, இது ஒரு **நிழல் போர்** போலச் செயல்பட்டு, உலக மக்களின் அமைதி, நாடுகளுக்கிடையிலான அமைதி, பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பையும் பாதிக்கிறது என, உலகப் பொருளாதார மன்றத்தின் அறிக்கை எச்சரிக்கின்றது.

இந்தக் காட்டாற்று வெள்ளத்தில் அடிபட்டுப்போகாமல் தப்பிப்பிழைப்பதற்கு ஒவ்வொருவரும் தம்மைத் தயார்செய்துகொள்ளவேண்டும். நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் **தகவல் பெருவெளியில் உண்மைத் தகவல்களை இனங்காண்பதே பிரதான அறங்களில் ஒன்றாக மாறவேண்டியுள்ளது** எனலாம்.

❍❍❍

மணி ஆறாகிவிட்டது. இன்னும் ரயில் வந்து சேரவில்லை. கை சுமைகளோடு, மன சுமையையும் பத்திரப்படுத்திக் கொண்டு ஓரமாயமர்ந்து ரயிலுக்காக காத்துக் கொண்டிருந்தாள் வள்ளி. பிளேட்போம் முழுவதும் சனத்தால் நிரம்பியிருந்தது. வள்ளி சுற்றிலும் நடப்பவற்றை மெல்லமாய்க் கவனித்துக் கொண்டிருந்தாள். வயது முப்பது முப்பதைந் திருக்கும் கணவனை இறுக்கி அணைத்தபடி ஒரு நிறைமாத கர்ப்பிணிப்பெண் கண்கலங்கி பேசிக்கொண்டிருந்தாள். அவன் அவளை கட்டியணைத்து ஆறுதல்படுத்திக் கொண்டிருந்தான். சிறு புன்னகையுடன் வள்ளியின் கண்கள் பக்கத்து பெஞ்சில் அமர்ந்து கொண்டிருக்கும் வயதான ஜோடியிடம் சென்றது.

“ஏங்க நேரத்துக்கு சாப்பிடுங்க.... ஜோக்கிங் போறேனு காலையில பனியில நடக்காதிங்க.... மருந்து சாப்பிட மறக்காதிங்க... அப்பறமா... (மிகுந்த தயக்கத்துடன் தன்னுடைய கணவனின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு) பையன் மேல இருக்க கோவத்த மறந்துடுங்க....”




அவர் சிரித்தப்படி “எனக்கு யாரு மேலயும் கோவம் இல்லம்மா, வருத்தம்தான். எல்லாம் கைமீறிப் போச்சி. அரவணைக்குறது உன் அன்புனா, கண்டிக்குறது என் அன்பு. எங்க நெருங்கிட்டா அதிகமா பாசத்த காட்டி புள்ளைய கெடுத் துடுவமோனு தூரமா கண்டிப்போட இருந்தே. ஆனா அந்த தூரம்தான் அவனுக்கு பிரச்சனைனு புரிஞ்சதும்மா... நம்ப புள்ளதானே எங்க போயிட போறான் அப்பாகிட்ட வந்துடுவான்” எனக் கூறிக்கொண்டே தன் மூக்குக் கண்ணாடியை கழட்டி கண்களைத் துடைத்துக் கொண்டார்.

கணவனின் கண்ணீர் துளிகளில் பங்கெடுத்து அவளும் அழ ஆரம்பித்தாள். உடனே தன் ஆசை மனைவியை நெஞ்சோடு அணைத்து உன்னை இன்னும் அதிகமாக காதலிக்க தோன்றுகிறது என்றார். அறுபது வயதிலும் இத்தனை காதலா என வள்ளிக்கு பூரிப்பாக இருந்தது. அவர்களுக்கிடையில் அவ்வளவு நெருக்கம், அந்நியோன்யம், காதல், பகிர்வு, பிரிவின் வேதனை என அனைத்தும் கொட்டிக்கிடந்தது. காதலுக்கு வயதில்லை என்பது உண்மை தான் என மனதுக்குள் நினைத்து சிரித்துக் கொண்டாள்.

“வழமைக்கு மாறான காலநிலை காரணமாக கொழும்பு நோக்கி செல்லும் லிங்கன் புகையிரதமானது இன்னும் அரைமணி நேரத்தில் தாமதமாக பிளேட்போமை வந்தடையும்” என்ற ஒலிபெருக்கியின் குரல் கேட்டு சனத்தினிடையே சலசலப்பு சற்று அதிகமானது. ஒவ்வொருவரும் மாறி மாறி அருகில் இருப்பவர்களிடம் ரயிலின் தாமதம் குறித்துப் பேசிக் கொள்கின்றார்கள். அங்கும் இங்குமாக குழந்தைகள் ஓடி விளையாடுகின்றனர். பெற்றோர் குழந்தைகளை கண்டித்து அமைதியாக வைத்துக்கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

இத்தனைக்கும் நடுவே தூணின் இரு பக்கங்களிலும் தங்களின் தோள்களை முட்டுக் கொடுத்துக் கொண்டு எந்தவித சலசலப்புக் களையும் காதில் போட்டுக் கொள்ளாமல் இருவர் தங்களின் கண்களால் காதலை பரிமாறிக் கொண்டிருந்தனர். புதிய காதல் ஜோடிகள் போல்தான் தெரிகின்றது. இருவரின் முகத்திலும் எண்ணிலடங்காத பிரகாசம். கன்னங்கள் அகன்று சிரித்தபடி இருக்கும். விரிந்த உதடுகள் சேர மறுக்கின்றன. வள்ளியும் கனநேரமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கின்றாள். இருவரின் உதடுகளும் அசைந்த பாடில்லை.

அவர்களை மறைத்து சிறிய தள்ளுவண்டி யொன்று வந்து நின்றது. சுண்டலும் சோளமும் நிறைந்திருந்த தள்ளுவண்டியை தள்ளி வந்தவன் ஓர் இளைஞன். பார்ப்பதற்கு மிடுக்கான தோற்றத்தோடு இருந்தான். கறுத்த உடம்பு, விரிந்து தடித்த தோள்பட்டை, குத்திக் கிழிக்கும் கூர்மையான கண்கள், சுருண்டு நிற்கும் தலைமுடி, தாடையிலிருந்து கழுத்துவரை வசீகரித்து வளர்ந்திருக்கும் தாடி, வெளியே எட்டிப்பார்க்கும் நெஞ்சின் முடிகள் என எடுப்பாக இருந்தான். அப்படியே கன்னத்தில் கைவைத்தபடி அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் வள்ளி. இப்பொழுது இவளின் கண் அந்த வாலிபனை விட்டு நகரவில்லை.

அவனுக்கும் தன்னை யாரோ கவனிப்பதை போன்றுணர்ந்து நிமிர்ந்து பார்க்கின்றான். சட்டென்று தன் பார்வையை இடமாற்றுகிறாள் வள்ளி. சில நொடிகளின் பின் வள்ளியின் கண்கள் மறுபடியும் அவனை தேடின. இப்போது அவனின் கண்கள் அவளை வெறித்துக் கொண்டிருக்க, வெட்கத்தில் தலை குனிந்து கொண்டாள். மெல்லமாய் நிமிர்ந்து பார்க்கிறாள். மறுபடியும் வெட்கம் வந்துவிட்டது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

வள்ளி தன்னுடைய பதினைந்தாவது வயதி லிருந்து கொழும்பில் ஒரு வீட்டில் வேலை செய்து வருகின்றாள். பொறுப்பில்லாத தந்தை, நோயுற்ற தாய், படித்துக் கொண்டிருக்கும் இரண்டு தங்கைகள், வள்ளியின் அதீத விருப்பத்தை பெற்ற தம்பி என தன்னுடைய குடும்ப சுமைக்காக வெகுதூரம் சென்று வேலைசெய்து கொண்டிருக் கின்றாள்.

அவள் வேலை செய்யும் வீட்டில் உள்ளவர்கள் சிங்களவர்கள். எந்தவித பேதமுமின்றி அவளிடம் நடந்துக் கொள்வார்கள். வள்ளி வேலைக்குச் சேர்ந்து பத்து வருடங்கள் இருக்கும். வள்ளியின் மீது அவ்வீட்டாருக்கு அதீத பாசமிருந்தது. வள்ளியை வீட்டில் ஒருத்தியாகவே பார்த்தார்கள். அவளும் அவர்களோடு நன்றாக பழகுவாள். சிங்கள மொழியையும் பேசக்கற்றுக் கொண்டாள்.

ஆரம்பத்தில் ‘மாத்தியா… மாத்தியா…’ என்பதைத் தாண்டி பேசமாட்டாள். அந்த மாத்தியா விலேயே தனக்கு தேவையான அனைத்தையும் கேட்டுவிடுவாள். அந்த குழந்தைத்தனம்தான் அவர்களிடம் அவளை இறுக்கமாகப் பிணைத்தது.

வள்ளியின் தந்தை குடித்து தீர்ப்பதற்காக பெற்றுக்கொண்ட கடன்தொகை கூடிக்கொண்டே போனது. கடன் கொடுத்தவர்கள் வீட்டிற்கே வந்து பிரச்சனை கொடுக்க ஆரம்பித்தனர். குடிகார தந்தையாலோ, நோயுற்ற தாயாலோ கடன் தீரப்போவதில்லை என்றுணர்ந்து தானே கடன் சுமையை தோளில் தூக்கிக் கொண்டு கொழும்பு நோக்கி பயணமானாள். இதுபோன்றதொரு புகையிரத பயணத்தின் போதுதான் தனது முதலாளி குடும்பத்தையும் முதலில் சந்தித்தாள்.

வேலைக்குச் சேர்ந்ததன் பின் தன்னுடைய முழு சம்பளத்தையும் வீட்டிற்கே அனுப்பினாள். தந்தையின் கடன்களை கொடுத்து முடித்தாள். தங்கையர் இருவரையும் படிக்க வைத்தாள். தனக்கு கிடைக்காதவற்றை எல்லாம் தன் உடன்பிறப்புகளுக்கு தருவதில் ஆனந்தம் கொண்டாள்.

இப்படியிருக்க ஒருநாள் வழமையாக செல்லும் பக்கத்துக்கடையில் ஒரு புதிய முகத்தைப் பார்க்கிறாள். அவன் கிருஷ்ணன். புதிதாக கடையில் வேலைக்கு சேர்ந்திருக் கின்றான். வள்ளிக்கு பார்த்ததும் பிடித்துப் போனது. அவனுக்காகவே அடிக்கடி கடைக்கு வருவது, மற்றவர்களுக்கு இடம் கொடுத்து அவனை ரசித்தபடி காத்திருந்து பொருட்களை வாங்கிச் செல்வது என்றிருக்க மாதங்கள் கடக்கின்றன. வள்ளியின் நடவடிக்கையில் மாறுதல்களைக் கண்ட முதலாளி வீட்டாரும் அவளின் மனதைப் புரிந்துக் கொண்டு கிருஷ்ணனையே வள்ளிக்கு திருமணம் செய்து வைக்கின்றார்கள். பணம், நகை, பண்டபாத்திரம் என பலவற்றை திருமணப் பரிசாக கொடுத்து வள்ளியை சொந்த ஊருக்கு அனுப்பி

# முகவரியில் பிழை

முற்றுப்பெறாத கடிதமென்று
குப்பைத் தொட்டியை
அலங்கரித்திருந்தது ஏனோ?
என் காதல் போல
எழுத்துப் பிழையாய் மனதுக்குள்
புதைக்கப்பட்டதாலோ?

மூடிவைத்த உணர்வுகள் –
புதையலா? பிழையா?
மௌனத்தில் உருகும் பதில்கள் கூட
அதை தீர்க்க வில்லை.
முடிவில் தான் உணர்ந்தேன்
கடிதத்தில் பிழையில்லை,
முகவரியில்தான் பிழையென்று.

எப்போதோ அந்த முகவரிக்கு
வேறு எங்கிருந்தோ
ஒரு கடிதம் சென்றுவிட்டது.
அதை அறியாத என் எழுத்துக்கள்
உக்காத விதையாய் கடிதத்தில்
உறங்கிக் கொண்டிருக்கின்ற
வாசல் காணாத விதையாய்
கருவுலகம் காணா என் காதல்.

**தேன்தமிழினி**
இரண்டாம் ஆண்டு மாணவி,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

வைக்கின்றார்கள். நடந்தவற்றை அறிந்துக் கொண்ட வள்ளியின் வீட்டாரும் அவர்களை வரவேற்க ஆர்வமாய் காத்துக் கொண்டிருந்தார்கள்.

இரவு பத்துமணி ரயிலில் புறப்படத் தயாரானார்கள். வள்ளி காதலித்தவனை கரம் பிடித்ததில் வானத்தை முட்டும் சந்தோஷத்தில் திளைத்துக் கிடக்கின்றாள். இரவு நிலவின் வெளிச்சம் குடித்து காதல் கதை பேசும் பறவைகளாய் உலகம் மறந்து கிடக்கின்றனர். கிருஷ்ணனின் அரவணைப்பு அவளின் சுமை தாங்கிய தோள்களுக்கு சுகமாய் இருந்தது. விடியற்காலை மூன்று மணியளவில் ஒரே சத்தம். கிஷ்ணனின் மார்பில் புதைந்து கிடந்தவள் எழுந்து பார்த்ததும் அலன்று போனாள்.

வள்ளிக்கு பக்கத்தில் இருந்த பாட்டி ரயில் கொள்ளையரின் கால்களைப் பிடித்துக் கொண்டு, 'ராசா விட்டுரு ராசா.... இந்த காசுக்காக மாசக் கணக்கா நடையா நடந்து ஒடம்பே ஒடஞ்சி போச்சி ராசா, அவருக்கு அப்பறம் இது மட்டுதான்யா இருக்கு, பேரப் புள்ளையெல்லாம் இததான்யா பாத்துட்டு இருக்கு, விட்டுருயா உனக்கு புண்ணியமா போகும்... காசில்லாம போன ஒருவாய் தண்ணிகூட தரமாட்டாலுகயா குடுத்துருயாா..."

என்று அழுது கெஞ்சியும் மனமிரங்காத மிருகமாய் எட்டி உதைத்துவிட்டு பணப்பையை பறித்து கொண்டு போக, பின்னால் வந்த ஒருவன் இவர்களின் பணப்பையை பறிக்கின்றான். கிருஷ்ணனும் வள்ளியும் எவ்வளவு போராடியும் மீட்க முடியவில்லை. கிருஷ்ணனின் கோபம் எல்லை மீறியது. திருடர்களின் முககவசங்களை கிழித்து சண்டையிட ஆரம்பிக்கின்றான். அதற்குள் இன்னும் சில கொள்ளையர்கள் அவ்விடத்திற்கு வந்துவிடுகின்றனர். அவர்களோடு போராடிக் கொள்ள முடியாமல் கீழே சரிகின்றான் கிருஷ்ணன். சரிந்த கிருஷ்ணனைப் பார்த்து பதறிப்போகின்றாள் வள்ளி. கிருஷ்ணனை மார்போடு அணைத்துக் கதறுகின்றாள். புலம்புகின்றாள். அழுகின்றாள். திட்டுகின்றாள்.

ஒன்றிலும் பயனில்லை. அவன் காதுகளிலிருந்து ரத்தம் வெளியேறிக் கொண்டிருக்கின்றது. சற்றுமுன் காதல் மயக்கத்தில் மெய்மறந்து கிடந்தவன். அவள் மடியிலேயே



சொர்க்கத்தையும் சென்றடைந்து விட்டான். அடுத்துவந்த ஸ்டேஷனில் பொலிஸ் அதிகாரிகளின் சுத்தி வளைப்பை அறிந்த திருடர்கள் ரயிலில் இருந்து குதித்து ஓடிவிட்டனர். அதன் பின் பல விசாரணைகள், வழக்குகள் என போய்க் கொண்டிருந்தன. ஆண்டாண்டு காலம் உடன் வருவதாய் வாக்களித்தவனே, உடனில்லாத போது போன பணம், நகை கிடைத்து என்னவாக போகின்றது என்று அவள் அடிக்கடி சொல்வதுண்டு.

காத்திருந்து சுற்றிக்கொண்ட பட்டுப் புடவை, அழுது வீங்கிய முகம், கோபம், அழுகை, ஏமாற்றம், சோகம், விரக்தி என அனைத்தையும் கக்கும் கண்கள், கலைந்து விரிந்த முடி என ஆங்காரியாய் வீட்டின் முன் வந்து நின்றாள். அவளை சமாதானப்படுத்தவோ, ஆறுதல் படுத்தவோ யாராலும் முடியவில்லை. தன் வாழ்க்கையின் நிலை புரியாமல் குழம்பிப் போயிருந்தாள்.

திருமணம் முடிந்து துணையின் கரங்களைப் பற்றி வருவாள் என காத்திருந்த வள்ளியின் குடும்பத்தார் கணவனை இழந்து வந்தவளை எப்படி ஆறுதல்படுத்துவதென்று தெரியாமல் வருந்திப் போயிருந்தனர்.

மெல்லமெல்ல காலம் நகர்கின்றது. அவளை மீட்கும் பணியை காலம் கைக்கு எடுத்துக் கொண்டது. உண்மையில் காலம் சிறந்த மருந்து. ஆறாத காயங்களை ஆற்றும் அருமருந்து. மனக் காயங்களை ஆற்றும் வல்லமை அதற்கு அதிகம். காலம் கடக்கவில்லை என்றால் ஒவ்வொரு மனிதனும் துன்பக் கடலில் மூழ்கியே இறந்து விடுவான்.

ஒருவனுக்குள் இருக்கும் கோபம், பகை, விரக்தி, வெறுப்பு, சோகம் என்பவற்றை மறக்கும், அழிக்கும் சக்தி காலத்திற்கு உண்டு. வள்ளியின் சோகமும் காலத்தால் கரையொதுங்குகின்றது. அவளின் அடுத்த நகர்வை காலம் திட்டமிட்டு அவளின் கைகளுக்கு கடிதமாய் கொண்டுவந்து சேர்கின்றது.

வள்ளியின் முதலாளி வீட்டார் வள்ளியின் நிலையறிந்தும் அவளின் பிரிவை ஏற்க முடியாமலும் அவளை மீண்டும் கொழும்பிற்கு அழைக்கின்றனர். வீட்டோடிருந்து கிருஷ்ணனின் நினைவில் மூழ்கிப் போனவளுக்கு கொழும்பிற்கே சென்று விடலாம் என்ற எண்ணம் முன்பே வந்த போதிலும் எப்படியென்று யோசித்தபடியே இருந்து விட்டாள். கடித அழைப்பு வந்ததும் விரைந்து புறப்பட ஆயத்தமானாள்.

கிருஷ்ணன் அவள் வாழ்க்கையை விட்டுச் சென்றானே தவிர வறுமை செல்லவில்லை. குடும்பத்தை பார்த்துக் கொள்ள வேண்டும் உடன் இழந்த தன்னையும் மீட்டுக் கொள்ள வேண்டும் எனவே பயணமாகின்றாள். இப்பயணம் கிருஷ்ணனை மறக்க அல்ல. அவனை தேடிக் கொள்ளத்தான். தேடிச் செல்ல அமர்ந்த இடத்தில்தான் முதலில் தள்ளுவண்டி முருகனை பார்க்கின்றாள்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருக்க, தாமதமான புகையிரதம் இன்னும் சில நிமிடங்களில் பிளேட்போமை வந்தடையும் என்ற அறிவிப்பு கேட்கின்றது. இனி நகரும் ஒவ்வொரு நொடியும் முருகனுக்கும் வள்ளிக்கும் நிரந்தர பிரிவை ஏற்படுத்திவிடும் என்ற பயம் இருவருக்குள்ளும் தோன்றுகின்றது.

சற்றென வள்ளிக்கு தான் திருமணமாகி வாழ்க்கையை இழந்தவள் என்ற ஞாபகம் வந்தது. மனதிற்கு தாழிட்டு முகத்தை திருப்பிக் கொள்கின்றாள். மனதிற்குள் ஒரு போராட்டம். தனக்குள் ஏற்பட்ட சில நிமிட தடுமாற்றத்தை எண்ணி வருந்துகின்றாள். பிழை செய்தது போல் தன்னையே தனக்குள் திட்டித் தீர்க்கின்றாள். பழிச் சொல்லி வருத்திக் கொள்கின்றாள். உண்மையில் அவளின் உணர்வுகளுக்கு உருவமிருந்திருந்தால் எழுந்து தீக்குளித் திருக்கும். தான் பெரும் தவறிழைத்ததாக வருந்துகின்றாள்.

வள்ளியின் வாடிய முகத்தை பார்த்த முருகன் அருகில் வந்து 'என்னை உனக்கு ஞாபகம் இருக்கின்றதா…?' என்றான். அவன் அருகில் வருவதை உணராது சிந்தனையில் மூழ்கிப் போனவள் அவனின் குரல் கேட்டு திகைத்துப் போனாள்.

சிரித்த முகத்தோடு அருகில் பார்க்கும் போது இன்னும் அழகாய் தெரிந்தான். யார்..? என்று கேட்டும் துணிவிழந்து குரல் தடுமாற, அருகில் அமர்ந்து சிரித்துக் கொண்டே 'உன்னை அனுதினமும் நெஞ்சோடு சுமந்து கொண்டி ருக்கும் சுமையாளி' என்றான். புருவங்கள் உயர்ந்து கண்கள் விரிந்து ஆச்சரியத்தில் மூழ்கிப் போனாள் வள்ளி. 'உன் முருகனை உனக்கு நினை வில்லையா..?' என்றான்.

பல வருடங்களுக்கு முன்பு ஒன்றாய் படித்த வர்கள். வள்ளியின் பக்கத்து ஊர்க்காரன். சிறுவயதிலிருந்தே வள்ளியின் மீது விருப்பம் கொண்டிருந்தவன். அவள் வயதிற்கு வந்ததும் பாடசாலையை இடைநிறுத்தி விட்டாள். தினம் தினம் பார்த்தவளை பார்க்க முடியாமல் தவித் தவன் அப்போதே தன் காதலை சொல்லி விட்டான். ஆனால் வள்ளியோ அவனைக் கண்டு கொண்டதில்லை. பல முறை அவமானப் படுத்தி புறக்கணித்துள்ளாள். பல முயற்சிகளின் பின்பும் 'என்னை விட்டு தள்ளியே இரு' என்று வள்ளி கூறிய ஒற்றை வார்த்தைக்காக தள்ளியிருந்து காத்திருந்தவன்.

வள்ளி அவனை முழுவதுமாகவே மறந்து போய்விட்டாள். வள்ளிக்கு மெல்லமெல்ல ஞாபகம் துளிர ஆரம்பிக்கின்றது. 'முருகா எப்படி இருக்க? நீயா இது நம்பவே முடியல..' என்றாள் வள்ளி.

அவன் சிரித்துக் கொண்டே 'நான் நல்லா இருக்கேன் நீ எப்படி இருக்க' என்றான். வள்ளி சோகம் கலந்த சிரிப்போடு நன்றாக உள்ளேன் என்றாள்.

வள்ளி நான் ஒன்று சொல்லட்டுமா.. என்றான் முருகன்.

சொல்லுங்க என்றாள் வள்ளி.

'நம்ப ரெண்டுபேரும் கல்யாணம் செஞ் சிக்குவம்' என்றான். அதிர்ந்துபோன வள்ளி நான் திருமணமாகி கணவனை இழந்தவள் என்றாள். உடனே முருகன் 'எனக்கு எல்லாமே தெரியும் தெரிஞ்சுதான் கேக்குறே, என்னை பொறுத்தவரைக்கும் உன்னை நான் அதிகமா காதலிக்குறே.. இப்போ மட்டுமில்ல நாளைக்கு நீ இரண்டு குழந்தைகளோட புருஷன் இல்லாம தனியா நின்டாலும் இப்பிடிதான் உனக்கு துணையா வந்து நிப்பேன். நா பேசுறது சரியா? பிழையா? தெரியாது. எனக்கு உன்கூட வாழனும் உன்னை சந்தோஷமா வச்சிக்கனு அவ்ளோதான். உன் வாழ்க்கை முடியல, நான் இருக்கேன் யோசிக்காத…' என்றான்.

'ஊரென்ன சொல்லும் இதெல்லாம் சரிவராது என்னால உங்க வாழ்க்கைய கெடுத்துக்க வேணாம்' என்றாள் வள்ளி.

'ஊர் வாய்க்கு இன்னைக்கு ஒரு சாப் பாடுனா, நாளைக்கு இன்னொரு சாப்பாடு அதுக்காக நம்ப நம்ப வாழ்க்கைய வாழாம இருக்க முடியுமா..? அப்புறமா இன்னொரு விசயம் நான் உன்ன விரும்புனது, உனக்காக காத்திருந்தது, உனக்கு கல்யாணமானது கேள்விப்பட்டு விலகிபோனது, அப்பறம் நடந்த விசயத்தால நீ தனியா கஷ்டப்பட்டது முதற்கொண்டு எல்லாமே நம்ப ரெண்டு வீட்டுக்கும் தெரியும். அதுவும் இல்லாம, அப்படியே வீட்டுக்குள்ள இருந்தா உன்ன பழைய நிலைமைக்கு கொண்டுவர முடியாதுனு உங்க முதலாளி வீட்டுக்கு செய்தி சொல்லி கடிதம் போட்டு வெளிய வர வச்சதும் நான்தான். இந்த உலகத்த பாரு ரொம்ப பெருசு. நம்ப சந்தோசமா வாழலாம்' என்றான் முருகன்.

சொல்வதையெல்லாம் கேட்டு அவன் காதலில் திகைத்து நின்றாள் வள்ளி. 'அவசரம் இல்ல பொறுமையா யோசி, அதுவரைக்கும் நா காத்திட்டு இருப்பேன்' என்று முருகன் சொல்ல, தாமதமான ரயிலும் பிளேட்போமை வந்து சேர்ந்தது.

❍❍❍

# குவாண்டம் (Quantum) இலக்கியத் திறனாய்வு

## - கலை நீட்சியில் புதிய உரையாடல்



பேராசிரியர்
சபா ஜெயராசா

**கு**வாண்டம் இயற்பியல், குவாண்டம் இயங்கியல் ஆகியவற்றை அடியொற்றிக் கலை இலக்கியத் திறனாய்வை முன்னெடுக்கும் அறிவுச் சூழல் மேற்கிளம்பியுள்ளது.

சமூகவியல், மெய்யியல், மொழியியல், கல்வியியல், முதலாம் பல்வேறு அறிவுத் துறைகள் குவாண்டம் அறிவியலோடு உறவாடத் தொடங்கியுள்ளன.

குவாண்டம் அறிவியலும், மார்க்சிய இயங்கியலும் சடவாதத்தை அடிப்படையாகக் கொண்டவை. அணுவில் உள்ளடங்கிய துகள்களின் இயக்கத்தைக் குவாண்டம் அறிவியல் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. சமூக உருவாக்கத்தையும், அதன் தொடர் வளர்ச்சியையும் மார்க்சிய இயங்கியல் ஆய்வுக்கு உட்படுத்தியது.

சிக்கலான கணிதமொழியாலும், சமன்பாடுகளாலும் குவாண்டம் விளக்கப்படுகிறது. அதே வேளை பொதுவாசகருக்கு **அதனை எடுத்தியம்பும் செயற்பாடுகள் உலக மொழிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

அறிவு நிலையிலும், பயன்பாட்டு நிலையிலும் குவாண்டத்தை அங்கீகரித்த ஐக்கிய நாடுகள் அமையம் 2025ஆம் ஆண்டை குவாண்டம் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியது.

இற்றைப் பயன்பாட்டில் உள்ள பல கருவிகளும், சாதனங்களும் உருவாக்கம் செய்த வண்ணமுள்ளது. எழுதிறன் (smart) தொலைபேசி, பட்டைக்குறியீட்டு வருடி, (Barcode scanner) சூரியகலன்கள், புவிக்கோள நிலைகாட்டும் செயற்றொகுதி (GPS), மருத்துவ ஊடுகதிர்ப் பரிசோதனைக் கருவிகள், சமையலறையில் பயன் படுத்தப்படும் வாட்டும்கலம் (TOASTE) முதலிய பல பலகருவிகள் குவாண்டம் அறிவியல் துணையுடன் உருவாக்கப்படுகின்றன.

***"குவாண்டம், எதிர்கால வாழ்க்கையை வடிவமைக்கின்றது"*** என்ற உறுநோக்கு மேலெழுந்துள்ளது.

குவாண்டம் வாழ்வை அடியொற்றிய சிறுகதைகளும், நாவல்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன. **"குவாண்டம் நாவல்"** தனித்த வகைமையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அதனை அடியொற்றி திரைப்படக்கலையும் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது.

குவாண்டம் வாழ்வையும், சிந்தனைகளையும், உள்ளடக்கி அருவ ஓவியப்படைப்புகளும் எழுகோலம் பெறத் தொடங்கியுள்ளன.

அவற்றை அடியொற்றிக் குவாண்டம் கலை இலக்கியத் திறனாய்வு வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது.

குவாண்டம் இயக்கவியலின் அடிப்படைகளில் ஒன்றாக அமைவது ***அறுதியுறாமைக் கொள்கை*** (Uncertainty Principle) அது ***திண்ணமிலா நிலை*** என்றும் குறிப்பிடப்படும்.

ஒரு நுண்ணிய இடப்பகுதியில் துகளின் அமைவிடத்தைச் சரியாகக்கண்டு கொள்வது அதன் உந்தத்தைச் சரியாக அளக்க முடியுமானால் அதன் இடம் ஐயத்துக்கு உரியதாகின்றது. இது அறுதியுறாமைக் கொள்கை பற்றிய புரிதலுக்கான அடிப்படை விளக்கம்.

குவாண்டம் அறிவியலில் இது மிகுந்த சிக்கலான கணிதச் சமன்பாடுகளினால் நிறுவப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் குவாண்டம் ஆய்வாளர்களுள் ஒருவராகிய ***றிச்சாட் பைன்மன்*** (Feynman) கூறிய ஓர் அவதானிப்பைக் குறிப்பிடலாம். "குவாண்டம் இயக்கவியலை விளங்கிவிட்டது என்று கூறினால் அதுவிளங்கவில்லை என்பது பொருளாகும்" நகைச்சுவையாக அது இருந்தாலும், அதில் ஆழ்ந்த பொருள் உண்டு.

இவ்வேளையில் கல்வி பற்றிக் கவிஞர் **பாரதிதாசன்** எழுதிய பாடல்வரி ஒன்று நினைவுக்கு வருகிறது.

**கடிதாய் இருக்கும் இப்போது**
**கற்றிடக் கற்றிடப்புரியும் அப்போது**

எதிர்காலம் குவாண்டம் உலகோடும் சிந்தனையோடும் இணைந்துள்ளமையால், ஒவ்வொரு குவாண்டம் பற்றிச் சிறிதளவேனும் அறிந்து கொள்ளவேண்டியுள்ளது. குவாண்டம் பற்றிய அடிப்படையான அறிவு இல்லாவிடில் அறிவு நிலையில் “காலாவதியான” நிலையை அடையும் சாத்தியம் நிகழலாம்.

மெய்யியலும், சமயவியலிலும் அறுதியுறாமைக் கொள்கை நீண்டகாலமாக இடம்பெற்று வந்துள்ளது. உசாவல்லிருப்பை தூண்டும் என்று கல்வியியலில் அந்தக்கருத்து வடிவம் குறித்துரைக்கப்படுகிறது. இந்திய சமயங்கள் எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற நோக்கைப் பொதுவாகக் கொண்டுள்ளன.

# காலச் சீற்றம்

டிசம்பர் 2025இல்
இலங்கை
இயற்கை அனர்த்தத்தின் பின்

## ஒருபா ஒருபஃது (வெண்பா)

பெருமழையுங் காற்றும் பெருகிவரும் நீரும்
உருக்குலைத்த தென்நாட்டை ஓங்க – அருவுருவின்
சீற்றமோ ஏனி∴தோ தேருவரோ யாரெவரும்
மாற்றுவழி தோற்றா விதி

விதியீ தெனவெண்ணி வாழா திருத்தல்
மதிக்கொவ்வாச் செய்கை முயன்றும் – எதுவொன்றும்
ஆகா நிலையய்யோ அண்மித்த துன்பத்தின்
வேகத்தை வெல்லல் விழல்

விழலென்ப வேண்டா வினையொக்கும் ஈங்கே
அழிமதியை மாற்றவழி அண்டா – பழியை
தொழுதற் குகந்தவனின் சார்பிலுரை செய்தல்
வழுவெம்மின் பாலும் உள

உள்ளன வாகும் உரைசெய்யக் கானழிப்பும்
வெள்ளத்தை ஆழிவசம் வந்தடையக் – கொள்ளும்
மனுமுயற்சி செய்யாமை வேண்டா மறிப்புப்
புனையுகின்ற வீடமைப்புந் தான்

வீடமைக்க வென்றே வரிக்கின்ற கட்டடங்கள்
கேடாம் வடிகாலைச் சீரழிக்கும் – ஓட
வழியற்ற நீரும் ஒருமித்தே தேங்கி
வழியுமே வெள்ளமெனத் தான்

வெள்ளம் குடிபதிக்குள் விஞ்சிக் குடிசேரின்
உள்ளதெல்லாம் போகும் உயிர்துடிக்கும் – பள்ளத்தில்
பாயுவது நீரின் புனற்பண்பு மாறாதே
வாய்த்தவழி தேடும் வரம்

வரங்கொண்ட வாறே வளியும் மழையும்
பொருந்திவருங் காலப் பொழிவு – மருவும்
இயற்கைக்கு மாறான ஏத்தனிப்பால் தப்பும்
செயற்கையின் சீர்கேட் டினால்

செயற்கை மழைப்பொழிவு தோற்றும் அதீத
இயற்கைக்கு மாறான நீரைப் – பயனற்றுப்
போவதெலாங் கூடிப் பெருவெள்ள மாகுமதே
காவுகொள வைக்கும் உயிர்

உயிர்க்காப்பு வேண்டின் உடன்படுதல் வேண்டும்
இயற்கையொடு சங்கமித்த லாகும் – செயற்பாட்டின்
தப்பேதான் காரணமாம் காடழித்தல் மண்சரிவும்
கப்புதல் வேண்டாச் சுமை

வேண்டாச் சுமைகள் வந்தெய்தும் காரணத்தை
ஈண்டு கவியில் எடுத்துரைத்தேன் – வேண்டும்
அரசுடனே ஆன்றோரும் ஆய்ந்தறிந்தே தீங்கைச்
சரிசெய்யின் அ∴துபெரி தே

**– காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**

கருத்துநிலையில் இருந்த அறுதியுறாமைக்கு ***பரிசோதனை நிலையில் அங்கீகாரத்தை குவாண்டம் விஞ்ஞானிகள் வழங்கினர்.***

எதிர்காலம் நிச்சயமற்ற நோக்கு கலை இலக்கியங்களில் பரவலாக எடுத்தாளப் பட்டுள்ளது. ஒரு வகையில் அபத்த அரங்கிலும் *(Absurd Theatre)* அதன் செல்வாக்கு உண்டு.

அறியுறாமை கலை இலக்கியங்களிலும், திறனாய்விலும் நீடித்து ஊடுருவும் கருத்து வடிவமாகின்றது. பனுவலின் கருத்து நிலையானது அன்று என்பது திறனாய்வில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நடப்பியலை வெளிப் படுத்தும் உபாயங்களுள் ஒன்றாக அது முன் வைக்கப்படுகிறது. இலக்கியப் பனுவல் பன்மைப் பொருள் கோடலுக்கும் வாசிப்புக்கும் உள்ளாக் கப்படுதலை அது உருவாக்குகின்றது.

குவாண்டம் அறிவியலின் அடிப்படைகளுள் ஒன்றாக அமைவது ***துகள்–அலை என்ற இருமை நிலை*** அதாவது, அணுவின் துணைப் பாகம் துகளாகவும் இருக்கிறது. அலையாகவும் இருக்கிறது. துகளின் நடத்தை புதிதலுக்கு உள்ளாக்கப்படுகிறது. பரிசோதனைகளின் அடிப் படையில் அந்த முடிவு கிடைக்கப் பெற்றது.

ஒரே பொருள் இருபாணங்களில் இருத்தல் என்ற கருத்துவடிவம் இந்து சமயத்தில் அருவமும் உருவமும் கொண்ட சிவலிங்க தத்துவத்தில் விளக்கப்படுகிறது. கிறீஸ்தவத்தில் பிதா, சுதன் என்ற மனித வடிவிலும் பரிசுத்த ஆவி என்ற அருவ வடிவிலும் விளக்கப்படுகிறது. இவ்வாறான ஒப்புமை சமயத்தையும் அறிவியலையும் தவறுபடுத்தாது இருத்தல் வேண்டும்.

கலை இலக்கியத் திறனாய்விலும் அக் கருத்து விளக்கப்படுகிறது. இலக்கியத்தில் மொழிக்கட்டமைப்பு உருவ வடிவிலும், அதன் வழியாக மேற்கிளம்பும் உணர்ச்சித்தூண்டல் அலையாகவும் அமைகின்றது.

பரத நாட்டியத்தில் இடம்பெறும் நிருத்தம் என்பது உணர்ச்சியைக் கையளிக்காத தூய ஆடல் என்று அடையாளப்படுத்தலை, ஆடல் தொடர்பாக ஆராயும் உலக ஆய்வாளர் ஏற்றுக் கொள்வதில்லை. அசைவுகள் உணர்ச்சியோடும் மனவெழுச்சியோடும் தொடர்புபட்டு நிற்பதை மனவெழுச்சி உளவியலும் வெளிப்படுத்து கின்றது.

அணிநடை என்ற இராணுவச் செயற்பாடு, உடலசைவை மட்டும் கொண்டதன்று. அது வன்னெழுகை *(Aggressive)* மனவெழுச்சியுடன் தொடர்புட்டு நிற்கும்.

முழுமையாக விளக்க முடியாத கலை அளிக்கையை விளக்குவதற்கு துகள்-அலை என்ற குவாண்டம் இருமைநிலை துணை செய்த வண்ணமுள்ளது.

இலக்கியங்களைத் திறனாய்வு செய்கையில் உருவம், உள்ளடக்கம் ஆகியவற்றைத் தனித் தனியாக நோக்கல் இன்று ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. உருவம் என்பது கருத்தும் உணர்ச்சியும் கலந்த ஒரே வடிவமாக நிற்றல் என்பது குவாண்டம் சிந்தனையுடன் ஒப்புமை கொள்கின்றது.

குவாண்டம் அறிவியலின் பிறிதொரு கண்டுபிடிப்பாக அமைவது **குவாண்டம் பின்னல்** *(Entanglement)*, இரண்டு துகளின் குவாண்டம் நிலைகள், ஒன்றை சார்ந்து நிற்கும் நிலையில் இது நிகழும். ஒரு துகளின் நிலையைப் பொறுத்தே மற்றைய நிலையை இயம்பும்படி அவை தோன்றியோ அல்லது இடைவினை கொண்டோ இருக்கும். சிக்கலான கணித மொழியில், விஞ்ஞானிகளால் அது விளக்கப்படுகிறது.

பல்வேறு புதிய சாதனங்களை உருவாக்குவதற்கு அந்த ஆய்வு வழிவகுத்துள்ளது,

முன்னர் ''இயலாது'' என்று கருதப்பட்ட தரவுப் பதிவுகளோடு உறவாடுவதற்கு அது வழிவகை செய்துள்ளது. குவாண்டம் கணினிகள் அந்தச் செயற்பாட்டை நிறைவேற்றித் தருகின்றன. மிகுந்த முன்னேற்றகரமான உணரிகள் அதன் அறிவுப் பிரயோக நிலையில் உருவாக்கப் படுகின்றன.

உயிரியல், தொடர்பாடவியல், மேலாண்மையியல், மருத்துவ இயல் முதலிய துறைகள் மட்டுமன்றி கலையாக்கங்களிலும் நாவல்களிலும் அதன் பயன்பாடு வளர்ச்சி கொண்டு வருகிறது. படிமங்கள், குறியீடுகள் பற்றிய விளக்கத்தினை மேலும் துல்லியமாக்குவதற்கும் அது துணை செய்கின்றது.

மிகுந்த ஆழமும் சிக்கலும் கொண்ட ஓவியப் படைப்புகள் அதன்வழியாக உருவாக் கப்படுகின்றன. காலம், வெளிமை கடந்து பாத்திரங் களிடையே மர்மமான தொடர்புகளையும் காட்சி களையும் உருவாக்குதல் குவாண்டம் கலைப் படைப்புக்களில் முன்னெடுக்கப்படுகிறது.

ஆக்க வெளிப்பாட்டின் எல்லைகளை குவாண்டம் சிக்கல் அணுகுமுறை தகர்ந்து விடுகின்றது. கதையுரைக்கும் முறைமையும் பாத்திரப் படைப்புக்களும், முன்னைய எல்லைகளை மீறிச் செல்லல் குவாண்டம் இலக்கியப் படைப்புக்களில் இடம் பெறுகின்றன.

குவாண்டம் பின்னல் நுட்பங்களை இசை இசையுடன் இணைத்து உருவாக்கப்பட்ட ***"குவாண்டம் பின்னலின் ஓசை"*** *(The sound of Entanglement)* என்ற காண்பியங்களோடு இணைந்த இசை நிகழ்ச்சி முற்றிலும் புதிய அளிக்கையாகக் கருதப்படுகிறது. *(E.D.Rodriguez, 2025)*

கலைஞர்கள் குவாண்டம் பின்னலை அறிந்திருக்கவேண்டிய தேவை வலியுறுத்தப் படுகிறது. இசையின் புதிய வளர்ச்சி குவாண்டம் அறிவியலோடு தொடர்புபட்டு நிற்கின்றது.

குவாண்டம் அறிவியல் தரும் பிறிதொரு முக்கியமான கண்டுபிடிப்பு குவாண்டம் ***மீநிலையம்*** *(Super position)* இது குவாண்டம் நேரடுக்கு என்றும் குறிப்பிடப்படும். அதாவது, துணை அணுத்துகள் ஒரேவேளையில் பல நிலைவரங்களைக் கொண்டதாக இருத்தல் கண்டறியப்பட்டுள்ளது. அது நேரம் பற்றிய அறிதலிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. குவாண்டம் ஆய்வை அடியொற்றி உருவாக்கப்படும் கணினிகள் மரபு வழிக் கணினிகளைக் காட்டிலும் அதிவிரைவாகவும் வினையாற்றலுடனும் செயற்படவல்லன.

அந்தத் தத்துவத்தை அடியொற்றி உருவாக்கப்படும் மாதிரி வடிவங்கள் கற்றலுக்கும் புதியவற்றை அறிந்து கொள்வதற்கும் உன்னதமான துணைகளாகின்றன.

பாவனை உருவங்களை *(Simulation)* உன்னத நிலையில் உருவாக்குதல் பொறியியல், கல்வியியல், மருத்துவ இயல், முதலாம் பல்வேறு துறைகளில் அறிதலை வளர்த்துக் கொள்வதற்கு வழியமைக்கும். புதிய கலைவடிவங்களையும், கதைக்கோப்புகளையும், ஓவியங்களையும் திரைப்பட நுட்பங்களையும் உருவாக்கிக் கொள்வதற்கு குவாண்டம் மீநிலையவிதியும் அறிவும் துணை செய்கின்றன.

சிக்கலினூடே அழகைப் பெருக்குதல் என்ற கருத்து குவாண்டம் பின்னனூடாக மேலும் உச்சம் பெறுகிறது. அறிகை உளவியலில் அறிகைச் சிக்கல் நிலையின் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்படுகின்றது. அறிவின் உன்னத வளர்ச்சியை சிக்கல்நிலை மேலும் முன்னோக்கி நகர்த்தி வருதலை ***அறிகைச்சிக்கல் அமைப்பெழுகை*** *(Cogno-complex formation)* என்ற கருத்து வடிவம் விளக்குகின்றது.

காவியங்களும், பெரு நாவல்களும், அருவ ஓவியங்களும் சிக்கலை உள்ளடக்கிய வடிவங்களே. குவாண்டம் ஓவியங்கள் சிக்கலை உள்ளடக்கிய சுவையைக் கையளிக்கின்றன.

அளவு ஆய்வுகள் *(Quantitative Research)* பண்பு ஆய்வுகள் *(Qualitative Research)* ஆகிய இரண்டையும் திறனாய்வுக் களத்தில் மேலும் முன்னெடுக்க வலிமையான தளத்தை குவாண்டம் அறிவியல் தந்துள்ளது.

கோடிக்கணக்கான தகவல்களையும் தரவுகளையும் சேர்த்துக்குவித்துப் பகுத்து ஆய்வுகளை மேற்கொள்ள முடியாத இடர் நிலையிலே தான் எழுந்தோற்ற *(Random)* மாதிரிகளை அடிப்படையாக வைத்து முடிவுகள் விளக்கப் படுகின்றன.

அந்தப் பிரச்சினையை குவாண்டம் அறிவியலும் குவாண்டம் கணினியும் தீர்த்து வைக்கின்றது.

பண்பு நிலையிலும் திறனாய்வை மேற்கொள்ள, குவாண்டம் அறிவியல் ஆற்றுப் படுத்துகின்றது.

குவாண்டம் முன்வைத்துள்ள அறுதியுறாமைத் தத்துவத்தை அடியொற்றி மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வை, எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்.

***சேக்ஸ்பியரு***டைய ஹம்லெட் பாத்திரத்தையும், துன்பியல் விளைவுகளையும் ஒன்றிணைத்து ***ரவி பிரசாத்*** என்பாரும் ***புருசோத் குமார்*** என்பாரும் *(2024)* இணைந்து ஆய்வு செய்துள்ளனர்.

அதனைப் படிக்கும்பொழுது, சிலப்பதிகாரக் கோவலன் பாத்திரத்தை அந்த அடிப்படையில் திறனாய்வு செய்யலாம் போன்று தோன்றுகின்றது.

திறனாய்வுக் கலையில் குவாண்டம் புதிய எழுகோலங்களை உருவாக்கத் தொடங்கியுள்ளது.

❍❍❍

# குவேனி

தீவின் முதல் பெண் அரசியும்
வனர் தலைவியுமான
அவளோ...
அரசை ஏமாற்றிக் காவுகொண்ட
விஜயரைப் பழித்தாள்!
பதியைத் துறந்தாள்...

விழிகளில் தீ சுமந்த
அவளது மரவுரி ஆடையில்
தீப் புகை எழுந்தது...!

அவளோ...
ஒரு கண்ணீர்த் துளியை
அதிலே பெய்தவாறே கதறினாள்...!

அதுவோ...
வானை முட்டியிடித்து
சூரியனைக் கழற்றி
கீழே கொண்டு வந்தது!

மானகந்தானீர் ஊற்றில்
தனது கூந்தலை விரித்தாள்...
அதுவோ நீண்டு
வடக்கிருத்தலானது...!

நொந்து நொந்து
நொந்தவாறே
தொலையத் தொடங்கினாள்...!

நீரோர் பெருவளையமாய்ச்
சுழன்று மேலெழுமாறு
தன் கூந்தலைக்
கோபத்துடன் இழுத்தாள்...

கையெட்டிய அதனையோ
இறுக இழுத்துப் பிசைந்து நீட்டி...
வாரிச் சுருட்டி...
நான்காய்ப் பிய்த்தாள்...!

மேகம் இடித்து முழங்கியது!
வானக் கற்களோ
கீழே விழுந்தன!
பாறைகள் நொருங்கின!

கை தாங்கிய
கூந்தல் துண்டுகளை
நான்கு திசைகளிலும் வீசினாள்...!
கடல் வரண்டது!

“அறமில்லா அரசுக்கு
கூந்தலே பரிசு“
எனக் கூவினாள்...

தீ பரந்தது...
நீர் படர்ந்தது...
வளி அலைந்தது...
வெளி உலைந்தது...
நிலம் இருண்டது...

தீவே அவளின்
அவலக் கூவலாய்...

கூவியது...!
கூவிக்கொண்டே
இருக்கிறது...!

*செ. சுதர்சன்*

**வெ**ற்றியைவிட தோல்விக்குத்தான் அதிக பலம் என்று எண்ணுகின்றாள் ராஜி. அவளின் வெற்றிகள் சில, அவளைக் கலகலத்துச் சிரித்து மகிழவைத்தது என்பது உண்மைதான் ஆனால் அவளுக்கு ஏற்பட்ட தோல்விகளும், அவமானங்களும்தான் அவளைச் சிந்தித்து வாழ வைத்தது. மனம் ஒன்றுதான் அவளை வீழ்த்தக்கூடிய ஆயுதம் என்பதை உணர்ந்தாள் ராஜி, ஆனால் அந்த மனம் ராஜிக்கு மிகுந்த தெளிவைக் கொடுத்தது. அதனால் ராஜியை எவராலும் வீழ்த்த முடியவில்லை. 'வீழ்வே னென்று நினைத்தாயோ...' நெஞ்சுக்கு உரம் போட்ட பாரதியை நினைத்து வணங்கினாள் ராஜி.

லண்டனில் இடம்பெற்ற கலை நிகழ்ச் சிக்காக ராஜியை அவளின் நீண்டநாள் நண்பி விஜயா அழைத்திருந்தாள். லண்டனில் வெளிச்சம் காட்டிப் பூத்துக் குலுங்கியது அன்றைய அழகிய காலநிலை. கலையும் இலக்கியமும் அவளை ரம்மியப்படுத்தும் விடயம் என்ற வகையில் விஜயாவின் கலை நிகழ்ச்சியைப் பார்க்க வேண்டும் என்ற ஒரு ஆவல் ராஜிக்கு உதயமாகி விட்டது. நடனம், இசை, சங்கீதம், பாடல் என்பதெல்லாம் பிரிக்க முடியாத ஒன்றுதானே! ஒவ்வொரு மனிதனும் இப்போ மகிழ்ச்சியைத் தேடித்தான் அலைந்து கொண்டிருக்கின்றான். ஒவ்வொரு மனிதனிற்குள்ளும் ஒரு சங்கீதம் இசைத்துக் கொண்டுதான் இருக்கின்றது. அதை நாம் விட்டுவிடக் கூடாதென்பதும் ராஜியின் வைராக்கியம்.

நண்பி விஜயா திடீரென தொலைபேசியில் அழைத்தாள்: 'ராஜி நீங்களும் குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைக்க வேண்டும் ஆகையால் குறித்த நேரத்திற்கு வாருங்கள், அழகாக உடுத்திக் கொண்டு வாருங்கள்' என்றாள்.

என்ன விஜயா நான் என்ன நாட்டியமா செய்யப்போகிறேன்? ஒரு பட்டுச் சேலையை அழகாக உடுத்தினால் போச்சுது என்றவாறு சிரித்துக் கொண்டாள்.

கலாச்சாரம் என்று நீங்கள் எதைக் கருதுகிறீர்களோ தெரியவில்லை. இவ்வளவு காலமும் எமது கலை கலாச்சாரம் பண்பாடு என்று பேணிப் புகழ்ந்து வந்த கிருத்தியங்கள் எல்லாம் இன்றைய நவீன காலத்தில் எல்லாம் செல்லாக் காசாகிவிட்டன என்று எண்ணி ராஜி தன்னுள் பேசிக் கொண்டாள்.

நாகரீகம் இப்போ தலைவிரித்தாடுகின்ற காலகட்டத்தில் இருக்கிறோம். ஒவ்வொருவரும் தங்களை மகிழ்விப்பதற்காகத் தங்களுக்குத் தாங்களே 'மவுசு' தேடுவதற்காகத் தாங்களே உருவாக்கும் கலை முயற்சிகளாகவே ராஜிக் குத் தென்படுகின்றது. நாம் பிறந்து வளர்ந்த கிராமம், எமது தமிழ்மொழி எல்லாவற்றையும் மறைத்து, மறந்து, லண்டனில் ஏதோ ஆங்கில மொழியோடுதான் பிறந்து தவண்டது மாதிரி யெல்லோ நடிக்கினம் சிலர்.

லண்டனில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும் மண்டபத்தில் குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்கள் நெருங்கிக் கொண்டிருந்தன. ராஜி இதற்கு முன்பும் நாட்டியம், கர்நாடக இசை, வாத்திய இசை போன்ற பல கலைநிகழ்ச்சிகளுக்கான அழைப்பின் பேரில் அம்மண்டபத்திற்கு சென்



றிருக்கிறாள். அம்மண்டபத்தில் இந்தியக் கலைஞர்களின் சிறந்த நிகழ்ச்சிகள் அதிகமாக இடம்பெறுவதுண்டு. அப்போதெல்லாம்கூட ராஜியும் அழைக்கப்பட்டு நிகழ்ச்சிகளின்போது முன்வரிசையில் அவளுக்கும் ஏதோ இருப் பிடம் அமைந்து விடுவதுண்டு.

இன்றும் ராஜிக்கு முன்வரிசையில்தான் இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது. அவளது இரு புறமும் இரண்டு புதிய முகங்கள்தான் அமர்ந் திருந்தனர். கலை இலக்கியத்தில் ஆளுமை கொண்டவர்களாக நிச்சயம் இருப்பார்கள் என ராஜி எண்ணிக்கொண்டாள். ராஜியோ அத்தகைய புதிய முகங்களைச் சந்திப்பதில் தான் ராஜி மிகுந்த ஆர்வம் கொண்டவள். ராஜிக்கு வலப்புறத்தில் இருந்த பெண் அழகான புன்னகையை ராஜி மீது வீசியெறிந்திருந்தாள். இடது பக்கமாக இருந்தவரையும் திரும்பிப் பார்த்தாள் ராஜி. அப்பெண்ணிற்கும் சம்பிரதா யத்திற்கு என்றாலும் வணக்கம் சொல்லிப் புன்னகைக்கலாமென ராஜி முயற்சித்தாள். ஆனால் அந்தப் பெண்ணோ ராஜியை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. கம்பீரமாக வெறும் மேடையை ஏதோ ஆய்வுக்கு உட்படுத்துவது போல் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணிடம் குறிப்பிட்டுக் கூறக் கூடிய புறத்தோற்றம் எதுவும் ராஜிக்குத் தென்பட வில்லை. சாதாரணமான ஒரு பெண் மாதுதான்.

ராஜியோ இடையில் இருந்து நெளி யும்போதே நிகழ்ச்சி ஆரம்பமாகும் அறிவிப்பு ஆங்கிலத்தில் தொடங்கிவிட்டது. தமிழ்க் கலை கலாச்சாரத்தை அடுத்த சந்ததிக்கு வளர்க்க வேண்டும்! அதனை மனதில் இருந்தித் தானே கலை நிகழ்வுகளைச் செய்கின்றோம் என்கின்றார்கள். ஆனால் ஈராயிரம் வருடங் கள் பாரம்பரியத்தைக் கொண்ட தமிழ்மொழி மட்டுமல்ல, மிகச்சிறந்த இலக்கியங்களைப் படைத்து உலகமே வியந்து கொண்டாடும் தமிழ் மொழியையே உச்சரிக்காமல் ஆங்கில மொழியில்மட்டும் பேசி அழகு காட்டுகின்றார் களே! என்று ராஜிக்கு மனதில் ஒரு ஆதங்கம். ராஜியும் லண்டனில் இடம்பெற்ற பல தமிழ்க் கலை கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு அறிவிப்புகள் செய்திருக்கின்றாள்தானே! எல்லோரும் எவ்வளவு சந்தோஷப்பட்டிருக்கிறார்கள் - உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள் என்று அவள் மகிழ்ந்துகொள்வதுண்டு.

ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்கள் அந்தந்த நாடுகளில் வாழும் மக்கள் அந்நாட்டு மொழிகளிலும் நிச்சயமாக அறிவிப்புகளை செய்யவேண்டும். இது வரவேற்கப்படவேண்டிய விடயம். ஆனால் எமது தாய் மொழியான தமிழ் மொழியை முதன்மைப்படுத்தாமல், விலக்கு வதுதான் ராஜிக்கு கவலையைக் கொடுத்தது. பல மொழிகள் பேசுபவர்கள் நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கும்போது பொது மொழியான ஆங்கிலத்தையும் அங்கு நடமாட விடுவதும் முக்கியமான விடயம்தான். இருந்தும் லண்டனில் எமது தமிழ் மொழியை கலை நிகழ்வுகளில் உச்சரிக்காமல் முற்றிலும் மட்டமாக்குவதுதான் இப்போ கொஞ்சம் ராஜிக்கு வேதனையாக இருக்கிறது. ஆனால் அந்நிகழ்ச்சியில் பங்கு பற்றிய இளம் கலைஞர்கள் பலர் ஆர்வத்துடன் தமிழை அழகாகப் பேசுவதையும், அந்த மொழி யின் மேன்மையை உணர்ந்து கொள்வதையும் ராஜி அவதானிக்காமலில்லை.

அழகிய இசை நடனங்கள் பார்வையாளர் களை அங்கு கட்டிப்போட்டது என்றால் அது மிகையாகாது. இன்றைய காலகட்டத்தில் பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியில் இளம் கலைஞர்கள் தமது ஆளுமைகளை இப்படி யெல்லாம் முன்வந்து வெளிக்காட்டுவது சிறப்பான விடயம் என ராஜி தன்னுள் மகிழ் வுற்றாள். துறைபோன கலைஞர்களின் கௌர விப்புகள், பரிசளிப்புகள் என வழமையான நிகழ்வுகள் அனைத்தும் ஒரு நிமிடமாவது தொய்வின்றி ஒழுங்கமைப்புடன் நகர்ந்ததை ராஜி லண்டனில் இதுவரை பார்த்ததில்லை. அத்துணை பிரமாதமான ஒழுங்கமைப்பு.

இளம் யுவதி ஒருவரின் நாட்டியம் மேடை முழுவதையும் தனதாக்கி ஆடிய விதம் ராஜியை மட்டுமல்ல மண்டபத்திலுள்ள கலை ரசிகர்கள் அனைவரையுமே ஆனந்தத்தில் மூழ்கடித்தது. கைதட்டி ஆரவாரம் செய்தனர். அவள் லண்டனில் ஒரு வைத்தியராகப் பணி புரிவதாகவும் அறிவிப்புச் செய்தார்கள். ராஜியும் தன்னை மறந்து ரசித்தாள். கரகோஷம் செய்வ திலும், அவள் முன்னிலையில்தான் நின்றாள்.

ராஜியின் மகிழ்ச்சியை அவளுக்கு வலப் புறத்தில் இருந்தவர் மிகவும் அவதானித் திருந்தார் போல் தெரிகிறது...

ஆச்சரியம் என்னவென்றால் வலப்புறத்தில் இருந்தவரோ நாட்டியம் ஆடிய அந்த இளம்



பெண் எனது மகள்தான் என்றார். அந்த நிமிடத்தில்தான் அவர்களின் உறவு தெரிய வந்தது ராஜிக்கு.

'இவர் எனது அன்பு மகள். அவள் ஒரு வைத்தியராகப் பணிபுரிகின்றார். இரவு வேலைக்குச் சென்றுவிட்டு வந்துதான் நாட்டியப் பயிற்சிகளை மேற்கொள்கின்றவள், அவளுக்கு நாட்டியத்தில் அளவுகடந்த ஆர்வம்' என்றார் வலப்புறத்தில் இருந்தவர்..

ஓ.. அப்படியா உங்கள் மகளா? மிகவும் கச்சிதமாக பாவங்களை லயத்தோடு வெளிப் படுத்தியிருந்தார். 'வாழ்த்துக்கள்' அவளுக்கு. அத்தோடு இந்த நாட்டியக் கலையை மேலும் அவள் தொடர வேண்டும் என்றாள் ராஜி. வைத்தியத் தொழில் எவ்வளவு தூரம் கடினமான தொழில் என்பதை நான் அறிவேன். எனது சகோதரியின் மகளும் வைத்தியத்தொழில்தான் புரிகிறாள். அவர்களுடைய உலகம் வித்தியா சமானது என்றாள் ராஜி. அடுத்த நிகழ்ச்சிக்கான அறிவிப்பு தொடர்கின்றது.

ஆனால் ராஜிக்கு இடது பக்கத்தில் இருந்தவரோ ராஜியைத் தாவி வலது புறத்தில் இருந்தவருக்கு 'நன்றாக பாவங்களை வெளிப் பாட்டோடு ஆடினார்தான். ஆனால் அவள் இத்தகைய நாட்டியத்திற்கான உடையை கொஞ்சம் மாற்றியிருக்கலாம். அவர் அணிந்த உடை அவருக்கு இந்த நாட்டியத்திற்குப் பொருத்தமற்றது' என்றார்.

நடுவில் இருந்த ராஜிக்கோ தூக்கி வாரிப்போட்டது. என்ன இந்தப் பொம்பிளை! கருத்துகள் பரிமாறும் நேரமா இது? ஒரு இங்கிதம் இல்லாமல் பேசுகின்றாரே! எல்லோரும் மகிழ்ந்திருக்கும் வேளை அந்தத் தாய்க்கு இப்படிக் கூறுகின்றாரே என்று தன்னுள் எண்ணிக் கொண்டாள் ராஜி..

இடைவேளையின்போது ராஜியின் வலது பக்கத்தில் இருந்தவரின் சம்பாஷணை மீண்டும் ராஜியுடன் தொடங்கியது. தனது உறவினர் ஒருவர் சிறந்த நாட்டியத் தாரகையாகத் திகழ்ந்தவர் என்றார். அவருடைய நாட்டிய ஆளுமைகள் குறித்த உந்துதல்கள்தான் இவளுக்கும் இந்த நாட்டியக்கலையில் மிகுந்த பிடிப்பை ஏற்படுத்தியது என்றார்.

நல்ல விடயமாச்சே! ஒருவர் இக்கலைக்கு உந்துதலாக இருப்பதோ அல்லது ஒரு ரோல் மொடலாக இருப்பதோ என்பது பெரிய விடயம் தெரியுமா? யார் அந்த நாட்டியக் கலைஞர் என்று ஆவலுடன் கேட்டாள் ராஜி. அவர் லண்டனில்தான் இருக்கின்றாரா?

லண்டனில்தான் வாழ்கின்றார். அவர் கண்டியில் வாழ்ந்தபோது சிறந்த நாட்டிகைத் தாரகையாகத் திகழ்ந்தவர் என்ற தகவல்கள் ராஜியை பிரமிக்க வைத்தது.

ஓ... அப்படியா எனது தந்தையும் கண்டியில் அரசாங்க உத்தியோகத்தில் பணியாற்றிக் கொண்டு இருந்தவேளை, நாமும் அந்த

அழகிய மலைப் பிரதேசமான கண்டியில் சிறிது காலம் வாழ்ந்திருக்கின்றோம் என்றாள் ராஜி.

கலைஞர்களைத் தெரிந்துகொள்வதில் ஆர்வமுள்ளவர் ராஜி.

யார் அவர்? அவரின் பெயர் என்ன?

இந்திராம்பிகை.

அவர் உங்களுடைய உறவினரா?

ஓம். அவர் எனது மைத்துனி முறையானவர்.

நல்ல ஒரு செய்தியாச்சே! அவரா? அவரை எனக்கு நன்றாகத் தெரியுமே! அவர் பரத நாட்டியம் மட்டுமன்று குச்சுப்பிடியிலும் ஆளுமை மிக்கவர். கண்டி 'சைவ மகாசபையில் நடன ஆசிரியையாக இருந்தவர். அவர்தானே!

'ஓம்...ஓம் அவரேதான்' என்றார் வலப் புறத்தில் இருந்த பெண்.

அவர் பல நாடுகளுக்கெல்லாம் சென்று தனது நாட்டியத் திறமைகளை வெளிப்படுத்தி வந்தவர். அவர் சோவியத் ரஷ்யாவிற்கும் சென்று நாட்டிய நாடகம் வழங்கியதை எனது தந்தை கூறியிருக்கிறார். கண்டியில் அவரது வீட்டிற்கு எனது தந்தையுடன் நான் சிறுபராயத்தில் சென்றிருக்கிறேன். அவரது திருமண வைபவத்திற்கெல்லாம் எனது தந்தை சென்றிருந்ததாகக் கூறுவார். அவரது துணைவர் எனது தந்தையின் நெருங்கிய நண்பர்.

இந்திராம்பிகையின் துணைவர் ராஜியின் தந்தையோடு கொள்கை ரீதியிலும் மிக நெருங்கிய நண்பர் என்பதை அந்தச் சம்பாஷணையின் போது அவர்களுக்குள் மேலும் நெருக்கத்தை ஏற்படுத்தியது.

'இந்திராம்பிகை லண்டனிலும் நாட்டியத் துறையில் மிகவும் புகழ்பெற்றுத் திகழ்கின்றவர். பல நாட்டியப் பட்டறைகளை நடாத்தியவர். அவரிடம் எல்லோரும் விரும்பிச் சென்று நாட்டியம் பயில்வதை நான் அவதானித்து வருகின்றேன்' என்றாள் ராஜி.

விதம்விதமான நடனங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன.

வலதுபுறத்தில் இருந்தவர் இடையில் மிக ஆர்வமாக ராஜியுடன் தனது கருத்துக்களை பரிமாறிக் கொண்டிருந்தார். ரசிகர்கள் ஆரவாரித் தமையைக் கண்டு தனது மகளின் நாட்டியத்தில் மிகுந்த மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கிறார்போல என ராஜிக்குத் தோன்றியது. ஒரு தாய்க்கு இருக்காதா? என்ன?

'உங்களுக்கு எனது மகள் போட்ட நாட்டிய உடை பிடித்திருந்ததா?' என்று தாழ்ந்த குரலில் கேட்டார் ராஜியிடம்.

எனக்கு நன்றாகவே பிடித்திருந்தது. அவரின் அத்தகைய நாட்டிய நடனத்திற்கு அதாவது நீண்ட காலமாக உருவாக்கப்பட்ட முறைகளின் அடிப்படையில் அந்த வேகமான ஆட்டத்திற்கு *(Semi- classical)*, அப்படியான உடைதான் மிகவும் பொருத்தமானது என்றாள் ராஜி. உடல் அழகும் நன்றாகவே அமைந் திருந்தது. பாவங்களை அற்புதமாக வெளிப் படுத்தியிருந்தார். தானும் லண்டனில் பல நடனங்களைப் பார்த்திருக்கிறேன், நாட்டியத் துறையில் நானும் சிறு பயிற்சிகளை மேற் கொண்டிருக்கிறேன். நாட்டிய நிகழ்ச்சிகளுக்கு மேடை அறிவிப்புகளும் செய்திருக்கின்றேன் என்றாள் ராஜி. ஆனால் உண்மையில் உணர்ச்சி களை அழகாகச் சித்தரிப்பதிலும், வெளியை மாறி மாறி சுருக்கவும் விரிவடையவும் செய்யும் அந்தக் கலையின் மாயத்தை உங்கள் மகள் வியாபித்துக் காட்டியிருந்தார் அதுதான் அந்த நாட்டியத்துக்கு முக்கியத்துவம் என்றாள் ராஜி.

அடுத்ததாக லண்டனில் வாழும் 'லண்டன் பெண்' ஒருவருக்கும், அவரது துணைவர் 'கதகளி கலைஞர் நடிகர்' இருவருக்கும் விருது வழங்க இருப்பதாக அறிவித்தபோது ஆச்சரியத் துடன் அவதானித்தாள் ராஜி.

அந்தப் பெண்மணி ஒரு கதகளி நாட்டி யத்தின் ஓவியக் கலைஞர். கேரளாவில் தேசியக் கலையாக கொண்டாடப்படும் கதகளி என்ற நாட்டிய நாடகம் பற்றி ராஜி அறிந்திருந்தாள். எமது நாட்டுக் கூத்துக் கலையோடும் அதனை பலதடவைகளில் ஒப்பிட்டுப் பார்த்திருக் கின்றாள் ராஜி.

ராஜியின் தந்தை கண்டியில் பணிபுரிந்த வேளை, அங்கு நடைபெறும் கண்டிப் பெரஹ ராவைப் பார்த்த நினைவுகள் ராஜியைச் சுற்றிக் கொண்டது. அவ்வேளை இடம்பெறும் கண்டியன் நடனத்தையும் கதகளியுடன் ஒப்பிட்டுப் பார்த்தாள் ராஜி. அத்தகைய நாட்டியங் களுக்கும் வித்தியாசமாகத்தான் சோடினை போடுவார்கள்.

பிரித்தானியப் பெண்ணாக இருந்தும் கதகளி நாட்டியங்களுக்கான ஓவியக் கலையை அவள் கேரளாவிற்குச் சென்று படித்துப் பட்டமும் பெற்றிருக்கிறாளே! உண்மையில்

அந்த நாடகங்களுக்கு பல்வேறு வகையான முகங்களை சித்திரிப்பார்கள். இயக்கம், இசை மற்றும் செயல்திறன் மூலம் வண்ணத்தில் உயிருள்ள மொழியை ஆராய்ந்திருக்கிறாரே! ஓவியக் கலையோ அற்புதமான கலை. ராஜி ஓவியக் கலையிலும் ஆர்வமுள்ளவள். ஓவியக் கலையோ நிறங்கள் எப்படி உயிர்ப்புடையதாக உணர்வுகளோடும், ஆன்மாவோடும் பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதை ராஜி அவதானிப்பதுண்டு. ஏத்தகைய கலையையும் மனிதர்களாகிய நாம் ரசிக்கத் தெரியவேண்டும் தானே! ராஜியும் ஓவியக் கலையை நுட்பமாக்கிப் பார்க்கும் ஒரு ரசிகைதான்!

வலப்பக்கத்தில் இருந்தவர் திரும்பவும் ராஜிக்கு தனது புதல்வியை அழைத்து அறிமுகப் படுத்தினார். ராஜியுடன் சேர்ந்து புகைப் படங்களும் எடுத்துக்கொண்டனர்.

உங்களுக்கு இடது புறத்தில் இருந்தவரைச் சுட்டிக்காட்டி இவர் யார் தெரியுமோ என்று கேட்டாள் மெல்லிய குரலில் ராஜியை.

'எனக்குத் தெரியாது அவரை. இன்றுதான் முதற்தடவையாகப் பார்க்கின்றேன்' என்றாள் ராஜி..

அவர் இந்தியாவில் ஒரு நாட்டிய நடிகையின் அக்கா. பல சினிமாப் படங்களில் இவரது தங்கை நடித்திருக்கிறார்

அப்படியா? நடிகையின் அக்கா என்றால் நமக்கென்ன? அதுதான் இவ்வளவு மிடுக்கோடு இருந்தாரோ! நான் சினிமாப்படங்கள் பார்ப்பது இப்போது குறைவு என்றாள் ராஜி. இவர் நடிகை இல்லைத்தானே! எல்லாமே ஒரு நடிப்புத்தானே!

எனக்கும் நாட்டியத்தில் ஆர்வம்தான். ஆனால் 'நூல்களை வாசிப்பதில்தான் நான் இப்போது அதிகமாகக் கவனம் செலுத்துவதுண்டு' என்றாள் ராஜி. எதுவுமே நிலையானது அல்ல எமது வாழ்வில். பலவிதமான மனிதர்களின் உலக வாழ்வின் தோற்றங்களை நூல்களை வாசிக்கும்போதுதான் நான் உணர்ந்தேன். பரிவுணர்வுகளை எல்லாம் இந்த இலக்கியங்களில்தான் பார்க்க முடிகின்றது. மனிதர்கள் எல்லோரையும் மனிதப் பண்போடு பார்க்கவேண்டும், பழகவேண்டும். ஒரு மனிதன் யார் மனதில் என்னவாகப் பதிந்து போகின்றான் என்பதை யாருமே கண்டறிய முடியாதுதான்.

அடுத்த நிமிடம் நிச்சயம் இல்லாத எமது மனித வாழ்க்கையில் யாரையும் காயப்படுத்தாமல் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். 'மாற்றத்தின் இரகசியம் என்பது உங்களுடைய முழு ஆற்றலையும் பழமையில் குவிப்பதல்ல. புதியதைக் கட்டியெழுப்புவதே' என்ற கிரேக்க சிந்தனையாளர் சோக்ரட்டீசின் வரிகள் ராஜியை வந்து தழுவிக் கொண்டது.

○○○

# சாதி

**சாதி சாதி என்கிறீரே**
**சமத்துவம் அதனை மறந்தீரோ?**
**உயர்ந்தோர் எனப் பாடுகிறீர்**
**நீர் பசிப்பிணிப் போக்கிய வேந்தர்களோ?**
**தீண்டாமையதனை போற்றுகிறீர்**
**அதற்கு கடவுள் மட்டும் விதிவிலக்கோ?**
**குறத்தியை மணந்தவன் ஒரு புறம்**
**பிண சாம்பல் தரித்து**
**சுடலையிலே கூத்தாடும்**
**வெட்டியான் மறுபுறம்**
**ஆயர் மங்கை மடியிலே மயங்கி**
**கிடந்தவன் வேறொரு புறம்.**
**கடவுளை வணங்கவும் சாதி பார்ப்பீரோ?**
**இல்லை உம் சாதிக்கொரு**
**கடவுள் தனியாய் கேட்பீரோ?**

**–த.பிரியதர்ஷனி**
பெய்த்திலி டிவிசன்,
பத்தனை.

# விடுப்பும் - தொடுப்பும்

வதிரி–சி.ரவீந்திரன்

அவனுக்கு வயது முதிர்ந்து விட்டது.
பட்டுத் தெளிந்து
பல வேலைகள் புரிந்து
தலைநகர வாழ்வில்
தன்னை வருத்தி
பல தொழில்களால்
வாழ்வை வளமாக்கி
பக்குவமாய் பிள்ளைகளை
முன்னேற்றிய முதன்மையானவன்.
பிள்ளைகள் வழிக்கு வந்து
அவரவரே தாங்கள்
தனிக் குடும்பங்களாய்
சென்று விட்டார்கள்!
அவனும்
வாழ்க்கையின் மீதிக்கு
மனையாளுடன் ஊர் வந்து
குடி கொண்டான்.
ஊர் என்பது கொழும்பு அல்ல !
ஓய்வு பெற்றவர்கள்
உற்சாகமாய் வாழ்கிறார்கள்.
மாதா மாதம் பென்சன் பணமும்
இப்போ வங்கிக் கணக்கில்
வந்து பதிகிறது.
ஊரின் நிகழ்வுகள்
உற்சாகம் தருகின்றன..

கோவில் திருவிழாவும் அன்னதானமும்
அந்தியேட்டி திவசங்களும்
திருமண விழாக்களும் விசேடம்தான்.
சிக்கனத்தின் இருப்பிடமாய்
அவனது ஊர்.
எல்லோரும் கையிலை மடியிலை
காசோடு வாழ்கின்றனர்.
யுத்தச் சூழ்நிலையில் அரச தொழிலை
விட்டவன் அவன்!
ஊரைப் பார்த்த அவன் மனையாள்
சொன்னாள்
“பிள்ளைகளின் பணத்திற்கு காவல் இருக்காது
நீங்களும் ஏதும் வேலை பார்த்தால்
எங்கடை நாட்களும் சிறக்கும்.
பிள்ளைகள் நெடுக அனுப்புவினமே?” என்றாள்.

பிள்ளைகளுக்கு அவனைப் பற்றித் தெரியும்.
“அப்பாவோடு நாங்கள் வாழ்ந்தோம்.
அவர் எமக்காக வாழ்ந்தார்.
நாங்கள் அனாதைகள் அல்ல” என்றும் தெரியும்.
அவன் மனது கேட்டது
“நானும் முப்பது நாற்பது வயதில் கடமையில்
சூடு வாங்கிச் மரணித்தால்
எனது மனையாளும்
சம்பளம் என்ன ?
பென்சனும் பெற்றிருப்பாள்” என்றது.



# இராவணன் பிராமணனா?

தமிழ்மணி அகளங்கன்

**இராமனும் சூர்ப்பனகையும் :**

**க**ம்பராமாயணத்தில் வாலி வதைப் படலமும் சூர்ப்பனகைப் படலமும் மிகவும் சுவாரஷ்ய மானவை. வாலி, இராமனிடம் கேட்கும் நுட்பமான கேள்விகளும் இராமன் அவற்றுக்குச் சொல்லும் விடைகளும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளன. அதேபோன்று சூர்ப்பனகைக்கும், இராமனுக்கும் இடையேயான உரையாடலும் சர்ச்சைக்குரியது. இரண்டு காட்சிகளும் நாடகக் காட்சிகள் போலவே அமைக்கப்பட்டுள்ளன.

இராம இலக்குவர் சீதையுடன் தண்ட காரணியம் என்ற காட்டுக்குள் சென்று அங்கே ஐந்து ஆலமரங்கள் ஒருங்கே சேர்ந்து அமைந் திருந்த ஓர் இடத்தை அடைகிறார்கள்.

ஆலமரத்திற்கு வடம் என்பது வடமொழிப் பெயர். ஐந்து என்பதை பஞ்ச என்பது வட மொழி வழக்கு, அதனால் அந்த இடத்தைப் **பஞ்சவடி** என்கிறார் வான்மீகி. கம்பனும் அப்படியே சொல்கிறான்.

அங்கே இலக்குவன் மரந்தடி இலை குழை களினால் ஒரு சிறு குடில் அமைக்கிறான். இதையே "உம்பி புல்லினால் தொடுத்த பன்ன சாலையில் இருந்தாள்-" என்று

அனுமான் அசோகவனத்தில் சீதை இருந்த நிலை பற்றி இராமனிடம் சொல்லும்போது சொல்கிறான்.

இராவணனின் தங்கையாக இராவணனுக்கும் கும்பகர்ணனுக்கும் அடுத்தவளாக விபீஷ ணனுக்கு மூத்தவளாகப் பிறந்தவள் சூர்ப்பனகை. இவளது கணவன், வித்துசிகலன் என்பவன் இராவணனுக்கும் காலகேயருக்கும் இடையே நடைபெற்ற யுத்தத்தில் இறந்து போனான். இராவணன் எறிந்த ஆயுதத்தினால் தவறுத லாகக் கொல்லப்பட்டான் என்றும் சொல்லப் படுகின்றது.

இராவணன், தன் கணவனை வேண்டுமென்றே கொன்றுவிட்டதாகக் கருதிய சூர்ப்பனகை இலங்கையைவிட்டு வெளியேறி தங்களுக்குச் சொந்தமான தண்டகாரணியம் என்ற வனத்துக்குச் செல்கிறாள். அவளது பாதுகாவலுக்காக தனது ஒன்றுவிட்ட சகோதரனான கரன் என்பவனையும் தூசணன் என்ற ஒரு சேனாதிபதியையும் அறுபதி னாயிரம் வீரர்களைக் கொண்ட பெருஞ் சேனை ஒன்றையும் அனுப்பி வைக்கிறான் இராவணன்.

இராவணனின் மரணத்திற்கு சூர்ப்பனகையே காரணம் என்று இராவணன் இறந்தபின் விபீடணன் சொல்லி அழுவதாகக் கம்பன் காட்டுகிறான்.

**கொல்லாத மைத்துனனைக் கொன்றாய் என்றே**
**பல்லாலே இதழ் அதுக்கும் கொடும்பாவி பழி**
**சூழ்ந்தாளோ?**

தன் கணவனை நீதான் வேண்டுமென்றே கொன்றாய் என்றுதான் சூர்ப்பனகை உன்னைப் பழிவாங்கி விட்டாளோ? என்று விபீஷணன் சொல்லி அழுவதாகக் கம்பன் காட்டுகிறான். "கொல்லாத மைத்துனன்" என்பது குறித்து நோக்கத்தக்கது. பல்லாலே இதழைக் கடிக்கும் பெண்கள் பிடிவாதக்காரிகளாக பழிவாங்கும் எண்ணம் கொண்டவர்களாக இருப்பார்கள் என்ற உளவியல் அடிப்படையில் சூர்ப்பனகையை "பல்லாலே இதழ் அறுக்கும் கொடும் பாவி" என்கிறான் விபீஷணன்.

தண்டகாரணியத்தில் இராமனைச் சூர்ப்பனகை தனியாகக் காணுகிறாள். அவன் மேல் தீராக் காமமுறுகிறாள். ஒருதலைக் காதல். தமிழ்

இலக்கிய மரபுப்படி கைக்கிளை என்று சொல்லலாம் அவன் அழகை வியந்து போற்றுகிறாள். அவனைத் திருமணம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாள். இராமனை நெருங்குகிறாள்.

சூர்ப்பனகை தன்னைத்தானே அழகில்லாத வளாகக் கோர வடிவு கொண்டவளாக நினைத்துக் கொண்டு அழகான வடிவத்தோடு இராமன் முன்னே செல்ல விரும்புகிறாள் என்கிறான் கம்பன்.

இலக்குமி தேவிக்குரிய ஒரு மந்திரத்தை உச்சரித்து இலக்குமிதேவி போன்ற பேரழகு வாய்க்கப் பெற்றவளாக வடிவெடுத்து வருகிறாள். அவளது வருகையைக் கம்பன் மெல்லினச் சொற்களைக் கொண்டு அழகான கவிதையாகத் தருகிறான்.

**பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்கச்**
**செஞ் செவிய கஞ்ச நிமிர் சீறடி பெயர்ப்பாள்.**
**அஞ் சொல் இள மஞ்ஞைஎன அன்னம்என மின்னும்**
**வஞ்சி என நஞ்சம் என வஞ்சமகள் வந்தாள்.**

அழகான இனிமையான வார்த்தைகளைப் பேசிக்கொண்டு ஓர் இளமயில் அன்ன நடை நடந்து வந்தால் எப்படியிருக்குமோ அதைப் போன்ற தோற்றத்தோடு பிரகாசம் விளங்கு கின்ற வஞ்சிக்கொடி போன்று, நஞ்சு என்று சொல்லத்தக்க வஞ்சனைக்குரிய ஒருத்தியாகிய சூர்ப்பனகை, பஞ்சைப் போன்ற மென்மை யானதும் பிரகாசம் வீசுகின்றதும் மிகுந்த குளிர்ச்சி பொருந்தியதுமான இளந்தளிர்கள், செக்கச் சிவந்த செந்தாமரைப் பூப்போன்ற சிவந்த சிறிய பாதங்களைக்கண்டு அவற்றுக்கு ஒப்பாக மாட்டாமல் அனுங்கிப் புலம்ப, பாதங் களைத் தூக்கிவைத்து நடந்து இராமன் முன் வந்தாள் என்கிறான் கம்பன்.

மானின் விழிகளைப் பெற்று ஒரு மயில் வந்தது போல,

**விண் அருள வந்ததொரு மெல் அமுதம் என்ன**
**வண்ண முலை கொண்டு இடை வணங்க –**

சூர்ப்பனகை வருகிறாள். தேவலோகம் கொடுக்க பூமிக்குவந்த ஒரு மென்மையான அமுதம் என்று சொல்லும்படியாக அழகிய முலை களைக் கொண்டு இடை வளைந்து அசைய சூர்ப்பனகை இராமனை நோக்கி நடந்து வருகிறாள்.

**பேர் உழைய நாகர் உலகில், பிறிதின் வானில்**
**பார் உழையின் இல்லது ஒரு மெல் உருவு பாரா**
**ஆர் உழை அடங்கும்? அழகிற்கு அவதி உண்டோ?**
**நேர் இழையர் யாவர் இவர் நேர்?** என நினைந்தான்.

பாதாள உலகத்தும், தேவர் உலகத்தும், பூலோகத்தும் இல்லாததாகிய அவளது அழகிய வடிவத்தைப் பார்த்து, இவள் யாராயிருக்கும். இவளது அழகுக்கு எல்லையே இல்லை என்றும், இவளுக்கு யார் நிகராவார்? என்றும் இராமன் வியந்து நினைத்ததை கம்பன் அழகாகச் சொல்கிறான். அவளது பேரழகைப் பார்த்து வியந்து வரவேற்கிறான்.

**தீதில்வர வாகதிரு நின்வரவு சேயோய்!**
**போதஉளது எம்முழை ஓர் புண்ணியம் அது அன்றோ!**
**ஏதுபதி? ஏது பெயர்? யாவர் உறவு? என்றான்**
**வேதமுதல், பேதை அவள் தன் நிலை விரிப்பாள்** (38)

செந்நிறம் பொருந்தியவளே! திருமகளே! உனது வருகை தீமையில்லாத வருகையாக இருக்கட்டும்'' என்கிறான் இராமன். தமிழ்ப் பண்பாட்டிலே ஒருவரை வரவேற்கும் போது ''உனது வரவு நல்வரவாகட்டும்'' என்று மங்கலமாகச் சொல்லித்தான் வரவேற்போம்.

தமிழ் மொழிக்கு முதன்முதல் இலக்கணம் வகுத்தவராகச் சொல்லப்படுகின்ற அகத்திய முனிவரின் ஆசிரமத்துக்கு இராமன் முதலியோர் சென்றபோது அவர் இராமனை ''நன்று வர வென்று பல நல்லுரை புகன்றான்.'' என்கிறான் கம்பன். அதாவது ''உங்கள் வரவு நல்வரவா கட்டும் என்று மங்கலமான நல்ல வார்த்தைகளைச் சொல்லி வரவேற்றார்.'' என்கிறான் கம்பன்.

சீதையைப் பிரிந்தபின் இராம இலக்குவர் கிஸ்கிந்தைக்குச் செல்கின்றனர். வாலிக்குப் பயந்து வாலி வரமுடியாத சாபத்தலமான இரலையங்குன்றில் சுக்கிரீவன் அனுமான் முதலியோர் ஒளித்திருந்த காலம் அது. இராம இலக்குவரை வாலியின் ஒற்றர்களாக இருப் பார்களோ என்று சந்தேகித்துப் பயந்த சுக்கிரீ வனுக்காக அதன் உண்மையை அறிந்து கொள்வ தற்காக அனுமான் இராம இலக்குவரிடம் வருகிறான்.

அனுமான், இராம இலக்குவரை சந்தே கத்தோடு ''கவ்வை இன்றாக நுங்கள் வரவு'' என்று சொல்லி வரவேற்கிறான் என்கிறான் கம்பன்.

கவ்வை என்றால் துன்பம் என்று பொருள். ''உங்கள் வரவு துன்பம் இல்லாத வரவாக அமையட்டும்'' என்பது இவ்வாசகத்தின் பொருள். மூன்று வகையான சந்தர்ப்பங்களில் மூன்று வகையான வரவேற்புகளை மூன்று பாத்திரங்கள் மூலம் காட்டுகிறான் கம்பன்.

சூர்ப்பனகையின் வரவு இராமனுக்கும், சீதைக்கும், இராவணனுக்கும், இலங்கைக்கும் தீய வரவாகவும், இராமன் முதலியோரின் வரவு வாலிக்கு நன்மை பயந்த வரவாகவும், அகத்தியரிடம் இராம இலக்குவர் வந்த வரவு அகத்தியரின் எண்ணத்தை நிறைவேற்றிய நல்வரவாகவும் அமைந்தது.

''நீ எமது இருப்பிடத்துக்கு வந்தது நாம் செய்த ஒரு புண்ணியம் அல்லவோ? ''என்று உபசார வார்த்தைகளைக்கூறி வரவேற்ற இராமன் அவளிடம் ''உனது இருப்பிடம் யாது? உனது பெயர் என்ன? உனது உறவினர் யாவர்?''என்று கேட்கிறான். அதற்கு சூர்ப்பனகை பின்வருமாறு மிக விளக்கமாகப் பதில் சொன்னதாக கம்பன் கூறுகிறான்.

**பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி.**
**முப்புரங்கள் செற்ற**
**சேவலோன் துணைவ னான செங்கையோன்**
**தங்கை, திக்கின்**
**மாவெலாம் தொலைத்து வெள்ளி மலைஎடுத்து**
**உலகம் மூன்றும்**
**காவலோன் பின்னை காம வல்லியாம்**
**கன்னி என்றாள்.**

வெண்தாமரைப் பூவில் இருக்கின்றவனாகிய பிரமதேவனின் மகன் புலத்தியன். புலத்தியனின் மகன் விச்சிரவசு. விச்சிரவசுவின் மகள் நான். முப்புரங்களையும் அழித்த இடப வாகனத்தைக் கொண்டவராகிய சிவபெருமானின் நண்ப னாகிய குபேரனின் தங்கை.நான். அட்ட திக்கு யானைகளின் வல்லமைகளை அழித்தவனும் சிவபெருமான் வீற்றிருந்த வெள்ளிமலையாகிய மகாமேரு மலையைத் தூக்கியவனும் உலகம் மூன்றையும் இராச்சிய பரிபாலனம் செய்ப வனுமாகிய இராவணனின் தங்கை நான். காம வல்லி என்பது என் பெயர். நான் ஒரு கன்னி. என்கிறாள்.

பொலநறுவையில் பராக்கிரம சமுத்தி ரத்திற்கு அருகில் பொத்குல் விகாரைக்கு முன்னால் இருக்கும் **முதலாம் புராக்கிரமபாகு**, என்று சொல்லப்படுகின்ற மகாபராக்கிரம பாகுவின் திரு உருவச் சிலையை புலத்தியரின் சிலை என்று சிலர் கருதுகிறார்கள்.

இராமன் கேட்ட கேள்விகள் மூன்று. உனது இருப்பிடம் யாது? உனது பெயர் என்ன? உனது உறவினர் யார்? என்பவையே அவை. சூர்ப்பனகை தந்தை வழியையும், தனது மூத்த சகோதரர்களின் சிறப்பையும், தனது பெயரையும் சொல்கிறாள். இருப்பிடத்தை நேரடியாகச் சொல்லவில்லை. அதைப் பின்பு சொல்கிறாள். இராமன் கேட்காத ஒரு கேள்விக்கும் பதில் சொல்கிறாள். நான் கன்னி என்கிறாள்.

தனது பதிலிலேயே தனது உள்ளக்கிடக் கையையும் அதி அற்புதமாகச் சொல்கிறாள். தனது விபரங்களைக் கேட்ட இராமன் தன்மேல் விருப்பங்கொண்டு தன்னைத் திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் மிக அருமையாகப் பதில் சொல்கிறாள்.

**அவ்வுரை கேட்ட வீரன் ஐயுறு மனத்தான் ''செய்கை**
**செவ்விது அன்று. அறிதல் ஆகும் சிறிதின்**
**என்று உணர''செங்கண்**
**வெவ் உரு அமைந்தோன் தங்கை என்றது**
**உண்மையாயின்**
**இவ்வுரு இயைந்த தன்மை இயம்புதி**
**இயல்பின் என்றான். (40)**

அவளது விபரத்தைக்கேட்ட இராமன், அவள் மேலே சந்தேகம் கொண்டவனானான். இவளது செய்கை நல்லதாகத் தெரியவில்லை, சிறு பொழுதில் அறிந்துகொள்ளலாம் என்று உணர்ந்த இராமன் ''சிவந்த கண்கள் பொருந்திய, பார்ப்ப வர்களுக்கு அச்சத்தைத் தரும் உருவத்தைக் கொண்ட இராவணனின் தங்கை என்று நீ சொல்வது உண்மையாயின் இந்த உருவம் உனக்குக் கிடைத்தது எப்படி'' என்று கேட்கிறான்.

இராவணனை ஒருபோதும் நேரில் கண்டிராத இராமன், முனிவர்களின் சொல்கேட்டும் தாடகை யைப் பார்த்தும்தான் இராவணனை கோரமான உருவம் கொண்டவன் என்று நினைத்திருக்க வேண்டும்.

இராமனின் கேள்விக்கு அவள் ''அந்த மாயத்திலே வல்ல அரக்கரோடு வாழ்வதை விரும்பாத நான் இந்த வனத்துக்கு வந்து முனிவர் களுக்குத் தொண்டு செய்து பாபம் நீங்கப்பெற்று தேவரினாலே இந்த வடிவத்தைப் பெற்றேன்.'' என்று பதில் சொல்கிறாள்.

**தூயவன் பணியா முன்னம் சொல்லுவாள்.**
**சோர்வு இலாள்.''அம்**
**மாய வல் அரக்கரோடு வாழ்வினை மதிக்கலாதேன்.**
**ஆய்வுறு மனத்தேன் ஆகி அறம் தலை நிற்பதானேன்.**
**தீவினை தீய நோற்றுத் தேவரின் பெற்றது'' என்றாள்.(41)**

தேவர்களின் தலைவனான இந்திரனையும் எளிதாக ஏவல் கொள்ளும் சிறப்போடு உலகம் மூன்றையும் ஆட்சி செய்பவனது தங்கை என்றால் அதற்குரிய செல்வச் செழிப்போடு நீ

காணப்படவில்லை. துணையும் இல்லாதவளாக தனியாக நீ வருவதற்கு என்ன காரணம் என்று கேட்கிறான் இராமன்.

**இமையவர் தலைவனேயும் எளிமையில்**
**ஏவல் செய்யும்**
**அமைதியின் உலகம் மூன்றும்**
**ஆள்பவன் தங்கை ஆயின்**
**கமையுறு செல்வத்தோடும் தோன்றலை**
**துணையும் இன்றி**
**தமியைநீ வருதற்கு ஒத்த**
**தன்மைஎன் தையல் என்றான்** (42)

இராமன், இப்படிக் கேட்டதும் சூர்ப்பனகை சொல்கிறாள் "நான் அந்த நல்லவர்களல்லாதவர்களிடம் சேர்ந்திருக்க விருப்பம் இல்லாதவளாகினேன். தேவர்களிடத்தும் ஆரிய முனிவர்களிடத்தும் சென்று சேர்ந்தேன். இங்கே உண்மையில் உன்னிடம் ஒருகாரியமாக உன்னைக் காணவந்தேன்" என்கிறாள்.

**வீரன் அது உரைத்தலோடும் மெய்யிலாள்**
**விமல! யான்அச்**
**சீரியர் அல்லார் மாட்டுச் சேர்கிலேன்,**
**தேவர் பாலும்**
**ஆரிய முனிவர் பாலும் அடைந்தனன்.**
**இறைவ ஈண்டுஓர்**
**காரியம் உண்மை. நின்னைக்**
**காணிய வந்தேன் என்றாள்.** (43)

## மெய்ப்பொருள் மறந்த மெய்ப்பர்கள்

**– ஏ.எம்.மிஹ்ழார்**

மாணவச் சோலையில்
மனிதாபிமானத்தை மலரச் செய்யாமல்
புள்ளிகளுக்குள் சிறைப்பட்ட பிள்ளைகள்
நச்சான போட்டியுணர்வில்
புதையுண்ட பிஞ்சுகள்
விழுமியம் தொலைத்து
எழுச்சியடையுமா
கல்வி அடைவுகள்

முற்றிக் கனியாமல்
தட்டிப் பழுத்த பழம்
யாருக்காக
இந்தப் படம்

முதல் இடை கடையென்று
மாணாக்கரை எடைபோட்டு
வகுப்புவாதம் வளர்த்துவிட்ட
புலமை பரீட்சை முதல்
வன்மத்தின்
வழித் தடங்கள்

படிப்பு பட்டங்களுக்குள்
முகமூடி நடிப்புகள்
இலாபம் வருமென்றால்
முறைதவறி உருவான
கருக்கலைக்க
மறுக்காத
மருத்துவப் படிப்பு
பஞ்சமாபாதகரை
பாலகனாக விடுவிக்கும்
சட்ட அறிவு

பட்டறிவு கேட்கிறது
பண்பாடில்லா படிப்பு
புள்ளி நூறு பெற்றென்ன
தீமைக்கு தீனியானால்
ஆன்மா சாம்பலானால்

அட்டைப் படத்திற்குள்
மட்டுப்படுத்தப்பட்ட மதிப்பீடுகள்
உள்ளடக்கத்தின்
உருவாக்கத்தின்
வாழ்க்கைக்கான கல்வியின்
பன்முக பரப்பை
பாராதவர்கள்
மெய்ப்பொருள்
தேட மறந்த
வெற்றுத் தலைகளாக
அதிகார முதலாளிகள்.

சூர்ப்பனகையின் பதிலைக் கேட்டு இராம னுக்கு அவள்மேல் சந்தேகம் வருகிறது. இருந்தும் ''நீ என்னிடம் என்னகாரியத்தை விரும்பி வந்தாய் சொல். என்னால் முடியுமாயின் செய்வேன்'' என்று நம்பிக்கை ஊட்டுகிறான்.

**அன்னவள் உரைத்தலோடும் ஐயனும்**
**"அறிதற்கு ஒவ்வா**
**நன்னுதல் மகளிர் சிந்தை நன்னெறிப் பாலதல்ல.**
**பின்இது தெரியும்" என்னா "பெய்வளைத் தோளி!**
**என்பால்**
**என்ன காரியத்தை சொல்அது**
**இயையுமேல் இழைப்பல்"**

என்றான். இராமன் கேட்ட கேள்வி சூர்ப் பனகைக்கு தன் விருப்பத்தை நிறைவேற்று வதற்கு நம்பிக்கை அளித்ததால் அவள் தன் விருப்பத்தைச் சொல்கிறாள்.

**தாம் உறு காமத் தன்மை தாங்களே உரைப்பது என்பது**
**ஆம் எனல் ஆவது அன்றால் அருங்குல மகளிர்க்கு**
**அம்மா!**
**ஏம் உறும் உயிர்க்கு நோவேன். என்செய்வேன். யாரும்**
**இல்லேன்.**
**காமன் என்று ஒருவன் செய்யும் வன்மையைக் காத்தி**
**என்றாள்.**

தாம் அடைந்திருக்கின்ற காமத்தன்மையை தாமே பிறர்க்குச் சொல்லுதல் நல்ல குலப் பெண்களுக்கு ஏற்ற காரியமோ? இருந்தாலும் போய்க் கொண்டிருக்கின்ற எனது உயிருக்காக வருந்துகிறேன். என்ன செய்வேன். என் நிலை யைச் சொல்ல எவரும் இல்லாதவளாக இருக் கிறேன். மன்மதன் எனக்குச் செய்யும் கொடுமை யிலிருந்து என்னைக் காப்பாய் என்கிறாள்.

இவள் அரக்கி. நீதி நிலை இல்லாதவள். கெட்ட எண்ணத்தோடு வந்திருக்கிறாள் என்று உறுதியாகத் தெரிந்துகொண்டும் இராமன் அவளோடு தேவையில்லாமல் உரையாடி அவளுக்கு நம்பிக்கை ஊட்டுகிறான்.

**நிந்தனை அரக்கி. நீதி நிலை இலாள்.**
**வினை மற்று எண்ணி**
**வந்தனள் ஆகும். என்றே வள்ளலும்**
**மனத்துட் கொண்டான்.** என்றும்
**நாண் இலள். ஐயள். நொய்யள், நல்லளும் அல்லள்.**

என்றும் நன்றாகத் தெரிந்து கொண்டும் அத்தோடு கதையை நிறுத்தாமல் தேவையற்ற கேள்விகளைக் கேட்கிறான்.

**திருமணப் பொருத்தம் :**
**சுந்தரி! மரபிற்கு ஒத்த தொன்மையின்**
**துணிவிற்று அன்றால்**
**அந்தணர் பாவை நீ. யான்**
**அரசரில் வந்தேன் என்றான்**

சூர்ப்பனகையை அழகானவளே என்ற பொருளில் சுந்தரி! என்று அழைத்து ''நீ அந்தணர் குலத்தைச் சேர்ந்தவள். நான் அரச குலத்தைச் சார்ந்தவன் அதுதான் பழைமையான மரபு வழிவந்த திருமணத் தடை'' என்கிறான் இராமன். அதாவது நான் உன்னைத் திருமணம் செய்வ தற்கு சாதிதான் தடை என்கிறான் இராமன்.

இராமன் தான் மணமானவன் என்றோ வேறு திருமணம் செய்ய விருப்பம் இல்லாதவன் என்றோ உன்மேல் எனக்கு விருப்பமில்லை என்றோ எந்தக் காரணமும் சொல்லாமல் ''அந்தணப் பெண்ணைச் சத்திரியர் திருமணம் செய்வது முறையாகாது'' என்று சொல்லி சூர்ப்பனகைக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்து விடுகிறான்.

உடனே சூர்ப்பனகை ''இதுதான் தடை ஆயின் எனது தாய்வழி சத்திரிய அரசகுலம்தான்'' என்று தன் தாய்வழியைச் சொல்கிறாள். ''எனது தந்தை வழிதான் அந்தணமரபு. எனது தாய்வழி பூமியை ஆட்சிசெய்த சாலகடங்கட மன்னர் மரபு. அதாவது சத்திரிய மரபு'' என்கிறாள் சூர்ப்பனகை, இதை

**ஆரண மறையோன் எந்தை. அருந்ததிக் கற்பின்**
**எம்மோய்**
**தாரணி புரந்த சாலகடங்கடர் மரபின் தையல்**

என்று சூர்ப்பனகை சொல்வதாகச் சொல் கிறான் கம்பன். அதாவது, ''எனது தந்தை வேதம் ஓதுகின்ற மறையோன். அருந்ததி போன்று கற்பில் மிக்கவளாகிய எனது தாய் உலகை ஆட்சிசெய்த காலகடங்கடர் மரபில் பிறந்தவள்.'' என்கிறாள். அதாவது .சூர்ப்பனகையின் தாய் கைகசி. காலகடங்கடர் என்ற அரக்க சத்திரிய அரசன் மரபில் பிறந்தவள் என்றாகிறது.

தன் தாயை அருந்ததி போன்ற கற்பில் மேம்பட்டவள் என்று சொல்லி தன் ஒழுக்கத்தை சொல்கிறாள் சூர்ப்பனகை. அழகை நேரில் காட்டியவள் ஒழுக்கத்தை தாயின் ஒழுக்கம் மூலம் சொல்கிறாள்.

அந்தணர்கள் தங்கள் குலத்தைவிடத் தாழ்ந்த குலத்துப் பெண்களைத் திருமணம் செய்ததும் உண்டு. அந்தண குல வசிட்டர் மிகத்

தாழ்ந்த குலத்து அருந்ததியைத் திருமணம் செய்து கொண்டது உலகப் பிரசித்தம். அருந்ததியையே மிகச் சிறந்த கற்பரசியாக உலகம் கொண்டாடுவது இன்றும் உண்டு, இந்துக்களின் திருமணத்தின் போது நட்சத்திரமாக விளங்கும் அருந்ததியை மணமகன் மணமகளுக்குக் காட்டுவது இன்றும் உண்டு.

அந்தணராகிய ***காசிப முனிவர்*** அசுரேந்திரனது மகளாகிய ***சுரசை*** என்ற பெயர் கொண்ட ***மாயை*** என்று அழைக்கப்படும் அரசர்குல அசுரப் பெண்ணை மணந்து ***சூரபன்மன்*** முதலானோரைப் பெற்றதாக ***கந்தபுராணம்*** சொல்கிறது. அந்தணரான ***துர்வாச முனிவர்*** சூரபன்மனின் தங்கையும் அரசர்குல அசுரப் பெண்ணுமாகிய ***அசமுகி*** என்பவளைத் திருமணம் செய்து வில்லவன், வாதாபி ஆகிய இரண்டு புத்திரர்களைப் பெற்றதாகவும் கந்தபுராணம் சொல்கிறது.

ஆரிய மைந்தன் என்றும், வேதியர் என்றும் பாரதியால் சொல்லப்பட்ட அதாவது அந்தணராகிய அகத்திய முனிவரின் மனைவி லோபாமுத்திரை என்பவள் அரச குலத்தைச் சேர்ந்தவள் அதாவது சத்திரிய குலத்தைச் சேர்ந்தவள் என்று புராணங்கள் சொல்கின்றன.

அந்தணரான கௌதம முனிவர் அரசர் குலத்து அகலிகையைத் திருமணம் செய்து கொண்டார் என்றும், அவர்களது மகனே ஜனக மகாராஜனின் குருவாகிய சதானந்த முனிவர் என்றும் இராமாயணம் சொல்கிறது. இவை இராமாயணத்தில் சூர்ப்பனகையின் கேள்விக்கு முன் நடந்தவை. இதற்குப் பின்னாலும் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

அந்தணகுலத்து பரத்துவாசமுனிவர் மச்சகந்தி என்ற மீனவப் பெண்ணைத் திருமணம் செய்து பெற்ற மைந்தனே மகா பாரதத்தை உலகுக்குத் தந்தவரும் வேதங்களை நான்காக வகுத்தவருமாகிய ***வியாசபகவான்*** என்கிறது மகாபாரதம். வியாசமுனிவருக்கு சத்திரிய குலத்து காசி அரசனின் புத்திரிகளான அம்பிகை, அம்பாலிகை ஆகியோர் மூலமாகப் பிறந்தவர்களே திருதராட்டிரனும், பாண்டுவும்.

மாறாக, யயாதி என்ற குருகுல சத்திரிய மன்னனுக்கு அந்தணராகிய சுக்கிராச்சாரியார் தன் மகளாகிய தேவயானி என்பவளைத் திருமணம் செய்துவைத்ததாக மகாபாரதக் கதை சொல்கிறது. இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் அரசுக்கு உரிய சத்திரியர்கள் என்றும் மகாபாரதம் சொல்கிறது.

ஒரு சத்திரியன் தன் குலத்துப் பெண்ணை அல்லது தன் குலத்தைவிட உயர்ந்த குலமாகிய அந்தணர் குலத்துப் பெண்ணை மணப்பதற்கு சாத்திரத்தில் அனுமதி உண்டு என்கிறார் கம்பராமாயண உரையாசிரியர் வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார்

“பிராமண ஆணுக்கும் சத்திரியப் பெண்ணுக்கும் பிறந்தவர்கள் அனுலோம சாதியாருள் பிராமணரை ஒத்த சத்திரியர் என்றும் தந்தையின் சாதி உயர்ந்ததாயினும் தாயின் சாதி தாழ்ந்த தாகையால் இவர்கள் தந்தையின் சாதியைச் சாராதவர்களாய் தாயின் சாதியைக் காட்டிலும் சிறிது மேன்மையான தனிச் சாதியராகின்றனர் என்றும், இவர்களைச் சத்திரியர் திருமணஞ் செய்து கொள்ளலாம் என்றும் நூற் கொள்கை. ஆதலால் நீ என்னைத் திருமணம் செய்ய சாதித் தடை இல்லை என்று சூர்ப்பனகை சொல்வதாக இதைப் பார்க்கலாம்.” என்று உரையாசிரியர் வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் சொல்கிறார்.

சூர்ப்பனகை இவ்வளவு அறிவுத் தெளிவோடு பேசியிருப்பாளா என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?

**கணப் பொருத்தம் :**

சூர்ப்பனகை தன் தந்தை அந்தண மரபு என்றும் தன் தாய் சத்திரிய அரச மரபு என்றும் சொன்னபின் அதை மறுக்கமுடியாத இராமன் “அரக்கர்களோடு மானிடர்கள் திருமணம் செய்துகொள்ளல் பொருத்தமானது இல்லை என்று மிகுந்த புலமையுள்ளவர்கள் சொல்லியிருக்கிறார்கள்” என்று சொல்கிறான்.

இதையே திருமணப் பொருத்தத்தில் கணப் பொருத்தம் பார்க்கும் போது பெண் மனுஷ கணமும் ஆண் இராக்கத கணமுமானால் அதமம் என்றும் பெண் இராக்கத கணமும் ஆண் மனுஷ கணமுமானால் அதமா அதமம் என்றும் பஞ்சாங்கம் குறிப்பிடுகிறது. இதனைக் கம்பன்

**வருத்தம் நீங்கு, அரக்கர் தம்மில் மானிடர் மணத்தல் நங்கை**
**பொருத்தம் அன்று என்று சாலப் புலமையோர் புகல்வர் (51)**

என்று இராமன் சொன்னதாகச் சொல்கிறான். இராமன் தன்னை மானுடன் என்றும் சூர்ப்பன

கையை அரக்கி என்றும் சொல்லி தமக்கு திருமணப் பொருத்தமில்லை என்று மறுப்பதாக கம்பன் சொல்கிறான். இராமன் இதை முன்பே சொல்லியிருக்கலாமே என்று எண்ணத் தோன்று கிறதல்லவா?

**இராவணன் பிராமணனா?**

பிராமணர், வேதியர், அந்தணர், மறையோர், பார்ப்பார், பூசுரர் முதலான சொற்கள் ஒரே சாதியைக் குறிக்கும் சொற்களாக நெடுங்காலமாக வழங்கிவருகின்றன. சாதியையும் குலத்தையும் ஒரே கருத்துள்ள சொற்களாகவும் பலர் பார்த் துள்ளனர்.

வருணக்கோட்பாடு மனிதர்களைத் தொழில் அடிப்படையில் நான்கு பிரிவுகளாகப் பிரித் துள்ளது. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்பதே அந்த நாலுவகைகள். இவற் றையே நான்கு சாதி என்றனர்.

ஆனால் குலம் என்பது வேறுபட்டது. குலம், பரம்பரை, வம்சம், குடி, இனம் என்பவை சாதியிலிருந்து வேறுபட்டவை. பாண்டவர் களையும் கௌரவர்களையும் குருகுலத்தார் என்றும் குரு வம்சத்தார் என்றும், குருவின் பரம்பரையினர் என்றும் சொல்வது வழக்கம்.

''ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்'' என்ற புறநானூற்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் வரியில் ''குடி'' என்பது குடும்பத்தையும், குலத்தையும் குறித்த சொல். இதே பாடலில் ''வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்'' என்று சாதியைத் தனியாகச் சொல்வதைக் காணலாம்... ''தமிழச் சாதி'' என்கிறார் பாரதியார். சத்திரிய குலம் என்று அரசர்களை சத்திரிய சாதி என்பதற்குப் பதிலாக அழைக்கின்றனர். தமிழ் இனம் என்கிறோம்.

ஆனால் மனைவியைப் பெண்சாதி என்று எந்த அடிப்படையில் அழைக்கிறார்களோ தெரியாது. ஏன் கணவனை ஆண்சாதி என்று அழைப்பதில்லை? என்ற கேள்வியும் எனக்கு உண்டு.

சங்கப் புலவரான கபிலர் தன்னை அந்தணன் என்கிறார். திருவள்ளுவர், திருமூலர், பாரதியார், பாரதிதாசன் முதலானோர் பார்ப்பான் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். திருஞானசம்பந்தர் தன்னைப் பூசுரன் என்கிறார். சேக்கிழார், வேதியர், மறையோர், முதலான சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார். பிராமணர் என்ற சொல் இன்று பரவலாகப் பேசப்படுகின்றது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களைக் கொண்ட பிராமண சாதியினரிடத்தே நுட்பமான சில வேறுபாடுகள் இருக்கலாம். சாதாரணமாக அதுபற்றி யாரும் பேசுவதில்லை. ஒரே சாதியைச் சேர்ந்தவர்களுக்கான வேறுவேறு பெயர்களே இவை என்பதே பொதுக் கருத்து.

பிராமணர் குலத்து விச்சிரவசுவுக்கும் அரக்க சத்திரியர் குலத்து கைகசிக்கும் பிறந்த வனே இராவணன். அதனால் இராவணன் பிராமணன் ஆகான். பிராமணருக்குக் கீழ்ப்பட்ட சத்திரியருக்கு மேற்பட்ட ஒரு புதுவகைச் சாதியா வான். ஆனால், இராவணனைப் பிராமணன் என்று சொல்லும் வழக்கம் உண்டு. பிராமணனான இராவணனைக் கொன்றதால் சத்திரியனான இராமனுக்குப் பிரம்மகத்தி என்கின்ற தோஷம் பிடித்ததாகவும், அதனைப் போக்க இராமன் சிவபெருமானை இலிங்கவடிவில் ஸ்தாபித்துப் பூசித்தார் என்றும் சொல்லப்படுகின்றது.

அந்த ஈஸ்வரரே இராமேஸ்வரர் என்றும் அந்த இலிங்கம் இருக்கும் இடத்தை இராமேஸ் வரம் என்றும் அழைக்கிறோம். அங்குள்ள ஈஸ்வரவனுக்கு இராமன், ஈஸ்வரரை வழி பட்டதால் இராமேஸ்வரர் என்ற பெயர் ஏற்பட்டது என்றும் சொல்கிறார்கள்.

மட்டக்களப்பு அமிர்தகழியிலுள்ள மாமாங் கேஸ்வரருக்கும் இப்படி ஒரு கதையை அவ் வாலயத் தலவரலாறு சொல்கிறது.

கம்பன், இராவணனை அரக்கன் என்கிறான். இராமனும் சூர்ப்பனகையை அரக்கி என்பதன் மூலம் இராவணனை அரக்கன் என்கிறான். அரக்கர்களில் வருணப் பாகுபாடு உண்டா? விஷ்வ கர்மா வழிவந்த மயனின் மகளும் சீதையின் அழகுக்கு ஈடானவளாகக் கம்பனால் சொல்லப் பட்டவளுமான மண்டோதரியை கம்பன் காட்டுகின்ற கோரமுகம் படைத்த கொடூர குணங் கொண்ட இராவணனுக்கு மணஞ்செய்து கொடுத்திருப்பார்களா?

இராவணனை அந்தணன் என்று ஏன் உலகம் போற்றுகின்றது.?

○○○




**கா**லையில் அவசரமாக வெளியே புறப் பட ஆயத்தமானாள் காயத்திரி.

"காயா எங்கையெடி இந்த வெள்ளன வெளிக்கிடுறாய்?" என்று ஆச்சரியம் கலந்த குரலில் கேட்டாள் அம்மா.

சற்று உயர் ரக உடையலங்காரத்துடன் மகள் வெளியே போகத் தயாரானது அம்மாவுக்குப் பெருத்த சங்கடமாக இருந்தது.

"சும்மா நானொருக்கா வெளியில போட்டு வாறன்." என்று கூறி அம்மாவை ஏமாற்ற முயன்றாள் காயத்திரி.

"எடியேய் நாளைக்கு உனக்குக் கலியாணம். மறந்திட்டியே? கலியாணப் பொம்பிள இண்டைக்கு வெளியில போறன் எண்டிறாய். வீட்டில உள் ளவை கேட்டால் நான் என்னத்தைச் சொல்லுறது? இப்ப இஞ்ச உள்ள வேலையளை விட்டுட்டு எங்க போறாய் எண்டதைச் சொல்லு பாப்பம்". கொஞ்சம் சத்தமாகத்தான் கேட்டாள் அம்மா.

"ஐயோ அம்மா சும்மா கத்தாதையுங்கோ வீட்டில அயல் மனிசர் கனபேர் இருக்கின மெல்லே.. நான் ஒருக்காக் கண்ணனைச் சந்திச் சிட்டு வாற மட்டுந்தான்" என்றாள் காயத்திரி சர்வசாதாரணமாக.

"இதாரடி இப்ப கண்ணனெண்டு.." தாய் ஆச்சரியப்பட்டாள்.

"அவர்தான் என்ரை முத்தின புருஷன். உங்கட மாஜி மருமகன் "

"ஐயோ! இதென்ன வெள்ளிடியெடி" அம்மா வாய்குளறிக் கத்தினா.

"அவரைத்தானே வேண்டாமெண்டு 'டைவேர்ஸ்' எடுத்துப் போட்டாய். இப்ப நீ அவரைச் சந்திக்கப் போறதை ஆருங் கண்டால், மாப்பிளை வீட்டு ஆக்களுக்குச் சொல்லிப் போடுவினமெல்லே" "இதையெல்லாம் கொப்பர், கொண்ணன் அறிஞ்சால் என்னைப் பிச்செடுத்துப் போடுவினம். உனக்கு முதல் நான் எங்கேயும் ஓடித்தப்பிடோணும்" என்று பதறினா அம்மா.

"ஐயோ அம்மா நீங்கள் உலகம் விளங் காமல் கதைக்கிறியள்" நான் கண்ணனுக்கு என்ர கலியாண 'இன்விற்ரேசன் காட்' குடுக்கி றதுக்கெல்லே போறன்."

"ஆ.. இதென்ன கொடுமையடி? உலகத்தில இல்லாத அதிசயமாய் இருக்கு? ஏனடி அவரைக் கலியாண வீட்டுக்குக் கூப்பிடுறாய்? ரெண்டாம் கல்யாணத்தில முதல் புருஷனும் வந்து நிண்டால்... உனக்கு மூளை லூசாடி"

"தற்செயலாய் அவர் மண்டபத்தில வந்து நிக்க, அவரை ஆரும் அடையாளம் கண்டு, மாப்பிளை வீட்டாருக்குச் சொல்ல, என்னடி நடக்கும் ?" பதறினாள் அம்மா.

"ஐயோ அம்மா ஒண்டும் நடவாது. இப்ப இதல்லாம் சர்வசாதாரணம். வெளிநாடுகளில என்ன நடக்குதெண்டு தெரியாமல் இருக்கி றியள்". என்று சமாளித்தாள் காயத்திரி.

"கடவுளே எனக்குத் தலை சுத்துதடி. இப்ப எல்லாம் குழம்பப் போகுதடி. மூண்டு வருஷத் துக்குப் பிறகு எவ்வளவு கரைச்சல்பட்டுக் கொப்பர் இந்தக் கலியாணத்தை ஒழுங்கு பண்ணி னவர். எல்லாத்தையும் போட்டுடைக்கப் போறியே மதிகெட்டவளே"

“அம்மா கதையை நிப்பாட்டுங்கோ. தேத் தண்ணியைத் தாங்கோ எனக்கு நேரம் போச்சு” அவசரப்படுத்தினாள் காயத்திரி. அம்மா குசினிக் குள்ள போனதும் வந்ததுமாக வேண்டா வெறுப்பாகத் தேநீர் சில்வரைக்’ காயத்திரியிடம் நீட்டினா.

தேநீர் குடித்த பாதி குடியாத பாதி “அம்மா.. பாய்..பாய்..” புறப்பட்டாள் காயத்திரி.

ஓட்டோவில் போய் கண்ணன் வீட்டுக் ‘கேற்றை’ அனாயாசமாகத் திறந்து வீட்டின் முன் கதவைத் சற்றுத் தயக்கத்துடன் தட்டினாள் காயத்திரி.

“வாருங்கோ வாருங்கோ” என்று வரவேற் றான் காயத்திரியின் மாஜிக் கணவன் கண்ணன் மிகவும் பவ்வியமாக.

வரவேற்பு பலமாக இருந்ததால் காயத்திரி தயக்கமின்றி உள்ளே போய் ‘டைனிங்ரேபிள்’ கதிரை ஒன்றில் மிக உரிமையுடன் அமர்ந்து கொண்டாள்.

குசினிக்குள்ளே நுளைந்த கண்ணன் சிறிது நேரத்தில் இரண்டு புதிய ‘செரமிக் கப்களில் அங்கர் பால்மா தேநீரோடு வந்தான். ஒரு கப்பை காயத்திரிக்கு முன்னே வைத்து “குடியுங்கோ” என்று கூறிக்கொண்டு, ‘டைனிங்ரேபிள்’ எதிர் பக்கத்து கதிரையில் மிகவும் நிதானமாக அமர்ந்து கொண்டான்.

“நான் ஏன் இங்க வந்தனான் எண்டு தெரியுமோ ?” என்று கேட்டாள் காயத்திரி.

“நீங்கள் சொல்லாமல் எனக்கு என்னண்டு தெரியும்?”நிதானமாகப் பதில் சொன்னான் கண்ணன்.

“எனக்குக் கல்யாணம் அதுதான் உங்க ளுக்கு ‘இன்விற்ரேசன் காட்’ தாறதுக்கு வந்தனான்.”

“ஓ..ஓ. நல்ல விசயம்தானே வெரி..வெரி.. குட்.” என்றான் கண்ணன்.

“எது நல்ல விசயம் எனக்குக் கல்யாணம் எண்டதோ. அல்லது நானே உங்களுக்கு இன்விற்றேசன்காட் தாறதோ” கொஞ்சம் கூச்சமாகக் கேட்டாள் காயத்திரி.

“ரெண்டும் நல்லதே.”என்றான் கண்ணன்.

“வருவியளோ?” ஆதங்கத்துடன் கேட்டாள் காயத்திரி.

“இதென்ன உங்கட கலியாணத்துக்கு வராமலே? வாறன். நீங்கள் இப்ப சொல லாட்டிலும் ரெண்டு வருஷத்தால பிள்ளைக்கு ‘முதலாவது பேர்த்டே’ எண்டு ‘இன்விற்றேசன் காட்’ தருவியள் அப்ப நான் வரத்தானே வேணும்” என்று சொல்லிச் சிரிக்க முயன்றான் கண்ணன்.

“அதுசரி நான் வந்த நேரம் தொடக்கம் பாக்கிறன் நீங்கள் என்னை ‘நீங்கள் -நீங்கள்’ எண்டு பன்மையிலே சொல்லுறியள். “காயா” எண்டே சொல்லலாம் தானே முந்தியைப் போல.?”

“புது மனிசரோட கௌரவமாய் எல்லே கதைக்கவேணும்”. என்றான் கண்ணன். சற்றுச் சிந்தித்தபடி.

“ஏன் நான் புது மனிசரே. மூண்டு வருஷம் உங்களோட இந்த வீட்டில வாழ்ந்தவள் எல்லே.” என்று கூறித் தனக்குள்ள உரிமையை உறுதிப்படுத்த முயன்றாள் காயத்திரி.

“ஓ..ஓ..அதெல்லாம் கோட்டலுவலோட முடிஞ்சு போச்சே. .அதுக்குப் பிறகு நாங்கள் புது மனிசர்தானே?”

“சம்பிரதாயங்களாலும், சடங்குகளாலும் சேர்த்து வைச்சதை கோடு சர்வசாதாரணமாகப் பிரிச்சுப் போட்டுதே” என்றான் கண்ணன் மிகவும் நிதானமாகவும், சற்றுக் கவலையுடனும்.

“நான் கொஞ்சம் அவசரப் பட்டிட்டன் போல எண்டு இப்ப நினைக்கிறன்”. என்றாள் காயத்திரி பட்சாதாபத்துடன்.

“இல்லையே எல்லாம் நிதானமாகத்தானே நடந்தது. லோயர்மாரும், நீதவானும் எல்லாத் தையும் ஆறுதலாகக் கேட்டுத்தானே பிரிச்சு வைச்சவை. எது நடந்ததோ அது நன்றாகத் தானே நடந்தது.” கண்ணன் அமைதியாகச் சொன்னான்.

“நாங்கள் ரெண்டு வருஷம் லவ் பண்ணி எத்தினையோ பிரச்சனைகளுக்குப் பிறகெல்லே கலியாணம் முடிச்சனாங்கள்.” ஆதங்கப்பட்டாள் காயத்திரி.

பின்னர், “உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?” என்று கேட்டு அவர்கள் காதலர்களாக இருந்த போது நடந்த சில சம்பவங்களைச் சொல்லி வாயூறிக் கொண்டாள் காயத்திரி.

“ஓ.. ஓ.. அதெல்லாம் பழைய கதை. அதை விடுங்கோ.” முற்றுப்புள்ளி வைத்தான் கண்ணன் சற்று வெறுப்பாக.

“நீங்கள் பழைய விஷயமொண்டையும் நினைச்சுப் பாக்கிறேல்லையே?” கேட்டாள் காயத்திரி.

''ஐயோ அதையெல்லாம் நினைக்கிறதுக்கு எனக்கு நேரமில்லை'' உடனேயே சற்று கோபத்தோடு சொல்லி முடித்தான் கண்ணன்.

''அதுசரி போன மூண்டு வருஷத்தில ஏன் நீங்கள் ஒருக்காலும் என்னோட கதைக்கேல்லை. 'போன்ல' எண்டாலும் கதைச்சிருக்கலாமே.'' வினையமாகக் கேட்டாள் காயத்திரி.

''நீங்கள் கதைக்கேல்ல.. நானும் கதைக் கேல்ல.'' சாதுர்யமாகப் பதில் சொன்னான் கண்ணன்.

''நான் இப்ப இஞ்சவந்தது உங்களுக்கு ஆச்சரியமாய் இருக்கேல்லையோ?''

''இல்லையே நீங்கள் வரவேணுமெண்டு நான் எப்பவும் எதிர்பார்த்தன் தானே!'' என்றான் கண்ணன்.

''அதெப்பிடி எதிர்பார்பியள் எல்லாம் முடிஞ்ச பிறகு'' சற்று குதர்க்கமாகக் கேட்டாள் காயத்திரி.

''நடந்த விசயங்களை ஏனோ நான் சீரியஸாக எடுத்துக் கொள்ளேல்ல. எனக்கென்னவோ கனவு கண்டது போலத்தான் இருக்கு'' என்று சாதாரணமாகக் கூறினான் கண்ணன்.

ஆ.. ஆ.. அப்பிடியோ ..? நிதானமாகச் சிந்தித்தாள் காயத்திரி.

''முந்தி நீங்கள் இந்த வீட்டில இருக்கேக்க செய்த மாதிரித்தான் இப்பவும் நான் வீட்டுத் திறப்பை வெளியில இருக்கிற அதே பூச் சாடிக்குக் கீழதான் வைச்சிட்டு வெளியில போறனான். நீங்கள் எப்ப வந்திருந்தாலும் கதவைத் திறந்து வீட்டுக்குள்ள வந்திருக்கலாம்.''

''ஞாபகமிருக்கே நீங்கள்தானே ஒருநாள் நான் வேலையால பிந்திவர, நீங்கள் கொஞ்சம் முந்தி வந்து, கதவு திறக்க வழியில்லையெண்டு... என்னோட சண்டைபிடிச்சு...,கதவு திறப்பைப் பூச்சாடிக்குக் கீழ வைக்கிற பழக்கத்தை உண்டாக்கினியள்.''

''ஒரு சொட்டு நேரம்தான் நான் பிந்தி வந்தனான்''. என்று சொல்லி விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டான் கண்ணன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பழைய சம்பவத்தைச் சொல்லியிருக்கக் கூடாது என்றும் கண்ணன் நினைத்துக் கொண்டான்.

''ஓ.. ஓ வெரி சொறி, அப்ப இப்பவரையும் நான் வீட்டுக்கு வருவன் எண்டே எதிர்பார் திருந்தனீங்கள். அப்ப நான்தான் வரேல்ல...ஓ.. சரி...சரி.... எல்லாம் முடிஞ்சு போச்சுத்தானே!'' மிகவும் சஞ்சலத்துடன் சொன்னாள் காயத்திரி.

இப்போது அவளைத் திசைதிருப்பும் நோக்கமாக ''அதுசரி எப்ப கல்யாணம்- நான் உங்கட 'இன்விற்ரேசன் காட்டை' இன்னும் பார்க்கேல்லையே! வெரிசொறி'' என்றான் கண்ணன்

''கல்யாணம் நாளைக்குத்தான்'' என்றாள் காயத்திரி நறுக்காக.

திடுக்கிட்ட கண்ணன்., ''நீங்கள் இங்க வந்தது உங்கட வீட்டில உள்ளவைக்குத் தெரியுமோ?'' பதட்டத்துடன் கேட்டான் கண்ணன்.

''ஓ.. ஓ.. அம்மாவுக்குத் தெரியும். அதுதான் உங்கட மாமிக்குத் தெரியும்.'' என்றாள் காயத்திரி துணிவாக.

''பிரச்சனை ஒண்டும் வராதோ.?'' அங்கலாய்த்தான் கண்ணன்.

''என்ன பிரச்சனை....ஒண்டும் வராது. அதை விடுங்கோ.''

''அது சரி உங்களுக்குக் கல்யாணம் முடிக்கிற எண்ணம் இல்லையா ?''கண்ணனை நேர்ப் பார்வையாகப் பார்த்து கேட்டாள் காயத்திரி சற்று அக்கறையுடன்.

'டிவோஸ்' எடுத்த எனக்கு ஆர் பெண் தருவினம்.?

''அப்ப பொம்பிளை ஒழுங்கு பண்ணினால் கலியாணம் முடிப்பியளோ ?''

''உங்களைப் போல நல்ல பொம்பிளை கிடைச்சால் நான் முடிப்பன்.''

''அப்ப நான் பொம்பிளை பாக்கட்டே''

''என்ரை பிரச்சனையை விடுங்கோ. அதை நான் பார்த்துக் கொள்ளுறன். உங்கட மாப்பிள்ள வெளிநாட்டால வந்தவரே?'' கேட்டான் கண்ணன் நிதானமாக.

''ஓ.. ஓ. கனடாக்காரன்.''

''எப்பிடி நல்லவரோ ?''

''பழகிப் பார்த்தால்தானே தெரியும்.''

''அப்ப பேச்சுக் கல்யாணமே?''

''ஓ.. அவர் 'டிவோஸ்' எடுத்தவர்தான். எனக்குக் கொஞ்சம் குழப்பம்தான். ஒருநாளும் பழக்கமில்லதவரோட..'' என்று இழுத்தாள் காயத்திரி.

''உங்களுக்குப் பழகின ஆக்கள் சரிவராது தானே! ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். வெளிநாட்டு மாப்பிள்ளை கிடைச்சது பெரிய அதிஸ்டமெல்லே''

என்று சொல்லி மனதுக்குள் கறுவிக் கொண்ட கண்ணன். அந்த வெளி நாட்டு மாப்பிள்ளை பாவம் என்றும் அனுதாபப்பட்டுக் கொண்டான்.

“நான் இப்ப உங்களுக்குச் சவால் விடு றதுக்கு கல்யாணத்துக்குச் சம்மதிக்கேல்ல. முந்தி என்ர எண்ணத்துக்கு முடிச்சன். பிழைச்சுப் போச்சு. இனி அப்பா அம்மா செய்யிற ஒழுங்கு களைப்பாப்பம்.” என்று சற்றுத் தணிந்த குரலில் சலிப்போடு சொன்னாள் காயத்திரி.

“இனி என்ன பாப்பம் என்டுறியள். நாளைக்குக் கலியாணவீடு.” என்று சற்றுக் கண்டிப்போடு சொன்னான் கண்ணன்.

நீங்கள் சொன்னதோ, மாமி சொன்னதோ ஒண்டும் ஏறேல்லத்தான். எங்களுக்குள்ள அடிக்கடி பிரச்சினை வந்ததுதான். அதுக்குக் காரணமும் இருந்தது. ஆனால் கடைசியாக நடந்த பிரச்சனை ஒரு அற்ப பிரச்சனை. அதுவும் என்னாலதான் வந்தது. என்ர வாயும் சும்மா கிடக்கேல்ல.”

அடி மனதின் கவலையை வெளிப்படை யாகவே சொல்லி முடித்தாள் காயத்திரி.

“சரி.. சரி.. முடிஞ்சு போனதை இப்ப கிளற வேண்டாம். உதுகளை விட்டுட்டு. ஆக வேண்டிய அலுவல்களைப் பாருங்கோ.” சற்று அவசரம் காட்டினான் கண்ணன்.



“மாமி இந்த வீட்டிலதான் இருக்கிறா? கேட்டாள் காயத்திரி.

“எங்கட அம்மா இப்ப உங்களுக்கு மாமி யில்லையே”.

“அப்ப நான் இனி அவவை மாமியெண்டு சொல்லக் கூடாதோ.? அதுவும் சரிதான். சலித்தாள் காயத்திரி.

“எங்கட அம்மா எனக்கு பொம்பிளை ஒண்டு பாக்க ஊருக்குப் போட்டா. இப்ப கொஞ்ச நாளா அதுதான் அவவுக்கு வேலை”. வேடிக்கை யாகச் சொல்வது போல் சொல்லிச் சிரித்தான் கண்ணன்.

“நான் அண்டைக்குக் கொஞ்சம் அவசரப் பட்டிட்டன். “கொஞ்சம் பொறுபிள்ளை. எடுத் தெறிஞ்சு கதைக்காதை” எண்டு மாமி திரும்பத் திரும்பச் சொன்னவதான். அப்ப என்ர காதில

காயத்திரி நடந்த சம்பவங்களுக்காக இப்போது கவலைப்படுகிறாள் என்பதைக் கண்ணன் நன்றாக உணர்ந்து கொண்டான்.

“அப்ப நான் போட்டு வாறன்” என்று சற்று அழுத்தமாகச் சொன்னாள் காயத்திரி.

“இல்லை இனி நீங்கள் இங்கை வர வேண்டாம். இனிமேல் நான் வீட்டுத் திறப்பைப் பூச்சாடிக்குக் கீழ வைக்கவும்மாட்டன்.” என்றான் கண்ணன் சற்றுக் கடுமையாக.

காயத்திரி உடனே எழுந்து போய்க் கேற்றை மிக ஆறுதலாகத் திறந்தாள். திரும்பி நின்று கண்ணனது வீட்டை உற்றுப் பார்த்துவிட்டு வேகமாக நடந்தாள்.

காயத்திரி வீட்டை விட்டு வெளியேறுதை யன்னல் ஊடாக அவதானித்த கண்ணன், வீட்டுக் கதவை முழுமையாகச் சாத்திக் கொண்டான்.

இருவரும் காதலித்துக் கலியாணம் செய்து கொண்டார்கள். அவசரமான முடிவுகளால் காயத்திரி கோட்டுக்குப் போய் 'டிவோஸ்' எடுத்துக் கொண்டாள். கண்ணன் அவமானங் களைத் தாங்கிக் கொண்டான். அவன் அசர வில்லை. நிதானம் இழக்கவில்லை. சலன மில்லாத மனத்தோடு இது நாள்வரை வாழ்ந்து வருகிறான்.

உண்மையில் காயத்திரி கண்ணனுக்கு கலியாண அழைப்பிதழ் கொடுப்பதற்காகத்தான் அவனது வீட்டுக்குவந்தாளா?.

சட்டத்துக்குக் கிட்டப் போனால் அது சுட்டுவிடும். பெண் புத்தி பின் புத்தி என்பதை நிருபித்திருக்கிறாள் காயத்திரி. இப்போது கண்ணனிடம் காயத்திரி எதை எதிர்பார்க்கிறாள்? கடலாழம் கண்டாலும் பெண்கள் மன ஆழத் தைக் காணமுடியாது.

ஏதாவது மந்திரம் மாயம் நடந்து, தான் மீண்டும் கண்ணனுடன் வாழ முடியுமா? என்று நினைத்தாளோ?

கனடாவிலிருந்து ஒருவன் வந்து நாளை எப்போது விடியும் என்று காத்திருக்கிறானே! அவனுடைய நிலமை என்ன?

காதலிக்கும் போது அவன் இவன், அவள் இவள். நான் நீ. வாடா போடா, வாடி போடி என்று கூப்பிட்டு இப்போதைய இளைஞர்கள் பழகிக் கொள்கின்றனர். அதிலும் ஆண்களைத் தமது எடுபிடிகளாக பெண்கள் பாவித்துக் கொள் கின்றனர். கலியாணத்தின் பின்னர் தாங்கள் கணவன், மனைவி ஒரு குடும்பத்தின் தலைவன், தலைவி அதனால் ஒரு குடும்பத்துக்குரிய சம்பிர தாயங்களைப் பேணிக் கொள்ள வேண்டும் என்று தெரிந்து கொள்வதுமில்ல. அந்தத் தத்து வத்தைப் பெற்றோர், மாமன், மாமி மற்றும் உறவினர்களது வாழ்க்கை முறையைப் பார்த்து விளங்கிக் கொள்வதுமில்லை.. எடுத்ததற் கெல்லாம் ஒருவர்க்கொருவர் சவால் விட்டுக் கொள்கின்றனர். இதனால்தான் காதல் கலியா ணங்கள் படுதோல்வியில் முடிகின்றன.

காயத்திரி காதலிக்கத்தான் தெரிந்து கொண்ட வளே தவிர, கலியாணம் செய்து குடும்ப வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்றவளல்ல என்பதைக் கண்ணன் எப்போதோ உணர்ந்து கொண்டான். அவனுடைய மனதில் சலனம் இல்லை.

○○○

## புத்தனைக் கண்டேன்

போதி மரம் கீழமர்ந்து
காவி உடை மேலணிந்து
காரணங்கள் நீருணர்ந்து
காமமதை தான் துறந்து
கடவுள் ஆனவரே !

பெற்றவரை அவள் பிரிந்து
உற்றவனை மனம் நினைந்து
அச்சமட(ம்) உடல் கடந்து
இச்சையுடன் தினம் இணைந்து
கற்பினிலே உனை கலந்து – உயிர்
பெற்றனளே சதை கிழிந்து
கணவன் ஆடவரே !

தொட்டவளை துயில் உரிந்து
சுற்றமது சூது செய்ய
உத்தமனாய் நீயிருந்து
உலகில் எந்த பயனுமல்ல

உற்றவளை உதறிவிட்டு – மன
உறுத்தலற்று உயிர் வாழும் – அவள்
கற்பினிலே கலந்துவிட்டு
கறை பட்டிடாமல் நடமாடும்
பற்றினிலே பற்றிவிட்டு – பல
பழி சொல்லி கலி ஆழும்
புத்தனை கண்டேன்.

**யோகேந்திரன் பிரசாந்**
புவியியல் தகவல்
விஞ்ஞானக் கற்கை
பேராதனைப்
பல்கலைக்கழகம்



நூல் விமர்சனம்

# 'தீதும் நன்றும்' வாசிப்பு அனுபவம்







கே.எஸ்.சுதாகர்
அவுஸ்திரேலியா




**இ**ந்தத் தொகுப்பில் உள்ள சிறுகதைகள், கடந்த பத்து வருடங்களில் விமல் பரம் அவர்களினால் ஞானம், ஜீவநதி, சிறுகதை மஞ்சரி, காற்றுவெளி, தாய்வீடு போன்ற சஞ்சிகைகளிலும் - வணக்கம் லண்டன், நடு, பதிவுகள் போன்ற இணையத்தளங்களிலும் எழுதப்பட்டவை. பல கதைகள் வெவ்வேறு சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்றவை. தொகுப்பின் வாழ்த்துரையை தாமரைச் செல்வியும், முன்னுரையை தாட்சாயணியும், பின் அட்டைக்குறிப்பை ***க.பரணீதரனும்*** எழுதியிருக்கின்றார்கள்.

இளமைப் பருவத்திலிருந்தே வாசிப்பைத் தொடர்ச்சியாக செய்துவரும் ஒருவர் எழுதும் போது, எழுத்துகள் தம்மைத்தாமே வடிவமைத்துக் கொள்ளும், புடம் போட்டுக்கொள்ளும். தன்னைச்சுற்றி நடக்கும் நாளாந்த நிகழ்வுகள், மனதிலே முட்டி மோதி, ஒரு தெளிவுக்குள்ளான பின் எழுத்து வடிவமாக வந்து விழுந்து விடுகின்றது. வயதுடன் கூடவரும் அனுபவங்கள் கதைகளாகும்போது, எந்தவித ஹபிச்சல் பிடுங்கல்கள்' இல்லாமல், கோட்டுக்குள் அடங்கும் கோலங்கள் ஆகிவிடுகின்றன. இப்படி இந்தத் தொகுப்பை சுருக்கமாகச் சொல்லிவிடலாம்.

'பெண்' என்ற ஒரு சொல்லைப் பேப்பரில் எழுதிவிட்டாலே, சர்க்கரையைக் கண்டுவிட்ட எறும்பாக மொய்த்துவிடும் இந்த உலகில், பெண்களுக்கு தினமும் ஆயிரத்தெட்டுப் பிரச்சினைகள். ஒருகாலத்தில் பெண்கள் ஏணியின் உச்சிக்கு சென்றுவிட முடியாதபடிக்கு பாம்புகள் கொத்தி விழுங்கிக் கொண்டிருந்தன. இன்று பெண்கள் சறுக்குமரத்தில்கூட உச்சிக்குச் போகும் காலம்.

இந்தப்புத்தகம், ***இவரது முதலாவது தொகுப்பு*** என்றால் நம்பும்படியாக இல்லை.

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தைரியத்தை வளர்க்கும் 'இறுகப்பற்று' என்ற கதை, முடவனும் கண் தெரியாதவனும் என்ற இரட்டைப் புலவர்களின் கதையை எனக்கு ஞாபகமூட்டியது

'இதுவும் நடக்கலாம்' என்ற கதையில் ஒரு குடும்பச் சிக்கலொன்று சிறுவனின் பார்வையில் சொல்லப்படுகின்றது. சிறுவனின் பார்வையில் அம்மாவை 'ள்' கொண்டு விழிப்பதும், அப்பாவை 'ர்' கொண்டு விழிப்பதும் மனதைச் சங்கடம் கொள்ள வைக்கின்றது. அம்மாவின் மீது எவ்வளவுதான் கோபம் என்றாலும் அதை வார்த்தைகளில் சொல்லாது உணர்வுகளால் வெளிப்படுத்தியிருக்கலாம். 'முதுமை' வாழ்வை சிறப்பாகச் சொல்லும் கதை இது.

ஒரு தம்பதியினர் தத்தெடுத்த பிள்ளை, தத்தெடுத்தவர்கள் இறந்துபோக – தத்தெடுத்த பெண்ணின் அம்மம்மாவுடன் வாழுவதை 'உறவின் தேடல்' சிறுகதை சொல்கின்றது.

கொரோனா காலத்தை 'அந்த ஒரு நிமிடம்', 'முள்பாதை' என்ற கதைகள் ஆவணமாக்

குகின்றன. அதே போல 'செல்வம்' என்ற கதை, சமீபத்தில் இலங்கையில் நடந்த எரிபொருள் தட்டுப்பாட்டை, பொருளாதாரப் பின்னணியாகக் கொண்டது. நேர்மையான வழியில் நடக்கும் ஒரு தொழிலாளியின் வாழ்வை இந்தக் கதை சொல்கின்றது. சில கதைகள் முதியோர்களின் வாழ்வையும் முதியோர் காப்பகத்தையும் பேசுகின்றன.

'விதியோடும் மதியோடும்', 'தீதும் நன்றும்', 'உறவின் தேடல்', 'முள்பாதை' எனக்கு மிகவும் பிடித்தமான கதைகள்.

ஒட்டுமொத்தமாக இவரின் கதைகளைப் பார்க்கும்போது,

- ஒரு பிரச்சினை, அதற்கு எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்ற மாதிரியான ஒரு தீர்வு என அமைந்துவிடுகின்ற தன்மையையும்,
- 'முள்பாதை' தவிர்ந்த ஏனைய கதைகள் யாவும் 'தன்மை' நிலையில் நின்று எழுதப் பட்டுள்ளமையையும்,
- 'நாட்டுப்பிரச்சினை' என்ற மையச்சரடு எல்லாக் கதைகளினூடும் பரவிக் கிடப்பதையும்,
- சில கதைகளை சற்று விரித்து எழுதினால் நாவல்கள் உருவாகக்கூடிய விந்தையையும் காணலாம்.

இரண்டொரு களங்களிலே கதைகள் பயணிப் பதால், வாசகர்கள் இலகுவாக கதை பயணிக்கும் தடங்களைப் புரிந்துகொண்டு விடுகின்றார்கள். களங்களும் காட்சிகளும் பச்சைப் பசேலென வாசகரின் மனதை ஈர்த்துவிடுகின்றன. இயல்பான எழுத்து நடை, கதையை உரையாடல்கள் மூலம் நகர்த்தும் தன்மை, வாசகர்களை இலகுவில் கதைகளுக்குள் உள் இழுத்து விடுகின்றன.

இவர் தாய்நாட்டில் இருந்தாலும், உறவு களின் நிமித்தம் லண்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் பயணிப்பவராக இருக்கின்றார். புதிய சிந்தனை, புதிய நோக்கு, புதிய யுக்தி, காலத்தின் கட்டாயமாகின்றது. இவரது அடுத்தடுத்த படைப்புகளில், இதுவரை காலமும் எழுதப்பட்ட கதைகளிலிருந்து சற்றே வேறுபட்ட கதைகளையும் எதிர்பார்க்கின்றேன். வாழ்த்துகள்.

○○○

# இன்னந் துயிலுதியோ

திருவெம்பாவைக் காலம்
மணிவாசகனின் திருவாசத்தில்
மனம் விழிக்கும் கணங்களின்
மகத்துவமான தருணமிது

திருவெம்பாவை தரும்
ஆன்மீக அலை கடந்த
அனுபவம் அது
பாடுகின்ற வேளையெலாம்
பதறி மனம் துடிக்கும்

செத்த இருப்பின்
நிலை உணர்த்தி
செயற்பட அழைக்கும்
திருவாசகத்தும் உருகாத எம் இருப்பு

சடங்காக பாடி
மணியடித்து சங்கூதி
மணிவாசகனை மடக்கும்
நிலை வேண்டாம்

சொல்லிய பாட்டின்
பொருளுணர்ந்து வாழ்வோம்
இன்னம் துயிலுதியோ...



**–பேராசிரியர்**
**என்.சண்முகலிங்கன்**



# ஏக்கம்

என்னதான் என்னதான் முகம் பார்த்துக் கதைத்தாலும்... பதினைந்து வருடகாலம்.. இளையவள் வயிற்றில் தங்கியபோது போனவர்... இப்ப அவளும் இந்த முறை ஓ.எல். எடுத்து... மூத்தவள் ஏ.எல். எடுத்து.....

அம்மா நீங்க அப்பாவை கல்யாணம் கட்டி சொந்தங்களைப் பிடித்து வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டு, அவர் கூப்பிடுவார், எடுத்துப் போடுவார் என்று... காத்திருங்கோ என்று பிள்ளைகள் விரக்தியாகச் சொல்லும் போது கவலையாகத்தான் இருக்கும்.

என்னதான் செய்வது...? பிரான்சுக்கு எடுக்கிறது கஷ்டம் என்று அவர்... மட்டுமல்ல கதைக்கிற எல்லோரும்தான் சொல்கிறார்கள். அவர் போனபோது பிள்ளைகளை வளர்த்தெடுக்கிற பிராக்கில்... காலம்போனது.

அப்ப எனக்குப் பத்தொன்பது வயது. அப்பா, அம்மா, பிள்ளைகள்... என காலம்போனது.

அப்ப இப்ப போல முகம் பார்த்துக் கதைக்கிற வசதியுமில்லை... ஏன் அடிக்கடி போன் கதைக்கிற வசதியுமில்லை. ஆனாலும்...

ஆனாலுமென்ன ஏதோ அப்பா, அம்மாவின் வேலைகள் பிள்ளைகளின் படிப்பு... பள்ளிக்கூடம், ரியூசன் ஏத்தி - இறக்கல் என்று ஓடிச் சென்றது வாழ்க்கை.

பிள்ளைகள் சாமத்தியப்பட்ட போதும் ஏன் அம்மா, அப்பா? தவறியபோதும்... அதைவிட அவரின் தாய், தகப்பன் தவறிய போதுங்கூட வரமுடியவில்லை.

வந்தா போக முடியாது என்கிற நிலைமை...

நாற்பத்தைந்து இலச்சம் செலவழித்துப் போய்... பதினைந்து வருடமாகியும் சிற்றிசன் கிடைக்காம... இன்னும் களவில வேலை செய்து... காசை மாத்திரம் அனுப்பிக் கொண்டிருக்கிற நிலைமை அவருக்கு...

இடையில ஒருக்கா இந்தியாவுக்கு வாங்கோ என்று கேட்கவும் செலவை யோசிச்சு வேண்டும் கூறி, எப்படியாவது எங்களைக் கூப்பிடுற வழியைப் பாருங்கோ என்று நான் சொல்லி...

அப்படியிருந்தும் இன்னமும் கூப்பிட முடியாத நிலை...

இது என்ரை தலைவிதியோ...? பலனோ...? என என்னையே நான் கேட்பதுண்டு.

இப்ப முகம் பார்த்துக் கதைப்பதால் பிள்ளைகள் ஓரளவு சந்தோஷமாய்த் தான் இருக்கினம். ஆனால்... நான்?

அன்றும் பிள்ளைகள் உடுப்புக் கடையில் நின்று, இதை எடுக்கவே - அதை எடுக்கவோ என்று காட்டிக் காட்டி கேட்டு, காசைப்பற்றி யோசிக்காதேங்கோ... எது உங்களுக்குப் பிடிக்கிறதோ... அதை எடுங்க என்று சொல்லி நல்ல சந்தோஷமாக கதைத்து தகப்பனும் பிள்ளைகளும் இருந்தாங்கள்.

அம்மாவுக்கும் நல்லதாக அவவுக்குப் பிடிச்சதாக... உடுப்புகளை எடுக்கச் சொல்லி கூறுகிறார்.

நான் எனக்கு இப்ப எடுக்க வேண்டாம். நானிப்ப எங்கை உடுத்துப் படுத்து போகப் போறன்?

வேண்டாமெனப் பிடிவாதமாகச் சொல்லி விட்டன்.

பிறகு எனக்குப் போன் எடுத்து ஏன் அப்படிச் சொன்னீங்க என்று கேட்க, இல்லை நான் எங்கை போகப் போறன். பிள்ளைகள் தான் ஏதாவது பங்சன் அது இதென்று திரிவாங்க என்றேன்.

இல்லை உடுத்துப் படுத்து என்று சொன்னீங்க...

ஓ... ஓரிடமும் போறேல்லைத்தானே...

உடுத்து சரி... படுத்து...?

ஓ... பகிடி விடுறீங்களோ...? இப்ப இப்ப அதில்லாக் குறைதானே...

உண்மைதான்... அது இல்லாத குறைதான்.

சும்மா விசர்க்கதை கதைக்காதேங்கோ... மூத்தவளுக்கு ஏதாவது ஒழுங்கைப் பாருங்கோ என்று சொல்லி கதையை நிறுத்தீட்டன்.

பிறகு ஏ ஜோக்ஸ் ஒன்று? சொல்லட்டோ...? என்று நிலைமை தெரியாமல் கதைச்சுக் கொண்டிருப்பார்.

இப்ப கதைத்துணை தான் எனக்கு வேண்டுமென்று நினைக்கிறாரோ...?




ந.பார்த்திபன்
வவுனியா



**ரிஸ்மியா நாகூர்கனி ஹாபி**
லண்டன்

**பி**ரகாஷ் மதிய உணவை முடித்துவிட்டு, அதே இடத்தில் கால்களை நீட்டி இளைப்பாறிக் கொண்டிருந்தான். மின்விசிறி வீரியமாக சுற்றிக் கொண்டிருந்தது, இந்த வெயில் வேளையில் சற்று இதமாகவே இருந்தது. பெட்டா பஜாரில், ஒரு துணிக்கடையில் தினக்கூலியாய் ஆறு நாட்களும் கடினமாக உழைக்கும் பிரகாஷிற்கு, ஞாயிற்றுக்கிழமைகள் என்பது மிகப் பெரும் வரம்.

கார்த்திகா வெளியே செல்ல ஆயத்தமாகி, பிரகாஷ் இருக்கும் அறைக்கு வந்தாள். ‘‘அப்பா நான் லைப்ரரி போய்ட்டு வாரேன்’’ என கண்ணாடி பார்த்து தன் அழகை சரி செய்தவளாய், பிரகாஷிடம் தகவல் சொன்னாள். ‘‘ஏம்மா ஞாயித்துக்கிழமையும் அதுவுமா லைப்ரரிக்கு?’’ அப்பாவியாய் பிரகாஷ். ‘‘ஏ லெவல் ப்ராஜெக்ட் விஷயமா கொஞ்சம் புக்ஸ் படிக்கணும். சல்லி வேணும்’’ என்றாள், கண்ணாடி பார்த்தபடியே. தன் சட்டைப் பையிலிருந்து மூன்று நூறு ரூபாய் தாள்களை மகளிடம் கொடுத்து, ‘‘பத்திரம்மா… இருட்ட மொத வந்துறு" என்றான் பிரகாஷ் சராசரி அப்பனாய்.

நூலகத்தின் கேன்டீன் இருக்கையில் அமர்ந்தபடி, தன் கைக்கடிகாரத்தின் முட்களின் ஓட்டத்தை வெறுப்பாய் ரசித்துக் கொண்டிருந்தாள் கார்திகா. இடையிடையே கேன்டீன் வாசலையும் பார்த்திட தவறவில்லை அவள். சிறிய நேரத்தின்பின், அவள் முகம் மலர்ந்தது, ‘சுபஷ்’ஐக் கண்டு. தன் பதின்ம வயதில் இருக்கும் பருவ மங்கையின் முகமலர்ச்சியின் அர்த்தத்தை சொல்லவும் வேண்டுமோ?

உரையாடல் நீண்டது. சாப்பிடுவதற்கு ஏதும் வாங்கி வாரேன் என்று, கார்த்திகா எழுந்துபோனாள். அப்பா தந்த நூறு ரூபாய் தாள்களைக் கொடுத்து இரண்டு பேஸ்ட்ரிக்கள் வாங்கி வந்தாள். இருவரும் ருசித்தனர், ரசித்தனர், சிரித்தனர்….

ஆறு மணியாயிற்றே மகளை இன்னும் காணவில்லையே என வாசலுக்கு வந்துவிட்டான் பிரகாஷ். ஆறே முக்கால் இருக்கும், தெருமுனையில் கார்த்திகா வருவதைக் கண்டு ஆசுவாசமானான் அவன். தூரத்தே கார்த்திகா நடந்து வரும் அழகை ரசித்தபடியே, அவனின் கனவுலகம் விரிந்தது.

‘‘அக்கௌன்டன்ட் கார்த்திகா, கைகளில் பெரிய பைல்களோடு, ரெண்டு உதவியாளர்கள் அவள் பின்னால், பெரிய வண்டியில் வந்திறங்கும் எண்ட மகள் கார்த்திகா….’’

❍❍❍



# வீரத் தமிழ் வேந்தர்கள்

தமிழன்னை பெற்றெடுத்த
தானைத் தலைவர்கள்
தமக்கெனவே வாழவில்லை
தமிழருக்காய் வாழ்ந்தவர்கள்
இரவு பகல் பார்க்கவில்லை
இன்ப துன்பம் ஏதுமில்லை
விடியலுக்காய் வாழ்ந்து வீழ்ந்த
வீரத் தமிழ் வேந்தர்கள்
ஈழத்திரு மாதர் பெற்ற
ஈகைக் கொடை வள்ளல்கள்
தரணி யெங்கும் போற்றும் நல்ல
தன்மானத் தமிழர்கள்
உறவுகளைக் காப்பதற்காய்
உயிர் நீத்த தெய்வங்கள்
விடுதலைக் காய்ப் பாடுபட்டு
விடி வெள்ளி ஆனவர்கள்

பஞ்சமகா பாதகங்கள்
நெஞ்சினிலே நினைப்பதற்கே
அஞ்சித் துடித்த காலமொன்று
நீதி நேர்மை நியாயம் என்று
நிதமும் வாழ்ந்த காலமொன்று
சட்ட திட்டம் மற்றும்
சமத்துவம் காத்த காலமொன்று
சாதி மத பேதமின்றி
சகோதரராய் வாழ்ந்த காலமொன்று
அண்ணன் தம்பி யென
அன்பால் சேர்ந்த கூட்டமொன்று
அல்லும் பகலு மென
அயரா துழைத்த காலமொன்று
அதிகார வர்க்கம் செய்த
சதிகாரச் சூழ்ச்சி யினால்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
அவனியிலே வாழ் கின்றோம்
கண்ட கனவெல்லாம்
கனவாகிப் போன தென்ன
தமிழருக்காய் பாடுபடத்
தரணியிலே யாரு மில்லை

தமிழராய்ப் பிறந்து விட்டால்
தமக்கெனவே ஒன்று மில்லை
சென்ற இடமெல்லாம்
சிறு பான்மை இனம் தானே

நாட்டுக்கும் வீட்டுக்கும்
நன்மை பல செய்திடுவோம்
ஒற்றுமையே உயிர் மூச்சு
ஒன்றுபட்டு வாழ்ந்திடுவோம்
நாம் ஆற்றும் நற்பணியில்
நமக்காகப் பாடுபட்ட நம்மவர்கள்
நம்முள்ளே என்றென்றும்
நலமாக வாழட்டும்
அன்பை மட்டும் காத்திடுவோம்
அறத்தின் வழி வாழ்ந்திடுவோம்
அமைதி நிலை நாட்டிடுவோம்

விடுதலைக்காய் விடை தந்த
வீரத் தமிழ் விடி வெள்ளிகளுக்கு
வீர வணக்கம்.
வாழ்க தமிழ்... வளர்க தமிழ்

- **அநபாய சோழன்**
பிரிஸ்பேன், அவுஸ்திரேலியா.






ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

**அ**டுத்த நாள், ஆகஸ்ட் ஒன்று. தந்தையுடைய நினைவு தினம்.

அல்லா, எத்தனை வருடங்கள் ஓடிப் போய் விட்டன!

பொருளாதாரப் பின்னடைவுகளால், கடைசிக் காலங்களில் பெற்றோரை வசதியாய் வைத்துக் கொள்ள இயலாமற்போன சோகம் மனசுக்குள்ளே இன்னும் கனத்துக் கிடக்கிறது. தாய் தந்தையுடைய நினைவு தினங்களில் நோன்பு நோற்று ஓரளவு ஆறுதல் அடைந்து கொள்கிறேன்.

உத்தமத் தாய் தந்தையின் நினைவுகளோடு, ஒரு நாள் முழுக்க வயிற்றுப் பசியோடிருப்பது ஓர் இதய அஞ்சலி.

அடுத்த நாள், ஆகஸ்ட் ஒன்று. தந்தையுடைய நினைவு தினம்.

“நாளக்கி நா நோம்பு. காலைல மூணு மணிக்கி சஹர் பண்ணனும்” என்று மனைவியிடம், ராத்திரி, சஹர் உணவுக்கு விண்ணப்பம் வைத்தபோது, “காலையில மூணு மணிக்கி சஹர் பண்ணனும்னு ராத்திரி எட்டு மணிக்கே சொல்றீங்க? ரெண்டு அம்பத்தஞ்சிக்கு என்ன எழுப்பிச் சொல்லலாம்ல?” என்று, குதர்க்கமாய் ஓர் இடி இடித்தாள்.

இவளிடம், ஆனானப்பட்ட இடிகளையெல்லாம் வாங்கி, மரத்துப்போன இந்த இடிதாங்கி இதயத்துக்கு, இந்த, வீரியம் குறைந்த இடி அப்படியொன்றும் உறைக்கவில்லை. ஓர் அடி மாதிரித்தான் இருந்தது. அடித்தாலும் இடித்தாலும், இரக்கங்கொண்டு, ரைஸ் குக்கரில் உலை வைத்து சஹருக்கு சாப்பாட்டைத் தயார் செய்து உதவினாள்.

ஆனால், கடுமையான இடியயான்றைப் பிறகு இறக்கி வைத்தாள்.

“இறந்துபோன பெற்றோருக்காக நோன்பு நோற்பதற்கு இஸ்லாத்தில் அனுமதியில்லை” என்று, வில்லங்கமான வசனமொன்றைப் பட்டும் படாமலும் வாட்ஸ்அப் குரூப்பில பதிவு செய்து ஆத்ம சாந்தியடைந்தாள். ஏதோ இவளால் ஆனது.

இஸ்லாத்தின் ஏகபோக அத்தாரிட்டி, அம்மையார்தான்.

அம்மையார், பின்னேரம், “ராத்திரிக்கி ஆட்டோ ஒண்டு புடிச்சிக்கிட்டு, அப்பிடியே கடலையொட்டி, ஒரு ரைடு போய், கொழும்பு ப்ளான் ரோடுல ஆபித் ரெஸ்ட்ராண்ட்ல டின்னர் சாப்ட்டுட்டு வருவோம்” என்று ஓர் அரசாணை பிறப்பித்த போது, சிரமேற்கொண்டு ஏற்றுக்கொண்டேன்.

வேலை வெட்டியில்லாத புருஷனுக்கு தண்டச்சோறு போட்டுப் பராமரிக்கிற புண்ணிய வதியோடு முரண்பட, எமக்கென்ன விசரே?

ஆபித் ரெஸ்ட்ராண்ட் மெனு கார்டில் எல்லா உணவு வகைகளும் ரெண்டாயிரத்துக்கு மேலே தான் இருந்தன, முட்டை பிரியாணி ஒன்றைத் தவிர. அதுவும்கூட ஆயிரத்தி நூறு.

நான் பவ்யமாய் முட்டை பிரியாணி ஓடர் செய்ய, இவளோ குல்ச்சா, எறால் மசாலா, வட்டலாப்பம் என்று விலையுயர்ந்த ஐட்டங்களை முன்மொழிந்தாள்.

பில், ஐயாயிரத்திச் சொச்சம்!

முட்டை பிரியாணியைக் காலி செய்துவிட்டு, நான் வழக்கமாய்ச் செய்கிற புண்ணிய காரியத்தைச் செய்தேன்.

காலித் தட்டுகளை அகற்றிவிட்டுப் பணிவாய், ஓர் ஓரமாய் நின்றிருந்த வெய்ட்டரைப் புன்னகையோடு அணுகி, அவருடைய கைகளைப் பற்றிக் குலுக்கினேன்.



“சார், நா மெட்ராஸ்லயிருந்து வாறன். இந்தக் கொழும்புச் சாப்பாட்டுக்கு எங்க மெட்ராஸ்ல என்ன சொல்லுவாங்க தெரியுமா?”

“சொல்லுங்க தொர.”

“செம டேஷ்ட்!”

“ஓ! ரொம்ப நன்றிங்க தொர. அடிக்கடி வாங்க.”

“இன்ஷா அல்லா, வருவேன்.”

ஆட்டோவில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த வழியில், வீட்டுக்கருகில் காய்கறிக் கடையில் கொஞ்சம் நிற்கச் சொல்ல, அந்த சிங்கள சாரதி ஆட்டோவை நிறுத்தினார்.

சென்னையிலெல்லாம் வழியில் நிறுத்தியுதவ மாட்டார்கள். பாய்ன்ட் டு பாய்ன்ட்தான்.

காய்கறிக் கடையிலிருந்து கிளம்புகிற தருணத்தில், தாடி வளர்த்திருந்த, தொப்பி அணிந்திருந்த வறியவரொருவர் ஆட்டோவை நெருங்கி, “நோனா, பசி, ஏதாவது குடுங் கோவன்” என்று, இவளிடம் கையேந்த, “சரி சரி, போங்க போங்க” என்று விரட்டினாள், இரக்கமேயில்லாமல்.

பசியென்று வந்து கையேந்துகிறவனுக்கு தர்மம் செய்யக்கூட இஸ்லாத்தில் அனுமதி இல்லை என்று நினைத்துக்கொண்டிருக்கிறாளோ என்னவோ! அதை நான் இவளிடம் கேட்டால், நாளைக்கு நான் பசித்திருக்க நேர்ந்தாலும் நேரலாம்.

அந்தப் பெரியவர் ஏமாற்றத்தோடு அகன்று, சோர்வோடு நடந்து போனதைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது.

ஐயாயிரம் ரூபாய்க்கு ஹோட்டேலில் தின்றவள், பசித்த வறியவரொருவருக்கு ஓர் ஐம்பது ரூபாய் யாசகம் கொடுத்தால் திவாலாகிவிடவா போகிறாள்? கொடுக்க மனசு வரவில்லையே என்கிற மனவலியோடு வீடு வந்து சேர்ந்த போது, மனசில் ஒரு ஹிடன் அஜெண்டா உருவாகியிருந்தது.

வீட்டுக் கதவை அவள் திறந்ததும், அவளை முந்திக்கொண்டு வீட்டுக்குள்ளே நுழைந்தேன்.

“கதவ மூடாதீங்க, நா வெளிய போகணும். அர்ஜன்ட்டா ஒரு ஃபோட்டோக் கொப்பி எடுக்கணும்” என்று ஒரு பொய்யை எடுத்து விட்டு, வெற்றுத் தாள் ஒன்றை சுருட்டியெடுத்துக் கொண்டு வெளியேறினேன்.

“அது என்ன பேப்பர்?” என்று என்னிடமிருந்து அந்த வெற்றுத் தாளைக் கைப்பற்றியிருப்பாளென்றால் நான் கையும் பொய்யுமாய்ப் பிடிபட்டிருப்பேன். இவள் சந்தேகங்கொள்ளவே அவகாசந்தராமல், விரைவாய், வெற்றிகரமாய் வெளியேறினேன்.

விரைவாய், வெற்றிகரமாய் வெளியேறியவன், எங்களுடைய பாமன்கடை ஒழுங்கையிலிருந்து வெளிக்கிட்டு, பிரதான சாலையான டபுள்யு. ஏ. ஸில்வா மாவத்தையை அடைந்து, சாலையின் ரெண்டு புறமும் தூரப்பார்வை செலுத்தியும் அந்த வறியவர் கண்ணுக்குத் தென்படவில்லை.

மனசைத் தளர விடாமல், மேற்கு நோக்கி விரைந்தேன். இடது பக்கம் திரும்பி, ஹம்டன் ஒழுங்கைக்குள்ளே புகுந்து புறப்பட்டேன், பிறகு, திரும்பவும் கிழக்கு நோக்கி எட்டி நடை போட்டேன். பெரியவர் காணக் கிடைக்கவேயில்லை. பரவாயில்லை, நாளையோ நாளை மறுநாளோ கட்டாயம் கண்ணில் படுவார் என்கிற நம்பிக்கையோடு, திரும்பி நடக்கையில், பள்ளியை

அடுத்து இருக்கிற உணவு விடுதியின் வாயிலில் இன்னொரு யாசகர் கண்ணில் பட்டார். அவரும் தாடி வளர்த்திருந்தார், தொப்பி அணிந்திருந் தார். ஹோட்டேலில் சாப்பிட்டு விட்டு வெளியே வந்திருந்த, ஏழெட்டுப் பேர் இருந்த ஒரு குழுவினர், அந்த யாசகரைப் பற்றிய ப்ரக்ஞையே இல்லாமல் தங்களுக்குள்ளே சிரித்து அளவ ளாவிக் கொண்டிருக்க, அந்தப் பரிதாபகரமான நபர் கையேந்தியபடியே நின்றிருந்தது, அவர் களுடைய கவனத்தைக் கவராவிடினும் என்னு டைய கவனத்தை ஈர்த்தது.

அந்தப் பழைய வறியவருக்காக நான் விரலிடுக்கில் தயார் நிலையில் வைத்திருந்த நூறு ரூபாய்த் தாளை இந்த யாசகரிடத்தில் கையளித்துவிட்டு, அவருடைய, விழிகள் பனித்த நன்றிகளைப் பெற்றுக்கொண்டு நகர்ந்தேன்.

உருது மொழியில், பிரசித்தி பெற்ற சொலவடை ஒன்று உண்டு :

தானே தானேப் பர் லிக்ஹா ஹய், க்ஹானே வாலேக் கா நாம்.

“ஒவ்வொரு பருக்கையின் மேலேயும் எழுதி யிருக்கிறது, அதை உண்ணப் போகிறவனின் பெயர்.”

அதேபோல, ஒவ்வொரு ரூபாய்த்தாளின் மேலேயும் அதை அடையப்போகிறவனுடைய பெயரும் எழுதியிருக்கிறது.

என்னுடைய விரலிடுக்கிலிருந்த அந்த நூறு ரூபாய்த் தாளில், அந்த வறியவருடைய பெயர் எழுதப்படவில்லை, இந்த யாசகருடைய பெயர் எழுதப்பட்டிருந்திருக்கிறது.

எப்படியோ, ஒரு பசித்த வயிற்றுக்கு என்னுடைய பணம் போய்ச் சேர்ந்திருக்கிறது.

இலங்கையிலும் இந்தியாவிலும் பசித்த வயிறுகளுக்கா பஞ்சம்!

அந்த, மற்ற பசித்த வயிறையும் நான் காண்பேன், நாளையோ நாளை மறுநாளோ, அல்லது அதற்கடுத்த நாளோ, நான் சென்னைக்குப் பயணமாவதற்கு முன்னால் ஒரு நாள் எப்படி யாவது அந்த வறியவரை இறைவன் எனக்குக் காட்டுவான் என்கிற நம்பிக்கையோடு வீடு வந்து சேர்ந்தேன்.

வீட்டுக்கு வந்து சேர்ந்த பிறகுதான் ஒரு விடயம் உறுத்தியது.

அல்லா, நான் நூறு ரூபாய் வழங்கிய அந்த யாசகருக்கு ஒரு சலாம் சொல்ல விட்டுப் போச்சே!

○○○

# கானல் நீராகிப் போன கண்ணீர்

உலர்ந்து போன
கண்ணீர்த் துளிகளில்
மௌனத் துயரங்கள்
மறைந்திருக்கும்!

மனது கனத்திடும்
வடுக்களில்
நிலவே சாட்சியாகும்!

பழைய டயரியின்
பக்கங்களாக
மறக்கவியலா நினைவுகள்
மௌனமாகப் புரட்டப்படும்!

அந்த ஒருவருக்காக
திறந்திருக்கும்
இதயக் கதவுகள்
நிசப்தமாய் வருந்தி ஏங்கும்!

ஒவ்வொரு நினைவினுள்ளும்
ஏதோ ஒரு துடிப்பு
அமைதியாக
அடங்கிப் போகும்!

கானல் நீராகிப் போன
கண்ணீர்த் தடங்களில்
ஏதோ ஒரு அமைதி
சூறாவளியாய் சுழன்றடிக்கும்!!!

**– வெலிகம ரிம்ஸா முஹம்மத்**

நூல் விமர்சனம்

# தேனும் மருந்து, தேன்குயிலும் மருந்து




**ப**ல இலக்கியங்களின் பாடுபொருளாகக் குயில் இருந்தமையை யாமனைவரும் அறிவோம். "குயில் வாய் அன்ன கூர்முகை அதிரல்" என்கிறது புறநானூறு. குயிலின் பாடல் வசந்தத்தின் வருகையை உணர்த்தி நிற்பது. மனிதனது நல்ல குணங்களே அவனை உயர்ந்த இடத்தில் வைப்பவை என்கிறது அகநானூறு. குயிலின் குரலைப்போன்று மனிதனும் இன்மொழி பேசினால் அன்பும் மதிப்பும் பெறுவான் என்பார் வள்ளுவர். இவ்வாறெல்லாம் சிறப்புப் பொருந்திய குயில், நூல் வடிவில் சோலைக்குயில், விழிசைக்குயில், குயில்கள், பூங்குயில் என்று தொடர்ந்து ***கோகிலா மகேந்திரன் அவர்கள் பவளவிழாவை அண்மித்துள்ள இப்போதில் தேன்குயிலாகப் பரிணமித்துள்ளது***.

விழிவழி வந்தவை, விழிநோக்கி வந்தவை, விழியுடன் சேர்ந்து வந்தவை என மூன்று பகுதிகளைக் கொண்டது இம்மலர். முதல் பகுதியில் திருமதி கோகிலா மகேந்திரனின் தெளிந்த, தூய்மையான, அரிய ஆக்கங்கள், அரியத்தினால் குவிக்கப்பட்டதுபோல் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. விழிநோக்கி வந்தவையில் மதிப்பார்ந்த எழுத்தாளர்கள், அறிஞர்கள், அவரது மாணவர்கள், சோலைக்குயில்கள் போன்றோரின் ஆக்கங்களும், மூன்றாம் பகுதியில் பிறிதொரு எழுத்தாளருடன் இணைந்து எழுதிய ஆக்கங்களும் இடம் பெறுகின்றன. பெரும்பாலான ஆக்கங்கள் வெவ்வேறு காலங்களில் வெளியிடப்பட்டவை. ஒரு சில ஆக்கங்கள் மட்டுமே இம்மலர் வெளிவரும் காலத்தில் எழுதப்பட்டவை. இவை எல்லாவற்றையும் பிரித்துத் தொகுத்து நேர்த்தியான வெளியீட்டைச் செய்திருக்கிறது சோலைக்குயில் அவைக் காற்றுக் களம்.

திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களின் தந்தையாராகிய ***விழிசைச் சிவம்*** அவர்களுடனும், அவரிடம் சிறிதுகாலம் கற்றவரும் யாழ்ப்பாணமே இருகரம் போற்றி வணங்கும் தகைமை உடையவருமாகிய ***சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி*** அவர்களுடனும் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் முதல் கட்டுரையாகிய "குருவும் கெழுவும் திறன்னாகும்மே" என்பதில் விபரிக்கப்படுகிறது. அந்தக்காலத்து மனிதர்களின் குருபக்தி, பண்பாடு, மரியாதை ஆகியவற்றை எடுத்துக் காட்டும் இச்சம்பவம் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டும் ஆசிரியர்களையே மாணவர்கள் விரும்பவும் பின்பற்றவும் செய்வார்கள் என்பதையும் கூறுகிறது.

"சுந்தரர் அடியார்க்கும் அடியேன் என்கிறார். நாங்களும் எங்கள் அடுத்த தலைமுறையும் எதற்கு அடிமையாக இருக்க விரும்புகிறோம்?" என்று கேட்கும் அடுத்த கட்டுரையில்,"மிக விரைவிலேயே தென்திசை அதிபரிடம்போக விசா எடுத்துவிடுகிறார்கள்" என்ற பகுதியை ரசித்து வாசித்தபோதும்கூட, இருகைகளிலும் இருவேறு அட்ஷய பாத்திரங்களை ஏந்திய வண்ணம் சுயநினைவின்றி வலம்வரும் இந்த இளைஞர்கள் மனதில் ஒருவித பயத்தை ஏற்படுத்துகிறார்கள். சமகாலத்துக்குத் தேவையான ஒரு விழிப்புணர்வுக் கட்டுரை அடியார்க்கும் அடியேன்.



**சிவானந்தி பாஸ்கரன்**

பதின்ம வயது மாணவர்களைப் பெற்றோரும் ஆசிரியரும் கையாள்வது எப்படி என்பது தொடர்பாக உளவியல் நிலைநின்று இரு கட்டுரைகள் இடம்பெறுகின்றன. ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் பல அவசிய விடயங்கள் கொண்டவை அவை.

நாம் வாழ்வின் முழுமை பற்றி அறிந்திருப்போம் - கட்டுரை ஆசிரியர் முதுமையில் எவ்வாறு முழுமை பெறலாம் என்பதற்கான வழிகாட்டுதல்களைத் தருகின்றார். கம்பராமாயணத்தில் தசரதன் தனது முதுமையை உணர்ந்து இளமைக்குரிய உற்சாகத்தைத் தொலைத்தமையைக் கூறும் அழகான இடம் ஒன்று வரும். இங்கு அன்பு, அறிவு, பொறுமை, அனுபவம் என்பன வளரும் பருவமே முதுமை என்கிறார் ஆசிரியர்.

படைப்பின் அழகு படைப்பாளனின் படிப்புத் திறனில் இருந்து வெளிப்படுகிறது என்பார் ***எப்.ஆர்.லூயிஸ்***. அவ்வகையில் ***சோ.ப.*** அவர்களின் மொழிபெயர்ப்பு நூலாகிய *Heaven with hell* பற்றிய மதிப்பீட்டுரையானது உலகைப் புதிய கோணத்தில் தரிசிக்கவும், சிந்திக்கவும், எண்ணவும் வைக்கிறது. நேர்மையான ஒரு மதிப்பீட்டாளரின் செல்நெறிகளோடு கோகிலா மகேந்திரன் காணப்படுகிறார் எனலாம்.

"உப்புநீரில்'' என்ற கட்டுரையில் அளவெட்டியில் இருந்து தனக்குக் கற்பித்த ஒவ்வொரு ஆசிரியர்களையும் நினைவு கூர்ந்து அவர்களது தோற்றப்பொலிவினை வரிக்குவரி மனக் கண்ணில் மீட்டுகிறார். அவர்களது ஆளுமைப் பண்புகளை அடையாளம் காட்டுகிறார். ஞாயிறு வகுப்பில் அதிபர் தெ.து.ஜயரத்தினம், ஆசிரியர்கள் பொ.கனகசபாபதி, செ.கதிரேசர் பிள்ளை என்ற பெயர்கள் ஒலிக்காத நாள் அரிது. இக்கட்டுரையில் தனது ஆசிரியர்களுக்கு நன்றி கூறும் அதே சமயம் சுய சிந்தனைக்கும் தெரிவுகளுக்கும் இடம்விட்டு வாழும் முன் மாதிரியான ஆசிரியர்கள் மாணவரின் ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்துகிறார்கள் என்கிறார். அளவெட்டியில் இருந்து எட்டிக் கால்வைத்தால் வாணியின் வீடு (மகாஜனா) எனும் வரியை நயந்து வாசித்தேன்.

***ராஜராஜஶ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்*** அவர்கள் எவ்வாறு சுயதிறன் நிறைவுபெற்றார் என்பதைக் கட்டுரையாசிரியர் அவருக்கான அஞ்சலிக் கட்டுரையில் கூறுகிறார். பிரார்த்தனையின் சக்தி ஆற்றலை உருவாக்குகிறது. நல்ல பிரார்த்தனையை நம் ஆழ்மனம் ஊடுருவ அனுமதித்தால் பிரச்சினைகளில் இருந்து மீள அது வழிகாட்டும் என்பார் ***நார்மன் வின்சென்ட் பீல்*** என்ற அறிஞர். சுயதிறன் நிறைவு பெற்ற மாந்தர்கள் ஒரு சமூகத்திற்கே முன்னேற்ற சக்தியாய் மாறுகின்றனர் என்ற கருத்து இக்கட்டுரையினூடு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

***குப்பிளான் ஐ. சண்முகன்*** போன்ற எழுத்தாளர்களின் இழப்புத் துயரைச் சோலைக் குயில்கள் இந்த மலரிலும் பகிர்ந்திருப்பதானது அத்துயரை உளவியல் ரீதியாக ஈடுசெய்யும் ஒரு வழியாக அமைவதோடு எழுத்தாளருக்குக் கொடுக்கும் மதிப்பாகவும் அமைகிறது.

கோகிலா மகேந்திரனின் நேர்காணல் ஒன்று பதிவாகியுள்ளது. அதில் "பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பாக என்ன கூற விரும்புகிறீர்கள்?'' என்ற வினாவின் விடை என்னைத் தெளிவித்தது. அது எப்படி ஒரு நச்சுவட்டமாக மாறி ஆரோக்கியமற்ற சமுதாய நிலை ஒன்றுக்கு இழுத்துச் செல்கிறது என்பதை அவ்விடை குறிப்பாக முன்வைக்கிறது. சமகாலத்தில் பாடசாலைகளில் ஆசிரியர் சந்திக்கின்ற பெரும் பிரச்சினையாக இது காணப்படுகிறது. பெரும்பாலான மாணவர்கள் ஆக்ரோஷ நடத்தைகளையும், வன்முறைச் செயற்பாடுகளையும் வெளிப்படுத்துவோராக இருப்பது கவலையளிக்கும் ஒரு விடயமாகும்.

ஒரு ஞாயிறு வகுப்பில் ***கே.எஸ்.சுதாகரின்*** "பால்வண்ணம்'' சிறுகதை சுவாரசியமாகக் கலந்துரையாடப்பட்டது. அன்று, கோகிலா மகேந்திரன் அவர்கள் "காதலிப்பது தவறில்லை. அதற்குப் பொருத்தமான வயது, தீர்மானம் எடுக்கும் திறன், உணர்ச்சிகளைச் செம்மைப் படுத்தும் திறன், நடத்தைச் செம்மை போன்ற விடயங்கள் பற்றிப் பிள்ளைகளுக்குத் தெளிவு படுத்த வேண்டும்'' என்று கூறிய கருத்துப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இன்று பாடசாலைகளில் காதல் தொடர்பான உள விளையாட்டுகளும், தற்கொலை முயற்சிகளும் அதிகரித்திருப்பதும் அனைவரும் அறிந்ததே.

***வளர்*** சஞ்சிகையில் வெளியான "மகாப் பிரத்தானம் வேண்டாமே'' என்ற கடிதத்தில்

"தற்காலிகப் பிரச்சினைக்கு அவர்கள் எடுக்கும் நிரந்தரத் தீர்வுதான் தற்கொலை. உங்களுக்குத் தெரிந்த உங்களைவிட உங்களுக்குத் தெரியாத உங்களிடம் அதிக மனவலிமை இருக்கிறது. ஒருவர் தவறான எண்ணங்களுடன் இருக்கும் போது நம்பிக்கையான ஒருவருடன் தம்மனதைப் பகிர்ந்துகொள்வது அவசியமாகும். உளவளத் துணையாளர்கள் நாங்கள் இருக்கிறோம் உங்களுக்கு உதவ!'' ஆகிய வரிகள் முக்கிய மானவை.

விழிநோக்கி வந்தவை என்ற இரண்டாம் பகுதி ***பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா*** அவர்களின் அற்புதமான கவிதையோடு ஆரம்பமாகிறது. "உலகத்தை உன்பால் ஈர்த்தாய்வேடங்கள் புனைந்திடாது விரும்பியே தமிழ்ச் சமூக வேருக்கு நீர்வார்க்கின்ற விந்தையை அறிந்தாய் வாழி'' தன் சொற்களால் நெஞ்சத் திரையில் வரையும் ஓவியப் படிமத்தைக் கையாண்டு தெளிவுடனும் அழகுடனும் தன் வாழ்த்துக் கவியைத் தந்துள்ளார் அவர். "காலநதிக்கரையில் சோலைக்குயில்கள்'' என்ற ***சோ.ப.*** அவர்களின் கவி வாழ்த்து அடுத்துக் காணப்படுகிறது. "அவைக்காற்றுக் களத்தை அச்சாய் ஆண்டனை அம்மணி. எங்கெழிலென் ஞாயிறு எமக்கென நடந்தாய்'' என்று உருவக அணிகளும் தொன் மங்களும் துலங்க, சொற்களில் கூர்மையும் அழகும் பொருந்தும் வண்ணம் தனக்குரிய தனித்தன்மையுடன் காணப்படுகிறது அவரது பா !.

அருட்பணி ***அன்புராஜா அடிகளார்*** அவர்கள் இவரைப்பற்றிக் குறிப்பிடும்போது "அமைதியாக வாழ்ந்துகொண்டு தமிழும் கலையும் வளர்த்து இளைய சமூகத்தை அக்கறையுடன் வளர்க்கும் ஆற்றல் மிகு அறிஞர்'' என்று குறிப்பிடுகிறார். ஆம். ஆழம் நிறைந்தவர்கள் ஆர்ப்பரிப்பதில்லை. இக்கருத்தையே இன் னொரு வகையில் "நாள் முழுவதும் ஒரு மனிதர் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாரோ அதுவாகவே ஆகிறார்'' என்கிறார் வால்டோ எமர்சன். "தான் பெற்றுக்கொண்ட அறிவையும் அனுபவத்தையும் பரவலாக்கி வருகின்றார். இதனை ஒரு சந்ததிக் கையளிப்பாகவே கருதுகிறேன். அதன் வெளிப்பாடே "சீர்மியத்தின் சிறப்பு முறைகள்'' நூல் என்கிறார் ***பேராசிரியர் சா.சிவயோகன்*** அவர்கள். அவரின் கூற்றுப்படி அது சீர்மியருக்கான ஒரு வழிகாட்டிக் கை நூல் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்தத் தரத்திலான சீர்மியருக்கான வழிகாட்டிக் கைநூல் எதுவும் இதுவரை தமிழில் வெளி வரவில்லை என்பதும் நிச்சயம்.

"என்றைக்கு முதல் நாடகவகுப்பு விழி சிட்டியில் நடந்ததோ அன்றே சோலைக் குயில் அவைக்காற்றுக் களம் உருவாகி விட்ட தென்பேன்'' என்கிறார் ***பேராசிரியர் ம.பிரவீணன்*** அவர்கள். அதாவது சோலைக்குயில் அவைக் காற்றுக்களம் 1984-85இல் செயற்பாட்டை ஆரம்பித்துவிட்ட போதிலும் 1988இல் தான் உத்தியோகபூர்வமாகப் பதிவுசெய்யப்பட்டது.

"ஜெயகாந்தனின் கருணையினால் அல்ல குறுநாவலும் கோகிலா மகேந்திரனின் வைகறை குறுநாவலும்-உளவியல் சார்ந்த ஒப்பியல் நோக்கு'' என்ற தலைப்பிலான ***மருத்துவர் சி.சிவகலை*** அவர்களின் ஆய்வுக்கட்டுரை ஒன்றும் காணப்படுகிறது. கதைகளில் வரும் பாத்திரங்களின் உளநிலைகளைத் துல்லியமாக இனம்கண்டு முன்வைத்தமையானது அவர் ஒரு வெற்றிகாணும் வைத்தியர் என்பதை மீள வலியுறுத்தி நிற்கிறது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஐந்தாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மகாநாட்டில் இவ் வாய்வு முன்வைக்கப் பட்டமை வரலாற்றுச் சான்றாக நின்று நிலைக்கக் கூடியது.

"சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்துள் புகுந்தேன். வாழ்க்கையில் வழிகள் பயின்றேன்'' எனக் கவிபாடுகின்றார் ***சதீஷ் பாலமுருகன் முருகையா***.

"விருதுகளுக்குள்ளும் பாராட்டுகளுக் குள்ளும் புகழுக்குள்ளும் மயங்கிவிடாது முதிர்ச்சி யின் கனிவோடும் இளையோரின் வேகத்தோடும் சமூகத்தை நோக்கித் தன் நேசக் கரத்தை நீட்டி அரவணைத்து வருகிறார். மற்றவர்களை எழுத வைக்கும் ஆனந்தத்தைத் தொடர்ச்சியாக அனுபவித்து வருகிறார்'' என்பது விரிவுரையாளர் ***த.அஜந்தகுமார்*** அவர்களின் நோக்குநிலை.

சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் நிகழ்வு ஒன்றைப்பற்றிக் குறிப்பிடும் திருமதி ***புனிதவதி சண்முகலிங்கம்*** அவர்கள் "சகல செயற்பாடுகளும் செய்நேர்த்தியுடன் காணப் பட்டன'' என்கிறார் .

தன்பசுமையான நினைவலைகளை மெல்லிசை நடையில் மனம் லயிக்கும் மொழியில் கட்டுரைக்கிறார் ***வாமதேவன் வலவன்***. “தாயினும் இனியாள் என் அன்புக் கோகிலா'' என்பார் ***சாரங்கா***. ஞாயிறு வகுப்பொன்றில் சாரங்காவின் கவித்துவம் வியந்து கலந்துரையாடப்பட்டதோடு, அவரது “சபிக்கப்பட்ட வெண்முயல்கள்'' என்ற கவிதை சோலைக் குயில் அவைக்காற்றுக்கள நிகழ்வொன்றில் கவிதா நிகழ்வாக அரங்கேறியதும் குறிப்பிடத் தக்கது. ஆம். நல்ல விடயங்கள் எதுவும் தாய்க்குயிலின் கண்களிலிருந்து தப்புவதில்லை. “இணைகரத்தின் அயற்கோணங்கள்'' சிறுகதைத் தொகுதிக்குப் ***புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்*** அவர்கள் வழங்கியுள்ள காத்திரமானதும் கனதியானதுமாகிய அணிந்துரையும் இம்மலரில் இடம் பிடிக்கிறது.

“சமூகத்தின் வழி காட்டி எழுத்தாளர்கள் சமூக மாற்றத்தைத் தூண்டும் சக்தி கொண்டவர்கள். இப்படியான எழுத்தாளர்களில் எமது மதிப்பிற்குரிய ஆசிரியை கோகிலா மகேந்திரன் இலங்கையில் முதன்மையானவர் என்பது மிகையல்ல'' என்று மனம் திறக்கிறார் வளர் காலாண்டிதழ் ஆசிரியர் ***சுப. கிருஷ்ணானந்தன்***.

“மனிதத்துவ நோக்கில் அவர் அவதானித்த உலகப் போக்குகளின்படி சிதைந்து விழும் குடும்ப அமைப்பைச் சீர்ப்படுத்தவேண்டும் எனும் நல்லெண்ணத்தின் விளைவாகவே குடும்பம் ஒரு கதம்பம் என்ற நூல் உருவானது'' என்பது எழுத்தாளர் ***தாட்ஷாயணி*** அவர்களின்பார்வை. அவரது பார்வை மிக நுட்பமானது.

“இணைகரத்தின் அயற்கோணங்கள்'' என்ற ஒற்றைச் சிறுகதை பற்றிய பலரது எண்ணங்கள் வெவ்வேறு விதமாக அமைந்து மனதைப் பிசைந்தெடுக்கிறது. “சரியெனப் பட்டதைச் சகமே எதிர்க்கினும், சரியெனக் கூறும் இயல்பினை வாழிய! பெண்ணின் பெருமை புவியோர்க்குணர்த்திய திண்மை உள்ளம் படைத்தோய் வாழிய!'' எனப் புலவர் ***ம.பார்வதிநாதசிவம்*** அவர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்த்திய வாழ்த்துப் பொருத்தம் கருதி மீளப் பதியப்பட்டிருக்கிறது. “கனிமொழியே, தனிமொழியே'' என்ற புலவரின் தமிழ் வாழ்த்துக்குக் கோகிலா மகேந்திரன் கொடுக்கும் முக்கியத்துவமும் நாம் அவதானிப்பதே.

“விழியுடன் சேர்ந்துவந்தவை'' என்ற மலரின் நிறைவுப் பகுதியில் இரண்டு படைப்புகள் காணப்படுகின்றன. மகாஜனா, யூனியன் கல்லூரிகளின் ஆசிரியரும் மகாஜனாவின் மேனாள் அதிபருமாகிய ***த.சண்முகசுந்தரம்*** (தசம்) அவர்கள் ***சஞ்சீவி***யில் எழுதிவந்த “பட்டாளம் பாட்டா “நடைச்சித்திரம் அவர் நோய் வாய்ப்பட்டதனால் தொடரமுடியாதபோது அப்பணியைத் தனது மாணவியும் தனது நிர்வாகத்தில் பணிசெய்த ஆசிரியையுமான கோகிலாவிடம் ஒப்படைக்கிறார். அவர் சிவப்பேறு அடைந்தபின் அப்பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்றுகிறார் இவர். அக்காலத்தில் காணப்பட்ட ஆசிரியமாணவ உறவின் சிறப்பையும் மாணவியிடம் அவர் அவதானித்த நல்லுறவு, நம்பிக்கை, ஆக்கத்திறன், செய்நேர்த்தி, பொறுப்புணர்வு ஆகியவை வீண்போகாநிலையையும் இங்கு சுட்ட முடியும். ஆசிரியர் எழுதியதற்கும் மாணவி எழுதியதற்கும் இடையில் பேதம் எதுவும் தென்படவில்லை என்பதை, “நடைச் சித்திரத்தின் அபேத நிலையை வாசகர் உணர்வார்கள் என நம்புகிறோம்'' என்று சஞ்சீவி ஆசிரியர் அடிக்குறிப்பிட்டிருப்பது கோடிடுகிறது.

மூன்று பகுதிகளைக்கொண்ட இந்த மலரின் வாசிப்பின்போது வியப்பு, மகிழ்ச்சி, நெகிழ்ச்சி, கவலை, நன்றியுணர்வு என்று பல உணர்வு தொற்றுகள் ஏற்பட்டன. தகவல்கள் பலவற்றையும் ஒன்றுதிரட்டிப் பிரிப்பும் பகுப்பும் செய்து ஆதாரங்களுடன் தொகுத்திருப்பது இம்மலரின் பலம். குற்று, விசிறி, அரவு என்று ஒருசில அச்சுப்பிழைகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். மனதளவில் இந்நூலை வாசிக்கும் போது ஒரு நிறைவு ஏற்படுவதுண்மை. “படித்த ஆசிரியரிடம் உங்கள் பிள்ளைகளை அனுப்பாதீர்கள். படித்துக்கொண்டிருக்கும் ஆசிரியரிடம் அவர்களை அனுப்புங்கள்'' என்ற கூற்றை நினைவில் கொண்டு பவளவிழாக் கண்ட கோகிலா மகேந்திரன் அவர்கள் நீண்ட நெடும்காலம் இன்னும் வாழ்ந்து சமூகத்திற்கான தனது கடமைகளைச் செய்ய வாழ்த்துகிறேன்.

❍❍❍



சிறுகதை

# தொடரும் வலி...




மகேந்திரன் கோவர்த்தனா BA
மகிழவட்டவான்
ஆயித்தியமலை

“அம்மா.... அம்மா... என்ட பச்சை நிற சல்வார் எங்க? வகுப்புக்குப் போக நேரமாகுது...” என்றாள் மீனாட்சி. “அங்கதான் கிடக்கும் உனக்கு என்ன நிறைய உடுப்பா இருக்கு. இரண்டே இரண்டு சல்வார் தானே கிடக்கு தேடிப்பாரு... ”என ஏளனமாகச் சொன்னாள் அவளது தங்கை. சொன்ன வார்த்தை சுருக்கென்று தைத்தாலும் அதை ஒரு புறம் வைத்துவிட்டு வகுப்பிற்குச் செல்லத் தயாரானாள் வேக வேகமாக சைக்கிளை எடுத்துக் கொண்டு வகுப்பிற்கு புறப்பட்டாள். செல்லும் வழியெல்லாம் தங்கை சொன்ன வார்த்தைதான் மனதில் ஓடிக்கொண்டிருந்தது. மீனாட்சி ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண். அவளுக்கு அண்ணா மற்றும் இரண்டு பெண் சகோதரிகள் இருக்கின்றார்கள். மீனாட்சி வீட்டில் இரண்டாவது பிள்ளை. தரம் 12-ல் கல்வி கற்கின்றாள். குடும் பத்தில் அனைவர் மீதும் அதிக அக்கறையும் பாசமும் கொண்டவள். சிறு வயது முதலே பயந்த சுபாவம் கொண்டவள். இந்த சுபாவம் தான் அவளது பலவீனம்.எல்லோராலும் மன முடைக்கப்பட்டாலும் அவள் மற்றவரை காயப் படுத்தியதில்லை. எதிர்த்து பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தாலும் கடந்து சென்று விடுவாள். தன்னால் யாரும் காயப்பட்டு விடக்கூடாது என்பதே அவளது நோக்கமாக இருக்கும். வகுப்பிற்குச் செல்லும் வழி நெடுகிலும் தன் குடும்பத்தின் கடந்த காலத்தை நினைத்துக் கொண்டு சென்றாள்.

ஒரு காலத்தில் அவளது குடும்பம் சந்தோஷ மாகத்தான் இருந்தது. இப்படி சந்தோசமாக இருக்கும் குடும்பத்தில் புயல் வீசப் போகின்றது என்பதனை யார் தான் அறிவார் ? அன்று வெள்ளிக் கிழமை மீனாட்சி பாடசாலை விட்டதும், வீட்டுக்கு வந்து மறுபடியும் நண்பர்களுடன் பிரத்தியேக வகுப்புக்கு சென்று விட்டாள். அப்போது அவள் தரம் 10 படித்துக் கொண்டிருந்தாள். வகுப்பு முடிந்ததும் வீட்டுக்குத் திரும்பினால். வீட்டுக்கு சற்று தொலைவால் வரும்போது தன் வீட்டின் முன்னே அதிகமான சனம் நிற்பதை கண்டாள். இதயம் சற்று பலமாக அடிக்கத் தொடங்கியது தனக்குள் பல கேள்விகள் எழத் தொடங்கின சைக்கிளை வேகமாக மிதித்து வீட்டை வந்த டைந்தால். வீட்டில் ஒரே ஒப்பாரி சத்தம் அவளது உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து அழுது கொண்டிருந்தார்கள். ஆனால் அவ்விடத்தில் அவளது அம்மாவோ அப்பாவோ இல்லை திகைத்துப் போய் சிலை போல் நின்றவளின் காதில் “இந்த நாலு பிள்ளைகளையும் விட்டுட்டு செத்துட்டியேடா..” என்ற வார்த்தை விழவே தரையில் விழுந்து மூர்ச்சை அடைந்தாள்.

சிறிது நேரம் கழித்து மயக்கம் தெளிந்ததும் ஓ.... என்று அழத் தொடங்கினாள் எந்தப் பிள்ளையால்தான் தாங்க முடியும் தன் தந்தையின் இழப்பை. தான் காணாத உலகை தன் பிள்ளைக்கு காண்பிப்பவர் அல்லவா தந்தை. மீனாட்சி தன் தந்தையின் இழப்பை ஏற்கவே முடியவில்லை. நான்கு பிள்ளைகளிலும் மீனாட்சியை அவருக்கு ரொம்ப பிடிக்கும்.அவள் கேட்கும் அனைத்தையும் வாங்கிக் கொடுத்து விடுவார், கோபக்காரர்தான். ஆனால் குடும்பம் மீது அதிக பாசம் கொண்டவர். அவர் இருந்த வரையிலும் எந்த ஒரு குறையும் வைக்காமல்

குடும்பத்தை பார்த்துக் கொண்டிருந்தார்.வீட்டில் உணவிற்கோ, உடைக்கோ, காசுக்கோ பஞ்சம் வந்ததில்லை.பிள்ளைகளுக்கு தேவையான தீன் பண்டங்களை எல்லாம் வாங்கி போத்தல்களில் போட்டு எட்டி எடுக்ககூடிய உயரத்தில் வைத்து விடுவார், நல்லவர்களை இறைவன் தன் பக்கத்தில் இருக்க அழைத்துக் கொள்வார் போலும் அதுதான் இவரின் உயிரையும் எடுத்துக் கொண்டார்.

அவரின் இறப்பின் பின் அவளது குடும்பம் பல சிக்கல்களை எதிர் நோக்க வேண்டி இருந்தது. மீனாட்சியின் வீட்டில் மனக்கஷ்டத்தோடு சேர்ந்து பணக்கஷ்டமும் வந்து சேர்ந்தது.பணம் இருந்தால் மட்டும்தான் உறவுகளும் வீட்டுக்கு வரும் என்பதனை அந்த சமயத்தில் மீனாட்சி உணர்ந்து கொண்டாள். உதவிக்கு யாரும் இல்லாமல் அவளின் குடும்பம் தவித்தது. மூன்று வேளை உணவு கிடைப்பதே கேள்விக்குறியாகிது. யாரும் உதவ மாட்டார்களா? எனத் தவிக்கும் அந்த குடும்பத்தின் மன நிலையை விவரிக்க வார்த்தைகளே இல்லை.

நாட்கள் சென்றன. மீனாட்சியின் பெரியம்மா வின் பிள்ளைகள் கொடுக்கும் ஆடைகளை தான் மீனாட்சி அணிந்து கொள்வாள் அப்பா இருக்கும் போது கஷ்டத்தை காணாத மீனாட்சிக்கு அடுத்தவரின் ஆடையை வாங்கும் போது ஊசியால் குத்துவதைப் போல் வலிக்கும். அவள் என்ன செய்வாள் காலம் தன் ஆட்டத்தை தொடக்கியுள்ளது என நினைத்துக் கொள்வாள். தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டு இருப்பாள்.

மீனாட்சியின் அப்பா இறந்த சில காலங் களிலேயே மீனாட்சியின் அண்ணா தனக்கென ஒரு துணையை தேடிக்கொண்டார். அப்பா இல்லை அம்மாவையும் தங்கைகளையும்தானே பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற தலைமைத் துவத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த சிறு வீட்டில் அவரின் குடும்பமும் வந்து குடியேறியது. சுமைக்கு மேல் சுமை என்ன செய்வாள் மீனாட்சியின் அம்மா கிடைத்த வேலைகளை எல்லாம் செய்து பிள்ளைகளைப் பார்த்துக்கொண்டாள். மீனாட்சியின் தங்கை சுகுணா படிப்பை பாதியிலேயே நிறுத்திக் கொண்டு அதே ஊரைச் சேர்ந்த ஒருவரை காதலித்துக் கொண்டிருந்தாள். இளையதங்கை தரம் 8 கல்வி கற்றுக் கொண்டிருந்தாள். சுகுணாவின் காதலன் சுகுணாவின் செலவுகளைப் பார்த்துக் கொண்டான். சுகுணாவிற்கு விதமிட்டமான ஆடைகள், காலணிகள்,உணவுகள் என எல்லாம் வாங்கிக் கொடுப்பான். ஆனால் சுகுணா அதனை தன் சகோதரிகளுடன் பகிர்ந்து கொள்ள மாட்டாள். தன்னிடம் உள்ளவற்றை எண்ணி அவளுக்கு ஒரு கர்வம் இருந்து கொண்டே இருக்கும். இதனாலையே அவள் மீனாட்சியைக் கேலி செய்வாள். இதனை எல்லாம் மீட்டுப் பார்த்துக் கொண்டே மீனாட்சி வகுப்பு நடைபெறும் இடத்தில் அடைந்துவிட்டாள். வகுப்பு முடிந்ததும் வீடு திரும்பினாள்.

மீனாட்சியின் அம்மா தன்னால் இயன்ற அளவு தனது பிள்ளைகளை பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் பிள்ளைகளுக்காக தனது உடல் நலத்தையும் கணக்கில் எடுக்காமல் வேலை செய்வார். அவரது மனதில் இருந்த ஒரு மிகப்பெரிய கவலை மூன்று பெண் பிள்ளைகளை எப்படி கரை சேர்ப்பது என்பதுதான் இவ்வாறாக காலம் உருண்டோடியது மீனாட்சி உயர்தர பயிற்சி எழுதிவிட்டு முடிவுக்காக காத்திருந்தாள்.

ஒருநாள் மீனாட்சியின் தன்னுடன் படித்த நண்பியின் வீட்டுக்குச் செல்வதற்காக சுகுணாவின் காலணிகளை போட்டுச் சென்று விட்டாள். திரும்பி வீட்டிற்கு வந்ததும் காளியாய் கோபம் கொண்டு நிற்கும் சுகுணாவின் வார்த்தைகள் மீனாட்சி மனதை மிகவும் புண் படுத்தின. என்ன தான் செய்வது கண்களில் இருந்து கண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து ஓடியது. அதையும் தன் மனதுக்குள் அடக்கிக் கொண்டு வீட்டுக்குள் சென்று விட்டாள்.

மீனாட்சியின் அம்மாவைக் காண்பவர் எல்லோரும் ''என்ன மூண்டு பொம்பள பிள்ளை களையும் இப்படியே வச்சுக்கொள்ள போறீங் களா? மூத்தவளப் பார்த்து கட்டி கொடுத் தானே மத்த பிள்ளைகளை கரை சேர்க்க முடியும்.... '' எனக் கதை சொல்லி கொண்டே இருந்தார்கள். ஆனால் மீனாட்சிக்குக் கல்யா ணத்தில் ஈடுபாடு இல்லை. படிக்கவேண்டும் என்ற எண்ணமே மனதில் இருந்தது.

ஒருநாள் மீனாட்சியின் சொந்தக்காரரில் ஒருவர் தனது சித்தப்பாவின் மகனுக்கு மீனாட்சி யைக் கட்டி வைத்தால் நல்லா இருக்கும் என்று மீனாட்சியின் அம்மாவிடம் கதைத்துக் கொண்டி ருந்தார். எப்படியாவது பிள்ளையை நல்ல

இடத்தில் கட்டிக் கொடுத்தால் போதும் என நினைத்து கொண்டிருந்த மீனாட்சியின் அம்மா அவளை கல்யாணத்திற்கு வற்புறுத்தினார். முடியவே முடியாது என வாதிட்ட மீனாட்சிக்கு கிடைத்தது என்னவோ தும்புத்தடி அடிதான்.

மீனாட்சியின் அடுத்த அத்தியாயம் அம்மா வின் வற்புறுத்தலால் ஆரம்பமானது. மீனாட்சிக்கு பேசிய மாப்பிள்ளை ஒருவகையில் அவளின் முறைப்பையன்தான் பெயர் சரவணன். உயர்தரம் வரை படித்துவிட்டு வேலை தேடி வெளிநாடு சென்றிருந்தான். சிறுகால உரையாடலின் பின் மீனாட்சியின் இதயத்தில் அவனுக்கு நீங்காத திருமணம் நடந்தது. அவர்களுக்கு இறைவன் அருளால் குழந்தை வரம் கிடைத்தது.அப்பாவை இழந்தபின் கஷ்டத்தை அனுபவித்த மீனாட்சியின் வாழ்க்கை சரவணனின் வருகையால் மலர்ச்சி கண்டது. ஆனால் வாழ்க்கை இலகுவில் யாருக்கும் நின்மதியைக் கொடுப்பதில்லையே. இவர்களின் திருமணத்திற்கு பின் கஷ்டம் தலை தூக்கியது. அதே தன் மனைவி ஆசையாய் கேட்கும் உணவை வேண்டிக் கொடுக்க கூட சரவணனிடம் பணம் இருக்கவில்லை. தங்களது நிலையை நினைத்து இருவரும் வருந்தாத நாள் கிடையாது. மறுபடியும் வெளிநாடு செல்வதற்கு



இடம் கிடைத்தது. அதே சமயம் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின.

மீனாட்சி நல்ல பெறுபேற்றினைப் பெற்றிருந்த போதும் சரவணன் மேலும் படிக்க அனுமதிக்க வில்லை. தன் கனவு தன் கண்முன்னே சிதறுவதை எண்ணி கலங்கிப் போனாள். தன்னுடன் படித்துச் சித்தி பெற்றவர்கள் மேற்படிப்புக்காக பல்கலைக் கழகம் செல்வதை கண்டு மனம் வருந்தினாள். அவளின் அம்மா “நீ மாப்பிள்ளை சொல்வதைக் கேள்..” என வற்புறுத்தியதாலும் சரவணன் சண்டை போட்டதாலும் மீனாட்சியால் எதுவும் செய்ய முடிய வில்லை. படிப்பைக் கைவிட்டாள்.

இவ்வாறாக நான்கு வருடங்கள் கடந்தன. சரவணன் நாட்டுக்கு வந்து இருவருக்கும் கையில் காசு இல்லை, கேலி செய்யாத உறவி னர்கள் இல்லை, படாத அனுபவமானங்கள் இல்லை இருவரும் வாழ்க்கையில் பெரும் அனுப வத்தைப் பெற்றுக் கொண்டனர். காசு இல்லாத வனை சொந்தம்கூட மதிக்காது என்ற பாடத்தை மீனாட்சி மீண்டும் தன்வாழ்வில் கற்றுக் கொண்டாள்.

சரவணன் கடன் வாங்கியாவது வெளிநாடு செல்ல வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான். இப்படி இருக்க குழந்தையும் பிறந்துவிட்டது. குழந்தை பிறந்து 4 மாதங்களில் வெளிநாடு செல்லும் நாளும் நெருங்கியது. தன் செல்ல மகளின் வளர்ச்சியை அருகில் இருந்து பார்க்க முடியாமல் தவித்துச் செல்லும் ஒரு தந்தை

யின் மனக்குமுறலை என்னவென்று சொல்லுவது. வெளிநாட்டு வாழ்க்கையே ஒரு நரகம் தானே. சரவணனின் உடல் மட்டுமே வேறு தேசம் சென்றது. நினைவுகள் தன் மனைவியையும் மகளையும் சுற்றியே இருந்தன. ஆனால் வாழ்க்கை கொடுத்த பாடம் அவனுள் வைராக்கியத்தை உண்டாக்கியது.

சிறிது காலம் அவனால் தன் வேலையைப் பார்க்க முடியவில்லை. மனைவியினதும் மகளினதும் நினைவுகள் அவனை சுக்கு நூறாக உடைக்க தொடங்கின. ஆனால் தன்னை நம்பி வந்த மீனாட்சிக்காக உழைக்க தொடங்கினான். அவமானப்படுத்திய உறவுகளின் முன்னால் வாழ்ந்து காட்டவேண்டும் என்ற வைராக்கியம் அவனை தூங்கவிடவில்லை. அதற்கேற்றாற் போல் இறைவனின் அருளும் அதிர்ஷ்டமும் சரவணனுக்கு உறுதுணையாகின.

மீனாட்சியின் உலகம் அவளது கணவனும் பிள்ளையும்தான். காதலித்து கல்யாணம் செய்தவர்கள் பணத்திற்காக வாழ்க்கையை தொலைத்த நிலைக்கு தள்ளப்பட்டு தவித்தனர். மீனாட்சி தன் கணவனுடன் அமர்ந்து மனதில் உள்ளதை பேச ஆசைப்படுவாள்,கை கோர்த்து வெளியில் நடக்க ஆசைப்படுவாள், ஊர்சுற்ற ஆசைப்படுவாள். எதற்குமே முடியாது வெளிநாட்டு வாழ்க்கை அவளது ஆசைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது. பிள்ளையும் வளர தொடங்கி விட்டாள். பிள்ளைக்கு இரண்டு வயதாக இருக்கும்போது சரவணன் தனது சொந்த ஊரில் தனக்கென்று ஒரு வீட்டை கட்டத்தொடங்கி அதன் கிரகப் பிரவேசத்தையும் பெரிதாக நடத்தினான். அவன் அல்லும் பகலும் உழைத்தான் தன் ஆசை மகள் கேட்கும் அனைத்தையும் வாங்கி கொடுக்க தவறுவதில்லை. பெண்பிள்ளை என்றாலே அப்பாக்களுக்கு பிரியமானவர்கள்தானே. தனது ஒட்டுமொத்த பாசத்தையும் தன் மகள் மேல் குவித்து விட்டான். ஆனால் தன் மனைவியும் ஒருவரின் அன்பு மகளாக வளர்க்கப்பட்டவள் என்பதனை சரவணன் சில இடங்களில் நினைக்கத் தவறினான். உழைத்தது சரவணன்தான் ஆனால் அதனை செலவழிக்காமல் குருவி சேர்ப்பது போல் சேர்த்தது மீனாட்சிதானே. மீனாட்சியின் பல ஆசைகள் நிராசைகள் ஆகின. சில சந்தர்ப்பங்களில் தான் படித்து ஒரு வேலை எடுத்து இருக்கலாமோ என்ற எண்ணம் மீனாட்சிக்குள் வரும். சரவணனின் பணம் மீனாட்சி இடம்தான் இருக்கும். ஆனால் அவள் அவனின் அனுமதியின்றி அதை தொடுவதில்லை. பிடித்த ஒரு பொருளை வாங்கத் தோன்றினாலும் சரவணன் படும்பாடு தான் நினைவுக்கு வரும் இதனாலேயே அவள் தனக்கென எதுவும் வாங்கிக் கொள்வதில்லை. சரவணன் மீனாட்சியின் மனதில் உள்ள உணர்வுகளை சில இடங்களில் புரிந்து கொள்ளவே இல்லை.

"இவள் எதைக் கொண்டு வந்தவள்.." என்ற சரவணனின் சொந்தங்களின் வார்த்தை மீனாட்சியை ஆழ்ந்த துயரத்தினுள் தள்ளும். ஆனாலும் அவள் அவர்களுக்கு நல்லதே நினைப்பாள் ஒரு காலமும் அவள் தனது கடமைகளில் இருந்து தவறியது இல்லை. சரவணனின் தாயையும் தந்தையும் தனது தாய் தகப்பன் போலப் பார்த்துக் கொள்வாள்.

காலம் செல்லச்செல்ல மீனாட்சி தன்னை எல்லாவற்றிற்கும் பழக்கப்படுத்திக் கொண்டாள். ஆரம்பத்தில் இருந்தே கஷ்டங்களையும் கண்ணீரையும் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டவளுக்கு இது என்ன பெரிய விஷயமா? இப்போது மீனாட்சி தனக்காக யோசிப்பதையே நிறுத்திக் கொண்டாள். அவளது மன வைராக்கியம் ஒன்றுதான் தன்மகளை படிக்கவைத்து அவளை சொந்தக்காலில் நிற்க வைக்க வேண்டும் என்பதுதான். தான் பட்ட கஷ்டங்களையும் மன வேதனைகளையும் தன் மகள் அனுபவிக்க விடக்கூடாது என்பதே அவளுக்கு இப்போது இருக்கும் ஒரே ஆசை. கவலைகள் பல இருந்தாலும் அவள் யாரையும் நொந்து கொள்ளவில்லை. சரவணனும் பிள்ளையும் தான் அவளது உலகம். இப்போது அவள் தன் பிள்ளையின் பின்னால்தான் ஓடத்தொடங்கி விட்டாள். அவளது வாழ்வில் வீடு, பணம், நகை என எல்லாம் வந்து சேர்ந்து விட்டது. ஆனால் அவளுக்கு நிம்மதி மட்டும் என்றுமே எட்டாக்கனிதான் போலும்......

❍❍❍

# கொடைக்கானல்

வான்மேகம் இங்கே
வரைகளைத் தழுவி
ஓய்வெடுக்கின்றது
வெண்பஞ்சுப் புகார்கள்
வெள்ளாடை விரித்து
மலை ராணியை
குளிர் வாடையில் இருந்து
காவல் செய்கின்றன.
மலைச்சாரலில் வளரும்
மரங்களும் செடிகளும்
முகில் இனங்களுக்கு
முக்காடு போட்டு
அழகு பார்க்கின்றன..!
அது என்ன..!
அங்கே பாலாறு வடிகிறது.
மலைக் கடவுளுக்கு
பால் அபிஷேகமா..?
“வெள்ளி அருவி” இங்கே
துள்ளி நடை போடுகிறதா!
பாறைப் படிகளில்
பரதம் பயில்கிறதா... ?
இது என்னே !
மலை உச்சியில்
அலை அடிக்கிறது.. !
இந்தக் குளம்
இங்கு வெட்டியதா..?
இல்லைக் கட்டியதா..?
கொடைக் கானலில்
இது இயற்கையின்
கொடை அல்லவா..! அதோ...!
“மலை வாழைத்தோட்டம்”
உங்களுக்கு
இலை போடவா..?
அதன் பழத்தோடு
விருந்து படைக்கவா..?
கொடைக் கானலில்
“விக்ஸ்” தைலம் மணக்கிறதே..!
வீதி ஓரத்தில்
விக்ஸ் மரங்கள்..!
வானத்தை முத்தமிடவா..
உயர.. உயிர்.. வளர்கின்றன?
இதயம் கொஞ்சம் சிலிர்க்கிறது.
மலையில் வீதி அடிக்கடி
உயர்கிறது...! தாழ்கிறது...!
வளைந்து வளைந்து போகிறது...!
அக்காவின் கொண்டை ஊசி
ஞாபக மழையில் நனைகிறது..!
குறிஞ்சிக் குமரன் இங்கும்
கோயில் கொண்டுள்ளார்...
பேராதனை வளாகத்தில்
இருப்பது போல
குறிஞ்சி மலர்களைக்
கோயில் வீதியில்
கண்டு மகிழ்ந்தோம்..!
மலர்களைக் கொய்து
குமரன் சேவடியில்
வைத்து வணங்கினோம்..
இரவு வந்தது.....
வாடி வீட்டில்
நெருப்பில் குளிர் காய்ந்தோம்!
அறை மெத்தையில்
குளிரில் நடுங்கினோம்!

– சித்ரா சின்னராஜன்




**அ**ன்றைய அதிகாலை வேளை. இருள் இன்னும் அகலாமல் அப்பிக் கிடந்தது. பொழுதைப் புலரவைக்கும் பாங்கில் சேவல்கள் சிறகடிப்பதும், கூவுவதுமாய் அப்பிரதேசத்தையே ஆக்கிரமித்து இருந்தன. பட்சிகளின் கலவையான ஆரவாரம் அந்த வேளையில் உச்சம் அடைய அதிகாலைப் பொழுதின் அமைதி காணாமல் போய் இருந்தது.

சுவர் மணிக்கூடு ஐந்து மணியைச் சொல்லி அலாம் அடித்து ஓய்ந்தது. பிரபாவின் உறக்கமும் அத்தோடு கலைந்து போனது. குசினிக்குள் மல்லிகா தூக்கக் கலக்கத்தில் நுழைய அவளது கை தட்டுப்பட்டதில் கீழே விழுந்த உருண்டது எவர் சில்வர் பாத்திரம்.அது 'ங்ங்..ங்ங்' எனப் பேரொலி எழுப்பி ஓய்ந்தது.

''மல்லிகா என்ன சத்தம் அது. சகிக்க முடியல்ல. பாத்துக் கவனமாக எடன்''.

''வெற்றுப் பாத்திரம் விழுந்து தொலச்சு போட்டுது. பேசாம எந்திரிச்சி வாங்க. முரளியக் கொண்டு ஐந்தரை மணிக்கு விடணும். சம்பந்தன் சேரிட்டஅவனுக்கு இங்கிலிஷ் கிளாஸ். ரீயூசன் இரிக்கு''. மனைவியின் கண்டிப்பான புறுபுறுப்பில் பிரபா அமைதியானார்.

''செரி.. செரி. எதுக்குச் சத்தம் போடுறா. நான் வாறன்''.

சம்பந்தன் ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர். மாணவர்களிடம் அவர் கண்டிப்பாக நடந்து கொள்வார். ஆனாலும் சம்பந்தன் ஆசிரியரைத் தேடிப் போவோர் தொகை மிக அதிகமாக இருத்தது.

''ஐஞ்சரை மணிக்குச் சின்னம் சிறுசுகளுக்கு ரீயூசன் போடுவதா. பிள்ளைகள் பாவம் இல்லையா. ஆங்கிலம் படிக்கணும் எண்டு அந்த மனிசனிட்ட ஏன்தான் இதுகள் அலைய விடுறாங்களோ தெரியல்ல. அவரைச் சொல்லிக் குத்தமில்ல''. பிரபா தனது மனதில் தோன்றியதை மனைவியிடம் சொல்ல தைரியம் வரவில்லை.

''எதுக்கு வீண்வம்பு. மல்லிகா சும்மாவே கத்துவாள்''.

சம்பந்தன் ஆசிரியர் ஏழரை மணிக்குள் நான்கு கிளாஸ் முடித்து விடுவார். கறாராகக் காசும் வாங்குவார். மூன்று தொடக்கம் ஆறாம் வகுப்பு மாணவர்கள் அவரிடம் அதிகாலை வேளையில் குளிரையும் பொருட் படுத்தாது ரீயூசனுக்கு முண்டியடிப்பர். பிற்பகலில் ஏனைய வகுப்பு மாணவர்க்கு அவரது நேர அட்டவணைப்படி நடக்கும்.

''ஊர் ஓடினா ஒத்து வேண்டியதுதான்.

அவனவன் தம் புள்ளைகள ஏத்திக் கொண்டு ரீயூசன் சென்டர்களுக்குப் படை எடுக்கானுகள். நாம சும்மா இருந்தாலும் மனிசி உடமாட்டாள். நம்ம புள்ளைகளும் இருக்க விடாதுகள்''.

''என்னப்பா.. கதைகிறயள். முரளி எங்க எழும்பித்தானா. வெளிக்கிடுங்க''.

நடுங்க வைக்கும் குளிரிலும்கூட எட்டு வயது மகன் முரளியை உறக்கத்தில் இருந்து பிரபா எழுப்பி எடுத்தார். அவன் உறக்கம் கலையாமலிருக்க மீண்டும் தூங்கி விழுந்தான்.

''முரளீ..''

மல்லிகா போட்ட அதட்டலில் உறக்கம் கலைந்த முரளியின் முகத்தை அலம்ப வைத்து டீயைக் கொடுத்த கையோடு மோபைக்கில் ஏற்றிக் கொண்டு விரைந்தார் பிரபா.

''பாவம் முரளி.. காலையில் நன்றாக தூங்கியெழுந்து சுதந்திரமாக ஸ்கூல் போக வேண்டியவன். பிள்ளைகளைத் தூங்கவிடாது துரத்துகிறது இந்த ரீயூசன் மோகம்''. மனதுக்குள் சொல்லிக் கொள்ள மட்டும் முடிந்தது பிரபாவுக்கு.

‘‘ஐந்தாம் வகுப்பு ஸ்கொலசிப் பரீட்சை வினாத்தாளில் இரண்டு ஆங்கிலச் சொற்கள் தான் வினாவாக வரும். மூன்றாம் வகுப்பில் இருந்து ஐந்துவரை வாரத்தில் ஐந்து பாடவேளை நேர ஒதுக்கீடும் உண்டு. நாளாந்தம் பயன் படுத்தப்படும் ஆங்கில வார்த்தைகள் பரீட்சைக்கு வரும். அத்தோடு அந்த வகுப்புக்குரிய கை நூலிலும் எல்லாமே உண்டு. அதனை ஸ்கூலில் சொல்லிக் கொடுத்தாலே போதும். அது எங்க நடக்குது ஸ்கூலில். பிள்ளைகள் ரீயூசனில் அதை எல்லாம் படித்து விடுவார்கள் என்ப தாலோ என்னவோ.. ஆசிரியர்கள் அத்தக் கை நூலைக்கூடக் கையால் தொட்டுப் பார்ப்பதே யில்ல’’. நண்பன் ராஜேஸ் மாஸ்டர் சொன்னதைப் பிரபா நினைத்துப் பார்த்தார்.

‘‘பிள்ளைகளை ரீயூசன் அனுப்புவது பெற்றா ருக்குக் கௌரவமாகப் போய் விட்டது. ஆனால் பாடசாலையில் ஆசிரியர்கள் அக்கறை இல்லா மல் இருக்கின்றனர். பிள்ளைகளை ஐஞ்சாம் வகுப்பு ஸ்கொலசிப் சித்தியடைய வைக்கப் பெற்றார் நேரங்காலம் இல்லாமல் உழன்று திரிகின்றனர். பரீட்சை இப்போது பெற்றார்களின் மானப் பிரச்சனையாகி விட்டது. மனதில் நினைத்து சலித்துக்கொண்ட பிரபா மோபைக்கை இன்னும் வேகமாக முறுக்கினார்.

அரச அலுவலர் பிரபா. அலுவலகம் செல்ல அவர் பத்துக் கிலோ மீற்றர் பயணிக்க வேண்டும். காலை எட்டரை மணிக்குக் கை விரல் அடை யாளம் வேறு. வீட்டிலிருந்து எட்டு மணிக்குப் அவர் புறப்படணும். ஐந்து மணிக்கு எழுந்த பிரபாவுக்கு குசினிக்குள்ளும் கூடமாட வேலை இருக்கும். குட்டிபோட்ட பூனை போல வளைய வளைய வந்து அவற்றையும் முடித்து விடுவார்.

‘‘இலவசக் கல்வித் திட்டத்தை அந்த மனிசன் கன்னங்கரா கொண்டு வந்தார். அது நல்லாத் தான் போனது. அதாலதான் ஸ்கூலில் படிச்சு ஒரு கஷ்டமும் இல்லாம பல்கலைக்கழகம் போய்ப் பட்டதாரியாக வந்தன். அப்ப ரீயூசன் எதுவு மில்ல. இப்ப பேருக்கு இலவசக் கல்வி. இலவசக் கல்வியின் அர்த்தமே இல்லாமப்போச்சு. ஒவ்வொரு பாடத்துக்கும் ரீயூசன் காசை நினைச் சால் ஈரக் குலையே நடுங்குது’’. கல்வி இப்போது வியாபாரமாகி விட்டதை நினைத்து பிரபாவுக்கு வந்த குமுறல் அது.

மனக்குமுறலுடன் முரளியை ரீயூசன் சென்டரில் இறக்கிவிட்டு ஆறரை மணிவரை நின்றார் பிரபா. அடுத்து ஆறரை மணிக்கு எட்டாம் வகுப்பு படிக்கும் மகன் நந்தியை கணிதபாட ரியூசனுக்கு மோபைக்கில் கொண்டு போக ஆயத்தமானார்.

‘‘என்னங்க.. ’’.

‘‘சொல்லு மல்லிகா’’.

‘‘ஏழு மணிக்கு முரளிக்கு கொலசிப் ரீயூசனும் இருக்கு’’.

‘‘செரி.. எனக்கு ஞாபகம் இரிக்கு. நான் நந்தியக் விட்டுப் போட்டு வந்து போறன் போதுமா’’.

‘‘செரி.. நீங்களும் வேலைக்குப் போக வேணுமே. கெதியாக வாங்க’’.

வீட்டு வேலைகளோடு மல்லுக்கட்டும் மல்லிகா. பிரபா அலுவலகம் போன பின் பிள்ளை களை ஸ்கூலில் விடுவது உள்ளிட்ட மீதி வேலைகள் மல்லிகா தலையில் இடியென வந்து இறங்கும்.

‘‘பிரபா நேற்றும் உங்களப் பாத்தன் அவசர மாக போனயள். திரும்பியே பாக்கல்ல ஏன்’’. பிரபாவின் பல்கலை நண்பர் ராஜேஸ் மறு நாள் சனிக்கிழமை ரீயூசன் சென்டரில் கண்டு விசாரித்தார்.

‘‘ராஜேஸ் அவசரந்தான். சிறகப் பூட்டிக் கொண்டு பறக்க வேண்டி இருக்கு. மகன் இரு வரையும் எட்டுமணிக்குள் ரீயூசனுக்கு ஏத்திற வேலை. புறகு நான் வேலைக்குப் போகணும். அதுதான்’’.

‘‘பள்ளிக்கூடம் செய்யிற வேலய நம்ம செய்ய வேண்டிக் கிடக்கு. ஸ்கூல் ஒழுங்கா கற்பித்தலச் செஞ்சா இந்த ரீயூசன் எல்லாம் எதுக்கு. நாம ஏன் அலையணும். இப்ப பாரு பிரபா.. ரீயூசன் சென்டர்களில் மட்டுமில்ல இப்ப வாத்திமார் தங்கட வீட்டில்கூட கல்வி வியாபாரத்த நடத்தி றாங்கள்’’.

‘‘அதெண்டா மெய்தான் ராஜேஸ். நாம கதைக்க நேரமில்லாம அலையிறம். ஆறுதலா இருந்து கதைக்கணும்’’.

‘‘அப்புடி எங்க ஆறுதல் வரப்போகுது.

கண்ட இடத்தில கதைக்க வேண்டிய நிலமை பார்த்தியா பிரபா’’.

பிரபாவின் மனைவி மல்லிகா ஒரு பட்டதாரி. தனியார் நிறுவனம் ஒன்றில் பொறுப்பான பதவி வகித்தவள். தன் பிள்ளைகளுக்காக அந்த வேலையை இராஜினமாச் செய்துவிட்டாள்.

‘‘ராஜேஸ் வாழ்க்கைச் செலவு இப்ப எகிறிக் கொண்டு போகுது. மனைவி வேலைய

விட்டதால எங்கட பாடு திண்டாட்டமாகப் போச்சு. என்ன மச்சான் செய்வது. உனக்கு ஒத்தப் புள்ளை. நீக்க இரண்டு பேருடைய சம்பளம். நீ சமாளித்துக் கொள்வா. ஆனால் பார்டா.. எனக்கு. இப்ப சமய பாடத்துக்கும் ரீயூசன் நடக்குது. அதுக்கும் சேர்த்து அழ வேண்டிக் கிடக்கு''.

''பிரபா.. எனக்கும் இந்த பணம் புடுங்கும் ரீயூசன் கடைகளைப் பாக்க ஆத்திரம்தான் வரும். ஆனா நமக்கு வேற வழி என்ன இருக்கு''.

''அதுதான் பல்லக் கடிச்சுக் கொண்டு ரீயூசன் கடைகளுக்கு ஏறி இறங்க வேண்டிக் கிடக்கு. நம்மட பிள்ளயள் எதிர்காலமும் இதில இருக் குதே. ஸ்கூலை நம்பினால் ஏமாந்துதான் போவம். ரீயூசன் கடைக்கு போகாவிடில் பாஸ் பண்ண அதாலதான் பிள்ளைகளின் சிந்தனை.. திறன்.. எல்லாம் மூணு வயதிலேயே இல்லாமப் போகுது''.

''இதுதான் நம்மட நாட்டுல கல்விச் சிந்தனை யாப் போச்சி. எப்பதான் உருப்படுமோ தெரியல்ல. நாம்தான் ரீயூசனுக்காக காசு மூட்டைகளக் கட்டி வைச்சுக்கொள்ள வேணும்''.

''பின்லாந்து உலகத்தரம் வாய்ந்த கல்வியை அந்த நாட்டு மக்களுக்கு கொடுக்கிதாம். நம்மட நாட்டப் போல பரீட்சைக்கு தயார்ப்படுத்தல் இல்லை. பிள்ளைகளுக்கு எந்தத் திணிப்பும் அங்க இல்லயாம்''.

''நானும் அறிஞ்சன் வைற் போட்டில் எழுதுவதை மனப் பாடம் பண்ணி ஒப்புவிக்கும்



மாட்டாங்க.. என்று பிள்ளையளே சொல்லு மளவுக்கு நிலைமை மாறிப்போச்சு பாத்தியாடா''.

''பிரபா, நான் ஒத்தைப் புள்ளய வைச்சுக் கொண்டு கொலசிப் பாஸ் பண்ண வைக்க மூணாம் வகுப்பில இருந்து எடுத்த ஓட்டம் இது. ஓ.எல் ஏ.எல் எண்டு ஓடிக்கொண்டிருக்கன். இன்னும் முடியல்ல''.

''இப்ப பாடசாலைகள் பரீட்சைக்கு விண்ணப் பம் அனுப்புற வேலைய மட்டும்தானே செய்யுது. ஸ்கூலில் கடமைக்கு ஏதோ ஒன்று இரண்டு பாடம் மட்டும் நடக்குமாம். இதுதான் இப்ப ஸ்கூல் நிலைமை பிரபா''.

''மச்சான் ராஜேஸ்.. உனக்குத்தெரியுமா புள்ள யளை.. மூணு வயது முடிஞ்சாலே ரீயூசனில் கொண்டு விடுகுதுகள். எதுக்கோ தெரியல்ல. கிளிப் பிள்ளைப் பாடம் அங்க இல்ல. இன்னும் சொல்லப் போனா ரீயூசன் சமாச்சாராமே அங்க இல்ல மச்சான். பிள்ளயள் எவ்வளவு மகிழ்ச்சி யாகப் படிப்பாங்கள் எண்டு யோசிச்சுப் பாரு''.

''அதுமட்டல்ல பிரபா, அங்கு பிள்ளயள் ஏழு வயதில்தான் பென்சிலை கையில் பிடிக் குதுகள். அதுவரையில் கற்றல் என்பது விளை யாட்டு மூலம் நடக்குது. பிள்ளைகளது உடல் உள ஆரோக்கியம் அதில் கவனம் எடுக்கி றார்கள். ஏழு வயதுவரை அதுதான் அங்கு நடக்குது. அப்பதான் நாட்டுக்கு ஆரோக்கியமான சமூகம் கிடைக்கும் என அந்த நாட்டு அரசாங்கம் நினைக்குது. அந்த நாட்டில்முதல் தரம் வாய்ந்த கல்வி கிடைக்குது. எப்படி இருக்கு பாரு. நாம எங்க போறம்''.

''அதை நாம கதைச்சி என்னதான் ஆகப் போகுது. அந்த நாட்டைப் போல ரீயூசன் இல்லாத கலாசாரம் நம்ம நாட்டில ஒருக் காலும் வரவே வராது''.

''மச்சான் நாங்க எங்கட குடும்பத்தில எட்டுப் பேர் பிள்ளைகள். எவ்வளவு சந்தோஷமாக இருந்தம். படிப்பிக்கிற செலவே பெற்றோர் களுக்கு பெரிசாக இருக்கல்ல அப்போது''.

''அட நாங்களே குடும்பத்தில பத்துப் பேர். எங்களுக்குப் பள்ளிக்குப் போய்ப் படிக்கிறது மட்டுந்தான். இப்புடி ரீயூசன் எங்க நமக்கு இருந்தது''.

''உண்மைதான். அப்ப ஒவ்வொரு குடும்பத் திலயும் பிள்ளைகள் கூட இருந்தாங்க. பாடசாலை களும் நல்லாவே நடந்தது. ஆசிரியர்கள் மிக அர்ப்பணிப்போட படிச்சிக் கொடுத்தாங்க. ஆசிரியர்கள் தெய்வங்களாக இருந்தாங்க''.

''இண்டைக்கும் நமக்கு படிப்பித்த ஆசிரியர் கள மறக்க முடியல்ல. கையெடுத்துக் கும்பிடத் தோணுது. இப்ப அப்புடி ஆசிரியர்களை எங்க பிள்ளைகள் மதிக்கிறாங்க''.

''இப்பவும் நான் எல்லாரையும் குறை சொல்லல்ல பிரபா. இன்றும் நல்லா அர்ப்பணிப் போட படிச்சுக் கொடுக்கிற ஆசிரியர்கள் இருக் காங்க. அவர்கள நான் மதிக்கிறன்.

'என்ட பாடத்துக்கு யாராவது எங்கும் வெளியில் ரீயூசன் போகக் கூடாது நான் என் பாடத்தில் 'ஏ' எடுக்க வைப்பன்'. ''இப்புடி நம்பிக்கை கொடுக்கும் நல்ல ஆசிரியர்கள் இருக்காங்க. மிகத் திறமையாக வழி நடத்துகிற பாடசாலை அதிபர்கள் இன்னும் இருக்காங்க. நல்ல செயல் திறன் மிக்க வலய நிருவாக அலகுகளும் இருக்கு. ஆனால் என்ன மாற்றம் எல்லாரிடமும் வரணுமே''.

''சொன்னா எவரும் நம்பமாட்டாங்க. பாடசா லைகளில் வகுப்பில் ஏதோ சொல்லிக் கொடுத்து விட்டு தங்கள் பாடத்துக்கு ரீயூசன் சென்டருக்கு வரச் சொல்லும் வாத்திக் கூட்டம் இப்ப அதிகமாகப் போச்சு ராஜேஸ். பிள்ளைகள் பயத்தில் அவரிட்ட ரீயூசனுக்கு போகுதுகள். இதை நாம ஆரிட்டச் சொல்லி அழுவுற''.

''அண்மையில் ஒரு ஆய்வு ரிப்போர்ட் பாத்தன். ரீயூசன் கடைகளில் கல்வியை வியாபாரம் செய்கின்ற ஆசிரியர்கள் இப்ப செல்வந் தர்களாக இருப்பதாக அந்த ரிப்போர்ட் அப்பட்ட மாகச் சொல்லுது பிரபா''.

''அது உண்மைதான். இன்னும் ஒன்று தெரியமா ராஜேஸ்.. நான் இப்ப அண்மையில் ஒரு செய்தி படிச்சன்''.

''என்ன மச்சான் சொல்லன்''.

''நம்மட சனங்கள் இப்ப குடும்பக் கட்டுப் பாடு ஏன் செய்யினம் தெரியுமா''.

''ஏனாம்.. நீதான் சொல்லன்''.

''நான் சொல்லல்ல இது. அந்தச் செய்தி சொல்லுது''.

''என்ன மச்சான் புதிர் பலமாக இருக்கு''.

''இதில் புதிர் ஒரு மண்ணாங்கட்டியும் இல்ல''.

'' அப்ப என்னண்டு நீயே சொல்லன்''.

''அது என்னன்டா.. இப்ப புள்ளைகளப் படிப் பிக்கிற செலவு கூடிப்போச்சாம். அதனால புள்ளைகளப் பெத்துகிறதக் கட்டுப்படுத்திக் கொண்டாங்களாம்''

''ஓ..''

''அதுதான். நீயே பாருடா.. நீ ஒத்தப் புள்ளைய வைச்சித்து எப்படிக் கஷ்டப்படுறா. அதுவே உனக்கு நாலு ஐஞ்சி புள்ளைகள் இருந்தா என்னடா உன்னால படிப்பிக்கத்தான் முடியுமா சொல்லு''.

''அது என்னவோ உண்மைதான். நீ சொல்லு றதும் சரிதான்டா''.

''அதுதான் ராஜேஷ் இப்ப குடும்பத்தில ஒன்று.. இரண்டு பிள்ளைகளோட நிப்பாட்டி விடுறாங்கள்''.

''போறபோக்கப் பாத்தா நாம.. இனி சனத் தொகையில மூன்றாம் இடம்தான்''.

''கல்வி வியாபாரமாகிப் போய்ச்சி. அதனால இப்ப.. சனத் தொகையும் குறைஞ்சி நம்மட சமூகத் துக்கே அது சாபக்கேடாக முடிஞ்சு போச்சு''.

''உண்மைதான் மச்சான். இதை நாம கதைச்சி என்னாகப் போகுது. நான் வாறன் பிரபா. அந்தா பாரு.. என்ட பிள்ள வாறள். அடுத்த பாடத்துக்கு அவளக் கொண்டு விடணும்''.

ஏக்கப் பெருமூச்சோடு பிரபா தன் மகன் வருமட்டும் ரீயூசன் சென்டரில் காத்துக் கிடக்கிறார்.

❍❍❍



# கலைத்திட்டம் ஒரு நோக்கு


எ. மிலானி
தற்காலிக விரிவுரையாளர்,
தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்.


**ம**னிதன் குழந்தையாக இருக்கும்போதே மொழியினைக் கற்றுக் கொள்கின்றான். இதுவே மொழிக்கல்விக்கான முதற்படி ஆகும். ***மொழியானது ஒருவர் தனது சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்கு மாத்திரமல்லாமல் சிந்தித்தல் எனும் தொழிற்பாட்டுக்கும் அத்தியவசியமாகின்றது.***[1] மொழி என்பது வெறுமனே தகவல் தொடர்பாடல் ஊடகம் மட்டுமன்று. இது வரலாற்றின் தேரோட்டம். பண்பாட்டுப் பேழை விழுமியங்களின் குழுமம். நம் முன்னோர்களின் அனுபவச்சாரம். எனவே மொழியானது சமூகத்தின் தொடர்பாடலிற்கு மட்டுமின்றி, அனைத்து நடவடிக்கைகளிற்கும் செல்வாக்குச் செலுத்துகின்றது. குறிப்பாக, பாடசாலைக் கல்விமுறையிலே தமிழ் மொழிக்குச் சிறப்பிடம் உண்டு. அத்தகைய மொழியினை மாணவர்களிற்கு கற்பிப்பதற்கு இலகுவாக, ஆரம்ப நிலை, இடை நிலை, உயர்தரமென பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு மொழியறிவானது வழங்கப்படுகின்றது. இத்தகைய அறிவினைப் பாடரீதியாகப் பிரித்து வழங்கும் செயற்பாட்டினைக் கலைத்திட்டம் ஆற்றுகின்றது. ஒருபக்கம் கோட்பாட்டுப் பரிமாணங்களையும், மறுபக்கம் நடைமுறைப் பரிமாணங்களையும் உள்ளடக்கிய இயங்கு வடிவமாகத் திகழ்கின்றது.

***“கலைத்திட்டம் என்பது*** curriculum ***என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். இப்பதமானது*** currere ***என்னும் லத்தீன் சொல்லிலிருந்து மருவியதாகும். லத்தீன் மொழியிலே*** currere ***எனும் சொல்லானது ஓடுதல் அல்லது ஓடிக்கொண்டிருக்கும் நடவடிக்கை, கற்கை நடவடிக்கை, ஓட்டப்பந்தயம்*** (rececourde) ***எனப் பலவாறாக அர்த்தப்படுகின்றது. கலைத்திட்டத்தினைப் பாடவிதானம், கல்வி ஏற்பாடு, பாட ஏற்பாடு, கல்வித்திட்டம் எனப் பல பெயர்களிலே அழைக்கலாம்.”***[2] இருப்பினும் கலைத்திட்டம், பாடவிதானம் ஆகிய இரு சொற்களே பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

***டையிலர்*** கலைத்திட்டத்தை ஒரு தொழிற்பாட்டுச் சாதனமாக நோக்குகின்றார். கலைத் திட்டத்தை வடிவமைக்கும்போது **நான்கு** பிரதான கூறுகள் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும் என வலியுறுத்துகின்றார். அவையாவன: அடைய வேண்டிய கல்வி இலக்குகளை அடைதல், வழங்கவேண்டிய கல்வி அனுபவங்கள், ஒழுங்கமைத்தல், மதிப்பீடு என்பனவாகும். கலைத் திட்டம் குறித்துப் பல்வேறு வகையான வரைவிலக்கணங்கள் பலராலும் முன்வைக்கப் படுகின்றது.

கற்றலிற்கு உரித்தானவற்றிற்கான ஒரு திட்டத்தினைக் கலைத்திட்டம் எனலாம். கல்வித் துறையில் கலைத்திட்டம் முக்கிய இடம் வகிக்கின்றது. முன்பள்ளி தொடக்கம், பல்கலைக் கழகம்வரை கல்வியை வழங்கும் சகல தாபனங்களும், நிறுவனங்களும் தாம் வழங்குகின்ற கற்றல் - கற்பித்தல் செயல்முறை தொடர்பாக முறையான திட்டமொன்றினைக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. கலைத்திட்டம் கல்வியின் செயல் வடிவமாகவே இயங்குகின்றது. கல்வித் தத்துவங்களும், கல்வி உளவியலும், புதியபுதிய கண்டுபிடிப்புக்களும் கலைத்திட்ட வடிவமைப்புக்கும், செயற்பாட்டிற்கும் ஊட்டமளித்த வண்ணம் உள்ளன.

ஆரம்பகாலக் கலைத்திட்டம் என்பது வரையறுக்கப்பட்ட காலப்பகுதியில் மாணவர்களிற்குக் கற்பிக்கப்படும் பாட உள்ளடக்கத்தை மாத்திரமே கருத்திற்கொண்ட நிலையிலிருந்து வளர்ச்சிநிலை அடைந்து, இன்று மாணவர்களிற்கு வழங்கப்படும் முழு அனுபவத் திரட்டையும் குறித்து நிற்கின்றது. குறிப்பாக ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியிலே மாணவர்களிற்கு எப்படிப் பாடங்களைப் படிநிலையாக, முறையாக வழங்கி அதனுடன் அனுபவங்களைத்

தொடர்புபடுத்தி எவ்வாறு மாணவர்களது அடைவினை மதிப்பீடு செய்து பின்னூட்டம் செய்வது போன்ற முறையான செயற்பாடுகளைக் கலைத்திட்டம் உள்ளடக்கி நிற்கின்றது.

***மாணவர்களின் வளர்ச்சி நிலைகளிற்கு ஏற்றவாறு கையளிக்கப்பட வேண்டிய அறிவை ஒழுங்கமைத்தல், அனுபவங்களை ஒழுங்கமைத்தல், முதலியவை கலைத் திட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.***[3] கல்விக் குறிக்கோளினை அடைய வேண்டுமெனின் ஒவ்வொரு பாடசாலையும் அனைத்து விதமான அனுபவத் தொகுதியின் செயற்பாடான கலைத்திட்டத்தினைப் பேணவேண்டும். இக் கலைத்திட்டமானது கற்கும் பாடங்களின் கூட்டு மொத்தமான தொகுதியினைக் குறிக்கின்றது. ஒரு நாட்டின் தேசிய இலக்குகளை அடைந்து கொள்ளவும், அங்குள்ள சமூகத்தில் வாழும் நபரொருவர் எதிர்கொள்ளவேண்டிய சவால் களைச் சமாளிக்கவும், அறிவுதிறன், மனப் பாங்கு, சிறந்த ஆளுமையுடைய பிரஜையாக உருவாக்கவும் திட்டமிடப்படுகின்ற கல்வி முறையே இதுவாகும்.

இக்கலைத்திட்டமானது வெறுமனே பாடப்புத் தகளுடனும், பாடத்துடனும் மாத்திரம் தொடர்பு பட்டதல்ல. மாணவர் குழுவாகவோ அல்லது தனியாகவோ பாடசாலைக்கு உள்ளேயும், வெளியேயும் பெற்றுக்கொள்ளும் அனைத்துக் கற்றல் அனுபவங்களினையும், திறன்களையும் ஆற்றல்களையும் உள்ளடக்கியதாகும். கலைத் திட்டத்தின் இன்றியமையாமை தொடர்பாக நோக்கும்பொழுது, இது தனியாள், சமூகம், சமகாலம், எதிர்காலம், தேசியம், கலாச்சாரம் போன்ற தேவைகளினைப் பூர்த்திசெய்து கொள்வ தற்காக உருவாக்கப்பட்டதாகும். இலங்கையில், தேசிய ரீதியில் கல்வி அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழு போன்றவற்றின் ஒத்துழைப்புடன் தேசிய கல்வி நிறுவனத்தினால் பாடசாலைகளில் அமுலாக்கப்படும் கலைத்திட்டம் தொடர்பான போதிய விளக்கங்களைக் கொண்டிருத்தல் மட்டுமன்றி, இத்துறை தொடர்பான விளக்கங் களைப் பெற்றிருத்தல் அவசியமானதாகும்.

கலைத்திட்டமானது முறைசார் கலைத்திட்டம், முறைசாராக் கலைத்திட்டம், முறையியல் எனும் மூன்று பிரதான பகுதிகளினை உள்ளடக் கியதாகும். ***தெரிதல், ஒழுங்கமைத்தல் என்ற இரு செயற்பாடுகளை உள்ளடக்கிய வடிவமாகக் கலைத் திட்டம் இயங்குகின்றது.***[4] ஒரு சிறந்த கலைத் திட்டமானது தொடர்ச்சியாக மாற்றமடைவ தாகவும், மக்களின் தேவையின் அடிப்படை யிலும், சனநாயக மாகவும், நீண்டகால நிகழ்ச்சியின் விளைவான தாகவும் சிக்கலான தகவல்களைக் கொண்ட தாகவும் பாடங் களைத் தர்க்க ரீதியான வரிசையில் தருவ தாகவும், சமூகத்தின் ஏனைய நிகழ்ச்சிகளுடன் இணைந்த வகையிலும் கல்விசார் தரத் தினைக் கொண்ட வகையிலும் முற்று முழுதாக மாணவர்களின் விருத்திக் கானதாகவும் காணப்படும். எனவே கலைத்திட்டம் பற்றிய தெளிவான விளக்கமும், புரிதலுமின்றிக் கல்விச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுத்துச் செல்லமுடியாது. ஏனெனில் கலைத்திட்டமே கல்வியின் செயற்களமாகவும், செயற்பாட்டுத் தளமாகவும் விளங்குகின்றது.

### கலைத்திட்டத்தின் நோக்கம்

ஒரு செயல் ஒரு நோக்கத்தினை அடிப் படையாகக் கொண்டே நகர்கின்றது. அது போலவே கல்வியும் ஒரு நோக்கத்தினைக் கொண்டே பயணிக்கின்றது. அந்நோக்கத்தினை நிறைவேற்றும் ஊடகமாகவே கலைத்திட்டங்கள் செயற்படுகின்றன. இக் கலைத்திட்டமானது கல்வியை விட்டுவிட்டு தன்னிச்சையாகச் செயற் பட முடியாது. அதனோடு இணைந்த வண்ணமே செயற்பட முடியும். காரணம், கல்வியானது கலைத்திட்டத்திடமிருந்து பிரித்துவிடமுடியாத தொன்றாகவே அமைகின்றது. மனிதனின் உயிர், உடம்பிற்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அது போலவே கல்விச் செயற் பாட்டிற்கும் கலைத்திட்டம் உயிர்நாடி ஆகும். இக்கலைத்திட்டமானது பல்வேறு நோக் கங்களை கொண்டுள்ளது.

- **பல்வேறு செயல்முறைகளை ஊட்டுதல்**

அறிவாக்கச் செயற்பாட்டிலே ஆய்வு, பிரதான இடம் வகிக்கின்றது. ஒரு ஆய்வினை மேற் கொள்ளும் போது ஆய்வுத் தகவல்களை திரட்டல், பின்பு திரட்டிய தகவல்களை வகுத்தல், வகுத்தவற்றை தொகுத்தல், பின்பு பொதுமை காணல், கருதுகோளினை உருவாக்கல், பரீட்சித்துப் பார்த்தலென அமைதல் போன்றே கலைத்திட்டமும் பல்வேறு செயல்முறைகளை ஊட்டுதலை நோக்காகக் கொண்டுள்ளது.

- **மானுடப் பண்புகள் அனைத்தையும் உயர்த்துதல்**

மாணவர்களின் ஆளுமை மற்றும் படைப்பாற்றலை விருத்தி செய்து,

முழுமைப்படுத்துவதனை பிரதானமாகக் கொள்கின்றது. அதற்கான இலக்கினையும் கலைத்திட்டம் கொண்டிருக்கின்றது. பாடங்களின் உள்ளடக்கம், அனுபவங்களின் உள்ளடக்கம், பாடசாலையில் நிகழும் செயற்பாடுகள், ஆக்கத் திறனை வளர்ச்சியடையச் செய்து செயற்படுத்து வதாக அமைந்துள்ளது. மேலும் உடச் செயற் பாடுகள், அறிவு, கற்றல் அனுபவங்கள், மனவெழுச்சி ஆகியவற்றைத் தழுவியதாகவும் அமைந்து மானிடப் பண்புகளினை உயர்த்து வதில் முக்கிய பங்காற்றுகின்றது.

- **அழகியல், அறிவியல் நோக்கமும், ஆன்ம ஈடேற்றமும்**

தற்கால அறிவியல், தொழிநுட்பவியல் பண்பாட்டினைத் தழுவிய மனிதனை உருவாக்கும் இலக்கினைக் கொண்டிருப்பதுடன், அறிவியல், அழகியலையும் உள்ளடக்கியது. மேலும் கலைத் திட்டத்தின் தலையாய நோக்கம் ஆன்ம ஈடேற்றமாகும். இதுவே நிலையான விடுதலை யையும், அமைதியையும், சாந்தியையும் வழங்கும் என்ற எதிர்பார்ப்பு கலைத்திட்டத்திற்கு உண்டு.

- **சமூக நோக்கம்**

சமூகத்தில் வாழும் மக்களிடையே ஒற்றுமை யுறவையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதே மிக முக்கியமானதாகும். எனவே சமூகமய மாக்கலைக் கலைத்திட்டம் வலியுறுத்துகின்றது. குழு நடத்தையை நெறிப்படுத்துதல், ஆக்க நிலை தழுவும் குழு உருவாக்கம், சமூக ஒழுங்கு எதிர் மறைத்தாக்கத்திற்கு உள்ளாகுவதைச் சீர்படுத்தல் முதலியவற்றை உள்ளடக்கி நிற்கின்றது. குறிப்பாக மொழியை அறிதல், உணர்தல், பயன்படுத்தல் போன்றவற்றினை எடுத்தியம்புகின்றன.

- **நாட்டுப்பற்றை வளர்த்தல்**

நாட்டுப்பற்றை ஊட்டுதலின் வழியாக அனைத்துலக நெறியிலே ஈடுபடவேண்டும் என்ற நோக்கத்தினைக் கொண்டுள்ளது. இவற்றிலே தேசிய கீதத்தினை இசைத்தல், தேசியக் கொடியினைக் காலைக்கூட்டத்தின் போது ஏற்றுதல் போன்ற செயற்பாடுகள் ஆரம்ப நிகழ்ச்சிகளாகப் பாடசாலையிலே பின்பற்றப் படுகின்றன.

ஆக, இவை போன்ற இலக்குகள் மனித அறிவினை மட்டுமின்றி, மனிதனை ஆன்மீக

# காதல்

**– கீத்தா பரமானந்தன்**

பின்னலிட்ட நினைவுகளாற் பேதை நெஞ்சம்
பித்தாகி அலைகின்ற நிலையில் நாளும்!
கன்னலிட்ட வார்த்தைகளே காதில் மோதும்
காற்றாகி இதயத்தில் இசையை மீட்டும்!
மன்னவனின் முகந்தேடி மறுகு துள்ளம்
மகுடியினில் நாகமென மயக்கம் கொள்ளும்!
இன்னலினைத் தந்திட்டே எங்கே சென்றாய்
என்னுயிரே போக்கிடுவாய் என்றன் துன்பம்!
காற்றினிலே தூதனுப்பிக் காதல் நெஞ்சம்
கணமெலாம் கரைந்திருக்கும் நிலையைச் சொன்னேன்!
ஆற்றிடையே படகாகி யலையும் துன்பம்
ஆற்றிடவே உன்பார்வை ஒன்றே போதும்!
மாற்றுகின்ற மருந்தாக என்றும் நீயே
மனங்கொண்ட பேரன்பி லுருகி நிற்பேன்!
சாற்றிட்டேன் என்னிலையைச் சரிவைப் போக்கிச்
சந்தோசத் தென்றலென வருவாய் நீயும்!
அலைபாயும் பெண்மனத்தின் அவலம் போக்க
அருகினிலே தோள்சாய்க்கும் துணையாய் நிற்பாய்!
வலையினிலே மீனாகத் துடிக்கு துள்ளம்
வழிகாட்டி நின்றிட்ட ஒளியாம் மின்னல்!
மலையாக நம்பிக்கை கொண்ட பெண்ணை
மடிசாய்த்தே நிம்மதியைத் தருவாய் இன்றே!
நிலையாகி வாழ்வினிலே நிலைக்கு மின்ப
நிதியாக நீவேண்டும் நிலைத்த வாசை!

ரீதியாகவும், நாட்டிலே பற்றுக் கொண்ட பிரஜை யாகவும் வளர்த்தெடுப்பது மாத்திரமல்லாது ஒரு பூரண அனைத்துலக மாணவனை உருவாக்குவதும் இதன் பணிகளாக விளங்குகின்றன.

**கலைத்திட்ட மறுசீரமைப்பு**

கலைத்திட்டமானது தேர்ச்சிகளினை அடிப்படையாகக் கொண்ட மாணவர் மையக் கற்பித்தல் செயல்முறையைக் கொண்டதாகும். அதில், தேர்ச்சி என்பது ***"அறிவு, திறன், மனப்பாங்கு, திறன்கள், ஆளிடைத் தொடர்புகள் ஆகியவற்றின் திரட்சியால் உருவாகும் வாழ்க்கைப் பரிட்சயமாகும்."***[5] இவ்வாறு தேர்ச்சியானது கலைத்திட்டத்தில் காணப்படும் அடிப்படை அம்சங்களான, அத்தியாவசிய தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள் என்பவை இனங் காணப்பட்டு வெளியிடப்படல், தேர்ச்சி மட்டத்தை அடைவதற்குத் தேவையான விடய உள்ளடக்கம் காணப்படல், மாணாக்கர்கள் அறிவு, திறன் மனப்பாங்கு முதலிய தேர்ச்சிகள் அடைவதை உறுதிப்படுத்த கணிப்பீடுகளை மேற்கொள்ளல், குறிப்பிட்ட பாடவேளையினைக் கொண்டு பாட விடயங்கள் தீர்மானிக்கப்படல் போன்றவற்றைக் கொண்டிருக்கும்.

இதனை அடியொற்றியே கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறும். ***பியாஜே*** எனும் உளவியலாளர், ***"கற்றல் செயல்முறையின் போது ஒருவர் புதிய தகவல்களை தன்மையமாக்கி கொள்கின்றார்."***[6] என்கின்றார். இதற்கமைய கற்றல் என்பது உள்ளக்கோலங்களை உருவாக்கிக் கொள்ளல், அளவுக்கோலங்களை இற்றைப்படுத்தல் என வரைவிலக்கணப்படுத்தலாம். பாடசாலையிலே கற்பித்தல் செயன்முறையிலே 5E முறையானது பயன்படுத்தப்பட வேண்டும் எனக் கலைத் திட்டமானது பரிந்துரை செய்வதாய் அமைகிறது. 5E முறையானது,

- கற்றல் செயல்முறையுடன் இணைதல் (Engagement)
- தேடல் (Exploration)
- விளக்கல் (Explanation)
- விரித்தல் (Elaboration)
- மதிப்பிடல் (Evaluation)

என அமைகின்றது. இவ் 5E மாதிரியானது கட்டுருவாக்க கற்றல் செயல்முறையின் ஊடாக தேர்ச்சிகளை அடையும் முறையேயாகும். இவ் மாதிரியைப் பயன்படுத்தி ஆசிரியர் கற்பித்தல் செய்முறை ஈடுபடும்போது அதனைத் திட்டமிட்டே செயல்படுத்த வேண்டும். குறிப்பாக, மாணவர் - ஆசிரியர் கற்றல் செயன்முறையோடு இணைதல், தேடல் (மாணவர்) கணிப்பீடு (ஆசிரியர்), தேடியவற்றை விளக்கல் (மாணவர்) தேடியவற்றை விரிவுபடுத்தி மேம்படுத்தல் (மாணவர் - ஆசிரியர்) மதிப்பீடு எனத் திட்டமிடல் அவசியமானதாகும். அவ்வகையில், 5E முறை யினுடைய படிநிலைகள் தொடர்பாக விரிவாக நோக்குவோம்.

- **கற்றல் செயல் முறையோடு இணைதல்** (Engagement)

இச்செயன்முறையானது மாணவர்களின் கவனத்தை கற்றலின்பால் இணைக்கும் செயற் பாட்டுடன் முன்வைக்கப்பட்ட படி நிலையாகும். ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு குடும்பப் பின்னணியுடனும், பிரச்சினைகளுடனும் பாடசா லைக்கு வருகை தருவார்கள். எனவே அவ்வா றானதொரு மனநிலையுடன் மாணவர்களால் பாடசாலைக் கற்ற செயற்பாட்டில் ஈடுபட முடியாது. ஆக, ஆசிரியர் மாணவர்களைக் கற்கும் மனப்பான்மை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். வகுப்பறையிலே மாணவர்களின் உடல் இருந்தாலும், உள்ளமானது பல திசைகளில் சிதறுவதை ஆசிரியர் கவனத்திலே கொண்டு மாணவரைத் தன்பால் இழுத்தது கற்றல் செயல்பாட்டிலே பங்கு கொள்ளச் செய்தல் வேண்டும்.

தற்காலப் பாடப் பிரவேசமானது ***மூன்று*** குறிக்கோள்களை அடையும் வகையில் திட்டமிடப் பட்டுள்ளது. அவை, மாணவரது கவனத்தை ஈர்த்தல், முன்னறிவை *(Prior Knowledge),* நினைவு படுத்துதல், தேடலுக்கான கோடிகாட்டல்களை *(Hints)* முன் வைத்தல், என்பனவையாகும். இம்மூன்று குறிக்கோளினையும் ஆசிரியர் செயற்படுத்த வேண்டுமென்பது அவசிய மானதாகும். இதுபோன்ற கற்பித்தல் செயன் முறையை ஆசிரியர் கவர்ச்சியான முறையிலே மகிழ்ச்சியுடன் மாணவர்களுக்கு கற்பதற்கு வழி செய்ய வேண்டும்.

- **தேடல்** (Exploration)

மாணவர்களைத் தனியே செயற்படுத்து வதிலும் பார்க்கக் கூட்டாகச் செயற்பட்டு சமூக திறன்களை விருத்தி செய்து கொள்ள முடியும். இக்குழுத்தேடலின்போது ஆசிரியர், தேடல் தன்மையை விளக்குதல், அதற்குரிய அறிவுறுத்தல் களை தயாரித்தல் போன்றவற்றை மாணவருக்குப் புகட்ட வேண்டும். இக்கற்பித்தலின்போது

பல்வேறு அணுகுமுறைகளை ஆசிரியர் கையாள முடியும். அவை, **"பளிச்சீட்டட்டை** (fash card), **சுவரொட்டி அறிவித்தல், செய்தித்தாள் தலைப்புச் செய்தி போன்ற எழுத்து ஊடகங்கள். படங்கள் – சித்திரம், செய்து காட்டல் போன்ற கட்புல ஊடகங்கள், ஒலிநாடாக்கள், கவிதைகள் – பாடல்கள் போன்ற செவிப்புல ஊடகங்கள், சம்பாசனைகள், நடித்துக் காட்டல்கள், வீடியோ காட்சிகள் போன்ற கட்புல செவிப்புல ஊடகங்களை கையாண்டு பார்த்தல், உள்ளத்தைத் தூண்டும் வகையிலான கருத்துத் திரட்டல்கள்"**[7] போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

இத் தேடல் முறையானது முன்வைக்கப் படுவதற்கான காரணம், தெரிவு செய்த தேர்ச்சி மட்டத்தை அடைவதும், ஏற்கனவே தீர்மானத்தை கற்பதற்கு பதில் தீர்மானிக்கப்படாதவற்றை மாணவர்கள் தேடி அறிவது இக்காலத்துக்கு பொருத்தமானது என்றெண்ணியேயாகும்.

இத்தேடல் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தர உள்ளீடுகள் தேவையாகும். அவ்வாறு தர உள்ளடக்கள் கிடைக்காத சூழலில் அறிவுறுத்தல் படிவம் ஒன்றை துணையாக கொண்டு குறித்த பிரச்சனையின் வெவ்வேறு அம்சத்திற்கு ஏற்ப ஒவ்வொரு குழுக்கள் தேடலில் ஈடுபடுதல் பொதுவானதாக அமையும்

- **விளக்கல்** (Explanation )

தேடல் படிநிலையின் அடுத்த கட்டமாக அமைவது விளக்கல் படிநிலை ஆகும். இப் படிநிலையிலே மாணவர்கள் தேடி அலைந்த விடயங்களை ஆக்கபூர்வமான முறையில் முன் வைத்தல் வேண்டும். அவ்வாறு முன்வைக்கும் போது பேச்சு என்ற ஊடகத்துக்கு பதிலாக எழுத்து ஊடகங்களை பயன்படுத்துதல், அதனைச் செய்துகாட்டல், சித்திரித்தல் போன்ற முறை களிலே முன்வைகலாம். முன்வைப்பு செய்வதற்கு முன்னர் சேகரித்து தரவுகளை பகுப்பாய்வு செய்தல், ஒப்பிடுதல், வகைப் படுத்துதல், தேவைக்கு ஏற்ப பயன்படுத்துதல், குறித்த கருத்தினை உறுதியாக நிறைவேற்று வதற்குரிய ஆதாரங்களை வெளிக்கொணர்தல், தீர்மானம் எடுத்தல், பின்னர் திட்டங்களை வகுத்தல் என்பவற்றை கவனத்தில் கொண்டே முன்வைப்புச் செய்தல்வேண்டும்.

- **விரித்தல்** (Elaboration)

விளக்கல் முறையின் அடுத்த கட்டமாக விவரித்தல் முறையானது மாணவர்களின் சிந்தனை பேறுகளை எளிதில் மாற்றமடைந்து விடாத வகையில் அவர்களது மனதிலே பதிய

# காலந்தோறும் அகம்

காலைப்பொழுதினில்
காரிருள் கலந்த பனிபோல – மெல்ல
நினைவலைகள் விழுகின்றன
சொல்லாத அன்பின்
முதல் மூச்சாய்
காலமோ கனதியாகின்றது
கண்களின் தேடலில் – தினம்
தீராத சுமைகளுடன்
மனம் மட்டும் ஏனோ
உன் பெயரில் தங்கிவிட்டது.
சூரியன் சாயும் அந்திப் பொழுதில்
வழியறியாது நின்ற – என்
மனம் காற்றிலே உன்
குரலைக் கேட்க நிழல்களாய்
நீளுகின்றன
அவை ஒளிவிட
மறுக்கின்றன
முழுமதி வந்தபின் உலகமே
அமைதியாக அகம் மட்டும்
அலைகளின் கொந்தளிப்பைபோல
விழித்திருக்கிறது
என் துடிப்பின் மொழியாக.
காதல் மாறவில்லை
காலம் மாறிவிட்டது.
கால ஓட்டத்தில் – எதுவாகினும்
அகம் உன்னை காலமெல்லாம்
அரவணைப்பாய்க் காக்கும்

**– பா.கிருபாலினி**
**(கரவை மகள்)**
பேராதனைப் பல்கலைக்கழகம்.
இலங்கை.

வைக்கும் முறையாக இவ்விரித்தல் முறையானது காணப்படுகிறது. இது வகுப்பறைக்கு வரையறைப் படாத படிமுறையாகும். இது இரண்டு பகுதி களைக் கொண்டது. இதன் முதற்கட்டம் மூன்று கட்டங்களாக வகுப்பறையில் நிகழும். இரண்டாம் பகுதி KASP மாதிரியாகும். மாணவர்கள் குறித்த பகுதியினை விவரிப்புச் செய்ததன் பின்னர் இறுதியாக ஆசிரியர் விவரித்தலே இறுதியான செயற்பாடுகளாகக் காணப்படும்.

இதன்போது ஆசிரியர் மாணவர்களுடன் கலந்துரையாடி அவற்றைக் கரும்பலகையிலே காட்சிப்படுத்தும் வாய்ப்பானது ஆசிரியருக்குக் கிட்டும். இம்முறை வகுப்பறையோடு மட்டும் முடிவதில்லை. வகுப்பறையை தாண்டியும் செல்லும் மாணவர்கள் வகுப்பறையில் பெற்ற அறிவினையும், பாடத் தெளிவினையும் மேலும் விருத்தி செய்வதற்காக வகுப்புக்கு வெளியே பல்வேறு பணிகளில் ஈடுபட வேண்டி இருக்கும்.

- **மதிப்பிடல்** (Evaluation)

5E மாதிரியின் இறுதிப்படி முறையையே மதிப்பீடு ஆகும். இம் மதிப்பீடானது நேரடி யாகவே இடம்பெறும். ஒட்டுமொத்த வகுப்பு மாணவர்களும் எத்தனை பேர் குறித்த தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளனர் என்பதைத் தீர்மானிப்பதையே மதிப்பீடானது கொண்டுள்ளது. இதில் மாணவர் கணிப்பீடு, மதிப்பீடு செய்யும் போது அதன் நியதிகள் ஐந்தாக வரையறுக்கப் பட்டுள்ளன. இந்த ஐந்து நியதிகளுக்குள்ளே அறிவு, மனப்பாங்கு, திறன் ஆகிய மூன்றும் நேரடியாகவே பாடத்துடன் தொடர்புடையவை. இறுதி இரண்டும் கற்றல், கற்பித்தல் செயல் முறையினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும். மாணவர் கணிப்பிடுதல், மதிப்பிடுதல் நிகழ்த்தப்படுவது ஆசிரியருடைய பொறுப்பாகும்.

இவ்வாறு 5E முறையிலே கற்றல், கற்பித்தல் செயன்முறையானது கலைத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, வளநூல்கள் என்பவற்றை அடிப்படை யாகக் கொண்டு அதிலே காணப்படும் ஆசிரியருக்கு கொடுக்கப்பட்ட வழிகாட்டல் முறை களினை அடிப்படையாக வைத்துக் கொண்டும், கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நிகழ்த்தப் படுகின்றது. இருப்பினும் இனிவருகின்ற கல்வி தொடர்பான மறுசீரமைப்பானது வேறுபட்ட தளத்தில் அணுகப்பட உள்ளது. அதாவது, பாடநூல்கள், ஆசிரிய வழிகாட்டி என்பவற்றை நீக்கம் செய்து, இதழ் வடிவ முறையை (மொடியுல்) அறிமுகம் செய்யப்பட உள்ளது. இவ்மொடியுல்கள் ஒரு விடயப் பொருள்(தீம்) அடிப்படையிலேயே உருவாக்கப்பட உள்ளன. இதுவரை காலமும் **நடைமுறையில் உள்ள 40 நிமிட பாடவேளையானது ஒரு மணித்தியாலயமாக ஆக்கப் பட்டு ஒரு நாளில் ஐந்து பாட வேளைகளாக மாற்றம் செய்யப்பட்டு, மிகுதி நேரத்திலே உடற்கல்விச் செயற்பாடுகள் நடைபெற உள்ளன.**

மேலும் பாடசாலையிலே காணப்படுகிற தவணை முறைகள் நீக்கம் செய்யப்பட்டு செமஸ்டர் (semester) முறை அறிமுகம் செய்யப் படவுள்ளதுடன், அவை ஒன்று தொடக்கம் பதினான்கு வாரங்களைக் கொண்டதாக காணப்படும். அதேபோல, கற்றற்பேறு நீக்கப் பட்டு விருப்புக்குரிய நோக்கம், அறிமுகம் செய்யப்பட உள்ளது. கல்வி மறுசீரமைப்பிலே இவ்வளவு காலம் இருந்த பரீட்சை மதிப்பீட்டு முறைகளிலும் மாற்றங்கள் கொணரப்பட உள்ளன. இது 60% வீதமான புள்ளிகள் எழுத்துப் பரீட்சைக்கும், 40% வீதமான புள்ளிகள் செயற்திட்டத்துக்கும் (Assignment) வழங்கப் பட உள்ளது. இது போன்ற மறுசீரமைப்பானது இனி வருகின்ற காலங்களில் நடைமுறைப் படுத்தப்படுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டு வந்தாலும் அவை, 100% கற்றல் கற்பித் தலில் வெற்றியை தரும் என்பதனை உறுதியாக கூற முடியாது.

**அடிக்குறிப்புக்கள்**

1. கார்த்திகேசு சிவத்தம்பி., *தமிழ் கற்பித்தல், முதல் மொழியாகத் தமிழ் கற்பித்தல் பாயிரமாகச் சில குறிப்புக்கள்*, ப.ஒ.
2. நவாஸ்தீன், எப். எம்., (2015) *அகவிழி, கலைத்திட்டம் ஓர் அறிமுகம்*, ப.4.
3. சபா.ஜெயராசா., *கலைத்திட்டம்*, ப.11.
4. மேலது., ப.13.
5. கினிகே,எல்.ஜி., *தேர்ச்சிகளை அடிப்படை யாகக் கொண்ட கலைத்திட்டமும் செயற் பாட்டுத் திட்டங்களும்*, ப.1.
6. மேலது., ப.5.
7. மேலது., ப.27.

❍❍❍

சிறுகதை



# கழிவாய்



**சுந்தரிமணியன்**
புதூர்
இந்தியா.

மாலைவெயிலின் அழகு இளம் மஞ்சளா கவும் பொன் நிறத்தோடும் ஜொலித்துக் கொண்டிருந்தது. குயில்களும் மைனாக்களும் அந்த மருத்துவமனையைச் சுற்றியுள்ள மரங் களின் ஊடே நடைபயின்று கொண்டிருந்தன. மருத்துவமனையின் பின்னாலிருந்த மருத்துவர் ஜெயகார்த்திகாவின் வீட்டில் அவளின் கணவர் “மெதுவா வாக்கிங் போம்மா” என்றார்.

“சரிங்க” என்று கூறிக்கொண்டே எழ முயன்ற ஜெயகார்த்திகாவின் இடதுகைகள் நடுங்க ஆரம்பித்தன. இருப்பினும் பிரயத்தனப்பட்டு எழுந்த ஜெயகார்த்திகாவுக்கு கைகள் இரண்டும் சுயநினைவிழந்த குழந்தை போல் ஆடின. மெதுவாக நடக்க ஆரம்பித்தாள். அவளது நினைவுகள் முன்னோக்கிப் பறந்து கொண்டி ருந்தன. இளம் வயதில் அந்த மருத்துவமனையின் முக்கிய மருத்துவராக வலம்வந்த ஜெய கார்த்திகாவின் எலுமிச்சை நிறத்தின் அழகுக்கு ஏற்ப, கறுப்புநிறத்தில் காட்டன் சேலையும் அதற்கு ஏற்றாற்போன்ற தோடும் அணிந்து தேவதையாய் ஜொலித்த அவள் வேகமாய் நடைபயின்று கொண்டிருந்தாள். நர்சுகளை விரைவாய் வேலைவாங்கியதோடு வந்திருக்கும் அந்தக் கல்லூரி மாணவியான பே‘ண்டை உள்ளே கூப்பிட்டாள். வந்தவள் அமர்ந்தவுடன்,

“ஏன்பா கொஞ்சம் ஜாக்கிரதையா இருந் திருக்கக்கூடாது. நாலுமாசம் ஆச்சு போலிருக்கே. அபார்ஷன்தான் பண்ணனும். மாத்திரையில ஒண்ணும் பண்ணமுடியாது” என்றவுடன் வந்தவளின் முகம் அஷ்டகோணலாய் ஆனது.

“எப்ப மேம் பண்ணலாம்” என்றவுடன்,

“இன்னிக்கே அட்மிட் ஆகுங்க. பண்ணி விடலாம் ஒரு மணிநேரம்தான். முடிஞ்சதும் டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்குப் போய்டெலாம். போகும் போது என்னைப் பாத்துட்டுப் போய்டுங்க” என்றவுடன், பயத்துடன் எழுந்த மாணவியை நர்சு வந்து பக்கத்து அறைக்கு அழைத்துப்போனாள். கையில் க்ளவுசுடன் பக்கத்து அறைக்கதவைத் திறந்து கொண்டு ஜெயகார்த்திகா உள்ளே போனாள். அன்று மாலை அவளைப் பார்க்க தம்பி விக்னேஷ் வந்திருந்தான்.

“வாடா எப்ப வந்த” என்று அவனைப் பார்த்துச் சிரித்த ஜெயகார்த்திகாவைப் பார்த்து முறைத்தான்.

“உங்கிட்ட எத்தன தடவ சொல்லியிருக்கேன். அபார்ஷனலாம் பண்ணாதன்னு. அது நல்லது இல்லக்கா. கருவுலேயே பணத்துக்காக குழந்தைய அழிக்கிறது எவ்வளவு பெரிய பாவம் தெரியுமா? நீ டாக்டர்கிறதுக்காக என்னவேணா பண்ணுவியா?” கேள்வி கேட்டவனை நிமிர்ந்து பார்த்த ஜெயா,

“சரிடா இனிமே பண்ணல”

“அப்ப இதுவரைக்கும் பண்ணதெல்லாம் பாவமில்லையா?” என்றவனை விழிவிரியப் பார்த்தவள்,

“சாமிக்கு வேணா அந்தக் காச கொண்டு போய் உண்டியல்ல போட்டுடவா?” என்றவளை முறைத்தவன் விரைவாய் எழுந்து கோபமாய் வெளியேறிப்போனான்.

ஜெயகார்த்திகாவுக்குப் பழைய நினைவு களின் சாயலில் மனது ஒரு பக்கம் வலித்தாலும் பழையபடி உற்சாகம் குறைந்துபோன தனது உடலையும் தொய்ந்தநிலையில் தொங்கிய தன்



கைகளையும் பார்த்தபோது மனதில் இருந்த சுமை மேலும் அதிகமாவதுபோல் உணர்ந்தாள். தான் செய்த பாவங்களின் விளைவுதான் தனக்கு நரம்புத்தளர்ச்சியால் இப்போதே கைகளை இயக்கமுடியாமல் போனதோ என்ற வலி ஒரு பக்கம் என்றால் பேரனைப் பற்றிய நினைவுகள் எழுந்து மனதின் பாரத்தை மேலும் அதிகமாக்கின.

அவளது மகன் மணிமொழியன் மருத்துவப் படிப்பை முடித்து மருத்துவராகி நல்ல குடும்ப வாழ்க்கையில் அடியெடுத்து வைத்திருந்தான். ஓராண்டுகளுக்குப் பிறகு மருமகள் கருவுற்று ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

குழந்தை பிறந்து ஓராண்டுகள் கடந்த நிலையிலும் குழந்தை பேசவில்லை என்பதால் அவன் அப்பாவைப்போல் ஒன்றரை வயதிலோ, இரண்டு வயதிலோ பேசுவான் என்று இருந்தனர். அதற்குப் பிறகும் பேரப்பிள்ளை வைணவ் ஆ, ஊ என்று சத்தமிட்டானே ஒழிய வாயில் வார்த்தைகள் ஒழுங்குடன் வெளிவரவில்லை. அக்கம்பக்கத்தார்,

“என்ன வீட்ல ரெண்டு டாக்டர் இருந்தும் பயனில்லையே. புள்ளைய பேசவைக்க முடியலையே” என்று பேச ஆரம்பித்தனர். பையனைத் தனக்குத் தெரிந்த குழந்தைகள் டாக்டரிடம் காண்பித்தபோது,

“மணி பையனுக்கு எந்தப் பிரச்சனையும் இல்ல. தானாவே பேசுவான். பொறுமையா இருங்க, பேரண்ட்ஸ் லேட்டா பேசியிருப்பீங்க அதனாலகூட இருக்கலாம்” என்றார் மருத்துவர்.

அவன் மூன்று வயதுக்குப் பிறகும் பேசாமல் இருப்பதைப் பார்த்தவுடன் ஜெய கார்த்திகாவும் அவள் கணவன் சரவணனும் நொறுங்கிப்போயினர். ஜெயகார்த்திகாவுக்குத் தான் செய்த பாவத்தின் விளைவுதான் தனது பேரப்பிள்ளை பேசாமல் இயல்பான குழந்தை போல் இல்லையோ என்ற பயம் அடிவயிற்றைப் பிசையச்செய்தது. தனது பேரனைப் பார்க்கும்போதெல்லாம் கருவிலேயே அழிந்து போன சிசுக்களின் உருவங்கள் எல்லாம் கனவுகளில் வந்து போனது மட்டுமல்லாது அவளது மனதின் அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தன.

வைணவுக்கு ஐந்து வயதானபோது குழந்தையை எல்.கே.ஜி சேர்க்கவேண்டும் என முயன்றபோது இயல்பான குழந்தைகள் போல் பேசாமல் இருந்தவனைப் பள்ளியில் எப்படிச் சேர்ப்பார்கள் என குழம்பிக் கொண்டிருந்தனர். சரி முயற்சி செய்வோம் என பள்ளிக்கு அழைத்துச் சென்றபோது,

“டெஸ்ட் வைக்கவேண்டும். குழந்தைக்கு ஆனா, ஆவண்ணா தெரியுமா? ஏபிசிடி சொல் வானா?” என்றனர். ஒண்ணும் பேச முடியாமல் கையைப் பிசைந்துகொண்டே வந்த மருமகளின் முகத்தைப் பார்த்தபோது, அவர்களின் துன்பத் திற்குத் தான்தான் காரணமோ என்ற பயம் ஜெயகார்த்திகாவின் மனதில் உதித்தது. இந்த நிலையைப் பார்க்கவா தனது மகன் மணிமொழி யனை மருத்துவம் படிக்க வைத்து, திருமணம் செய்து வைத்துப் பேரக் குழந்தையைப் பார்த்தாயிற்று என நிம்மதிப் பெருமூச்சு விட்டோம் என்றிருந்தது. தனது மகன் மணியின் கவலைதோய்ந்த முகமும் பேரனின் கபட மில்லாத முகமும் அவள் தூக்கத்தைக் கெடுத்தன.

“ஏன்பா நான் ஏன் உயிரோட இருக்கணும்? நம் பிள்ளையும் பேரனும் படுற கஷ்டத்த பாக்கவா? இவ்வளவு பணம் சம்பாத்தியம் பண்ணி என்ன பிரயோசனம்? நிம்மதியான வாழ்க்கை இல்லையே? என்றபோது அவளது கண்களின் கண்ணீர் கன்னங்களில் இறங்கி வழிந்தது.

“ஜெயா அழாத. பண்ணுனது தப்புதான். இப்படியெல்லாம் நடக்கும்னு நினைச்சா பண்ண. நம்ம தலையெழுத்து இப்படியிருக்கு.அழுதாப் போல எல்லாம் சரியாயிடுமா? வேணும்னா அதற்குப் பரிகாரமா நாம ஏதாவது அநாதைக் குழந்தைகள தத்தெடுத்துப் படிக்கவைப்போமா?” என்றவனைப் பார்த்தவள், முகத்தின் கருமை மறைந்து புதிய வெளிச்சம் படர நிமிர்ந்தவள்,

“நீங்க சொல்றதும் சரிதாம்பா. நாளைக்கே நாம ஏதாவது ஆசிரமம் போகலாம்” என்றவளை ஆச்சரியமாகப் பார்த்த சரவணன்,

“நான் சாதரணமாகத்தான் சொன்னேன். இந்த ஐடியா உனக்குப் பிடிச்சிருக்கா? இன்னிக்கே

# பித்தாகிப் பின்தொடரவென்றே...

Dr. ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்.

நினைவின் கொடுந்தாகம்
உன்னால்
பாலைவன வாசம் நுகர்ந்தவளுக்கு
பாலாறு
பெரும்பசியில் தஞ்சக்களை
கொண்டவளுக்கு
பல்பழச்சாறு

கெஞ்சிக் கிடந்த நிலை
கொஞ்சிக் கடந்த நிலையானது

என்னவென்று உரைக்க முடியாத
உணர்வுத்துளிகள்
நெஞ்சக்கரையில் அலையாய்
சில நேரம் சிரிக்க
பல நேரம் மரிக்க
சில நேரம் ஆத்ம அமைதி
பல நேரம் படபடக்கும் சிறகுகள்
சில நேரம் அழ
பல நேரம் ஆழ்ந்த உறக்கம்
சில நேரம் பெருமௌனம்
பல நேரம் பேராற்றின் சலனம்

நெஞ்சம் தளும்பி வழிகின்ற
ஈரக்கிடங்கினுள் பொங்கிக் கிடக்கிறேன்
இந்தக் கொடுகை நல்லது
இன்னும் இன்னும் பசியெடுக்கும்
பாத்தியதையில் மூர்ச்சையடைந்து கிடக்கிறது

சபிக்கப்பட்ட இந்த வாழ்வில்
அன்பொன்றே சுடரொளியாய்
சிலுவை சுமந்த வாழ்வில்
கொண்டாடும் நேசமொன்றே
விடிவெள்ளியாய்
குட்டும் குரூரங்களின் படுகையில்
கரையொதுங்கிய மென்காதலின்
முத்துச் சிப்பியாய்
ஊனத்தேரோட்டத்தில் கொட்டிய
மலர்க்கிளையாய்
நீ

பேரன்பின் நிமித்தங்கள்
பேரன்பின் வார்த்தைகள்
பேரன்புக்கென்று ஒரு ஆன்மா
பித்தாகிப் பின்தொடரவென்றே இக்காதல்.

---

என்னோட நண்பர் பிரசாத்கிட்ட கேட்கிறேன். நாம போய் குழந்தைகளப் பார்த்து அவங்க படிப்பு, உணவு, துணிமணிகூட வாங்கிக் கொடுப்போம். இதனால் உனக்கு மனநிம்மதியும் நம்ம பேரனுக்குப் பேச்சும் வந்தா எல்லோருக்கும் நிம்மதிதானே" என்றவனைப் பார்த்துப் புன்னகைத்த ஜெயகார்த்திகா,

"நம்ம சொத்தே போனாலும் பரவாயில்லப்பா. போய் அந்தக் குழந்தைகளப் பார்த்தா நமக்கு நிம்மதி வரும்பா" என்றவளைப் பார்த்துச் சரியென்பதுபோல் புன்னகைத்தான்.

ஜெயகார்த்திகாவின் மனதிலிருந்த பாரம் கொஞ்சம் குறைந்து மனம் லேசாவதுபோல் உணர்ந்தாள். இந்தப் புண்ணியத்தால் தனது பேரனின் நிலை மாறும் என்று நம்புவோம் என மனதில் நினைத்து நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள்.

❍❍❍

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்...



பேராசிரியர்
துரை.மனோகரன்

**விளையாட்டுச் செய்திகள் :**

நமது நாட்டில் விளையாட்டுச் செய்திகளுக்கு ஒருபோதும் குறைவு இல்லை. அரசியல்வாதிகள், சமய வேடதாரிகள், மக்கள், ஊடகங்கள், சமுதாய நிறுவனங்கள் எனப் பலரும், பலதும் விளையாட்டுச் செய்திகளுக்கு வித்திடுவதைக் காணலாம். சிறுபிள்ளைகள் கூட வியந்து பார்க்கும் அளவுக்கு, நாட்டில் விளையாட்டுச் செய்திகள் அதிகரித்து வருகின்றன.

நமது நாட்டின் மிக மோசமான பேரினவாத அரசியல்வாதிகளில் ஒருவராகவும், முட்டாள்தனமாக உளறும் கோமாளியாகவும் விளங்கும் ஒருவர், அரசின் முக்கியஸ்தர் ஒருவர் பதவி விலகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளப்போவதாக அறிவித்து, பகலில் உண்ணாவிரதமும், இரவில் வீட்டில் தூக்கமுமாக ஏறத்தாழ இருபத்து நான்கு மணித்தியால நாடகம் ஒன்றை ஆடினார். அவரை ஆதரிப்பதற்கென்றே சில ''வெங்காயங்களும்'' இருக்கின்றன. அடுத்த நாள் உயர்சபையில் அரசு வெளியிட்ட ஒரு விடயத்தைச் சாக்காகக் கொண்டு, ''தப்பினேன் பிழைத்தேன்'' என்று அவர் தமது ''உண்ணாவிரத'' விளையாட்டை முடித்துக்கொண்டார். இனிமேல் உண்ணாவிரதம் பற்றி அவர் கனவிலும் எண்ண மாட்டார் என்று கருதலாம்.

சட்டநடவடிக்கைக்குள் அகப்பட்டுக்கொண்ட சமயவேடதாரி ஒருவரும் தமது ''வீரப்பிரதாப விளையாட்டைக்'' காட்டுமுகமாக ''உண்ணா விரத'' நாடகத்தை நடத்திக்காட்ட முயன்று, இரண்டு வேளை உணவைத் தவிர்த்துக் கொண்டார். பாவம்! ஆசாமிக்குப் பசி தாங்க முடியவில்லை. அவர் போன்றோர் இரவில் சாப்பிடுவது இல்லை என்பதால், எப்போது விடியும் என எதிர்பார்த்துக் காத்திருந்து, காலை உணவைக் கேட்டுவாங்கிச் சாப்பிட்டு, தமது ''உண்ணாவிரத'' விளையாட்டைச் சத்தம் இல்லாது முடித்துக்கொண்டார். இனிமேல் சாப்பாட்டுக்குத் தவிர, உண்ணாவிரதம் தொடர்பாகச் சும்மா பேச்சுக்குக்கூட வாயே திறப்பதில்லை என்று அவர் முடிவு செய்திருப்பார்.

ராஜவம்சத்து இளவரசருக்கு இப்போதெல்லாம் வாயைச் சும்மா வைத்திருக்கவே முடிவதில்லை. தாம் கலந்துகொள்ளும் கூட்டங்களில் எல்லாம் ''என்னைக் கைது செய்யுங்கள். சிறையில் அடையுங்கள்'' என்று பேசிவருகிறார். நியாயப்படி, குடும்பமே கம்பி எண்ணவேண்டியதுதான். ஆனால், ஏன் இவர் இவ்வளவு அவசரப்படுகிறார் என்று தெரியவில்லை. காலம் வரும்போது எல்லாம் நடக்கும்தானே! அதேவேளை, இளவரசர் இன்னொரு ''புனித'' வாக்கியத்தையும் சொல்லியிருக்கிறார். ராஜவம்சத்து ஆட்சிக் காலத்தில் இனவாதமே இருந்ததில்லையாம். அவ்வளவு ''புனிதர்கள்'' அவர்கள்! குடும்பமாக நாட்டையே அழித்துக் குட்டிச் சுவராக்கிப் போட்டு, இப்போது ''வசனம்'' பேசி விளையாட்டுக் காட்டுகிறார், இளவரசர்!

ராஜவம்சத்துப் பேரரசரைப் பற்றிப் பேச வேண்டியதே இல்லை. முடிசூடவில்லை என்பதைத் தவிர, அத்தனை அட்டகாசங்களையும், அநியாயங்களையும் கொஞ்சம் கூட மிச்சம் விடாமல் செய்த ஒரு ''பெருமகன்,'' அவர். மந்திர தந்திர வித்தைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இப்போது அவர் தொடர்பான புதிய விடயம் ஒன்று அம்பலமாகி இருக்கிறது. நாட்டின் ஓர் இடத்தில் இருக்கும் மதத்தலம் ஒன்றில் அவருக்கான சொகுசு அறை ஒன்று இருப்பது தெரியவந்துள்ளது. திரைப்படங்களில் இடம்பெறுவது போன்ற மர்ம அறை அது. எப்படி எப்படி எல்லாம் விளையாட்டுக் காட்டி ராஜ வம்சத்தவர்கள் உல்லாச வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு இது ஓர் உதாரணம் மட்டுமே!

தமிழ்மக்கள் தொடர்பான விளையாட்டுச் செய்திகளுக்கும் குறைவில்லை. யாராவது பிறமொழிக்காரர்கள், தமிழ்மக்கள் தொடர்பான ஏதாவது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, ‘‘வணக்கம்’’ என்று ஒரு வார்த்தையைச் சொல்லி விட்டால் போதும். தமிழ்மக்கள் ஏதோ காணா ததைக் கண்டவர்களைப் போலக் குதூகலித்து மகிழத்தொடங்கிவிடுகிறார்கள். ஏன் இந்தப் பரிதாபநிலை? பேசும் பிறமொழிக்காரர், தமிழில் நாலைந்து வசனங்களையாவது பேசத் தெரிந்த வராக இருந்தால், தமிழ்மக்களின் அந்த மகிழ்ச் சிக்கும், குதூகலத்துக்கும் ஒரு நியாயம் இருக்கும். தம்மைத் தேடி வருபவர்களை மதிப்பதும், வரவேற்பதும் நல்லெண்ணத்தின் வெளிப்பாடு தான். ஆனால், தக்கவர் யார், தகாதவர் யார் என்ற தாரதம்மியம் பார்க்காமல், வெளுத்த தெல்லாம் பால் என்று கருதித் தமிழ்மக்கள் ஏமாறவேண்டுமா?

**அருமையான ஒர் ஆடல் நிகழ்வு :**

இப்போதெல்லாம் கண்டியில் தொடர்ந்து அற்புதமான கலை நிகழ்ச்சிகள் நடந்தவண்ணமே உள்ளன. பார்வையாளர்களின் கண்களும், மனங்களும் மகிழ்ச்சியில் திளைக்கின்றன. அந்த வகையில், அண்மையில் ***கண்டி சத்தியசாய் கலாலயம் கலாஞ்சலி*** என்னும் சிறந்தவொரு நாட்டிய நிகழ்வை நடத்தியது. ***உமா ஸ்ரீதரனை*** நடன ஆசிரியையாகவும், ஸ்தாபகராகவும் கொண்ட இந்நாட்டிய நிறுவனத்தின் 25ஆவது ஆண்டுவிழாவில் கண்டி உதவி இந்தியத் தூதரக அதிகாரி சச்சின்குமார் சர்மா பிரதம அதிதி யாகவும், பேராசிரியர் துரை. மனோகரன், கலாநிதி இரா. மகேஸ்வரன், கலாநிதி ரமணராஜா, காந்தி லியனகே ஆகியோர் சிறப்பு அதிதி களாகவும் கலந்துகொண்டனர். விசேட விருந்தினர் களும் இடம்பெற்றிருந்தனர்.

இந்த நாட்டிய நிகழ்வில் பங்குபற்றிய அனைத்துக் கலைஞர்களும் சிறந்த சிரத்தை எடுத்து, தமது கலைத்திறனை மிக அற்புதமாக வெளிப்படுத்தினர். உமா ஸ்ரீதரனின் நட்டு வாங்கம், சுபாகரனின் குரலிசை, நிரோஜனின் வயலின், ரமண சர்மாவின் மிருதங்கம், குகனேஸ் வரனின் புல்லாங்குழல் என அனைத்துப் பின்னணி அம்சங்களும் இணைந்து, நாட்டிய நிகழ்வை உச்சத்துக்குக் கொண்டுசென்றன. நடன நிகழ்ச்சிகளுக்கு ஏற்ற காட்சிப்பின்னணிகளும், பொருத்தமான ஒளி, ஒலி அமைப்புகளும் பார்வை யாளர்களைப் பரவசம் அடையச்செய்தன. தமிழிலும், ஆங்கிலத்திலும் அறிவிப்புகளை அழகாக நிகழ்த்திய அறிவிப்பாளர்களும் நமது பாராட்டுக்கு உரியவர்கள்.

கணபதி கீதம் முதல் திருவிழா வரை நிகழ்த்தப்பட்ட ஒன்பது நாட்டிய நிகழ்வுகளில், எட்டு தனி நடனங்களாகவும், ஓம் நமோ நரசிம்ஹாய நாட்டிய நாடகமாகவும் அமைந்தன. நரசிம்ம அவதாரக்கதையை அடிப்படையாகக் கொண்ட நாட்டிய நாடகத்தில் 50க்கும் மேற்பட்ட சிறியவர்களும், பெரியவர்களுமான நாட்டியக் கலைஞர்கள் கலந்து சிறப்பித்தனர். இரணியனின் அகங்காரம், அவனது மனைவியின் தடுமாற்ற நிலை, பிரகலாதனின் குழந்தைத்தனம் மிகுந்த குதூகலம், பக்தியுணர்வு, இந்நாட்டிய நாடகத்தின் இறுதிக்கட்டத்தில் தோன்றிய நரசிம்மரின் அட்டகாசம் கலந்த கோபம், இத்தனைக்கும் அனுசர ணையாகத் தத்தம் கலைத்திறமையை வெளிக் கொணர்ந்த மற்றைய நடனக் கலைஞர்களின் பாவங்கள், அபிநயங்கள் என அற்புதமோ அற்புதம் என்று சொல்லக்கூடியதாக இந்நிகழ்வு அமைந்தது.

திருப்புகழ் என்ற தலைப்பில் அமைந்த நடன நிகழ்வு, பல்வேறு திருப்புகழ்களை அருமை யான நடனக்காட்சிகளாக வழங்கியது. இயல் பாகவே வித்தியாசம் வித்தியாசமான இசை வண்ணங்களைக் கொண்ட திருப்புகழ் பாடல்கள், நடன அசைவுகளால் மேலும் சிறந்த ரசனையை ஏற்படுத்தின. பாரதியின் உறுதிமொழி என்னும் தலைப்பில் அமைந்த நடனநிகழ்வு, பெண்ணியம் தொடர்பான மகாகவி பாரதியின் பாடல்களை, அபிநயச் சிறப்புடன் அழகாக வெளிக் கொணர்ந்தது. மயில் நடனம், மற்றைய நடனங் களில் இருந்து உடை, ஒப்பனை, பாடல், அபிநயங்கள். காட்சியமைப்பு, ஒளியமைப்பு முதலானவற்றில் வித்தியாசமானதாக அமைந் திருந்தது. திருவிழா என்ற இறுதி நடனம், இன்னொரு வகையில் சிறப்பாக அமைந்தது. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனம், சக்தியைத் தேடுவோம், ஓம் நமசிவாய என்னும் மற்றைய நடன நிகழ்ச்சிகளும் சிறப்பாக அமைந்தன.

❍❍❍

திருமாறனுக்குத் திருமணம் பேசப்பட்டது. பல இடங்களிலும் பேசப்பட்டாலும் ஒன்றும் சரிவருவதாக இல்லை. இறுதியாகத் திருநெல்வேலியில் இருந்து ஓரிடம் பேசி வந்தது. பெண் அபிவிருத்தி உத்தியோகத்தர் வேலை. தகப்பன் ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர். ஜாதகம் பார்க்கப்பட்டது. ஜோதிடர் சொன்னார் பொருத்தம் உண்டு செய்யலாம் என்று. சீதனம் மேலோட்டமாகப் பேசப்பட்டது. அதில் சிக்கல் ஒன்றும் இல்லை. பெண் பார்க்கும் படலம் நடைபெற்றது. பெண்ணும் மாப்பிள்ளையும் தனியாகப் பேசினார்கள். அதன் பின்னர் மாப்பிள்ளை தரப்பு யோசித்து முடிவு சொல்வதாகக் கூறி விடைபெற்றார்கள். இந்த நிலைமையில் மாப்பிள்ளையின் போனுக்கு ஒரு அனாமதேய செய்தி வந்தது. மணப்பெண் யாழ்ப்பாணம் யூனிவசிட்டியில் படித்த காலத்தில் சக மாணவன் ஒருவனைக் காதலித்ததாகவும் முடிவு எடுக்கமுன், நன்கு விசாரித்து உண்மையைத் தெரிந்து கொள்ளுமாறும், அச்செய்தி அமைந்திருந்தது. மாப்பிள்ளை அவ்விபரத்தை தாய் தந்தையரிடம் கூறினான்.

அப்போது தந்தை கூறினார் “மகனே, நானும் இளம் வயதில் ஒரு பெண்ணைக் காதலித்தேன். ஆனால் அக்காதல் நிறைவேறவில்லை. அதன் பின்னரே உனது அம்மாவைத் திருமணம் செய்தேன். காதல் என்பது ஒரு இயற்கை நியதி. நிறைய ஆண்களும் பெண்களும் காதலிக்கிறார்கள். பின்னர் வெவ்வேறு காரணங்களால் காதலைக் கைவிட்டு வேறு திருமணம் செய்து கொள்கிறார்கள். இப்போது உனக்குப் பேசப்படும் பெண்ணும் காதலித்து அதில் தோல்வி கண்டு, வேறு இடத்தில் திருமணம் செய்ய, முயற்சிக்கிறார்கள் போல் தெரிகிறது. உனக்குப் பெண் பிடித்துக் கொண்டால் உதையே செய்யலாம், குழப்பத் தேவையில்லை” என்று.

ஆனால் அம்மா, அப்பாவின் கருத்துடன் உடன்படவில்லை. எமது மகன் என்ன செவிடா, குருடா? ஏன் காதலில் தோல்வியடைந்த ஒரு பெண்ணை அவனுக்குக் கட்டி வைப்பான்? ஊருலகத்தில் எத்தனையோ பெண்கள் உள்ளார்கள்தானே, பார்த்துப் பேசி செய்யலாம், அவசரப்படத் தேவையில்லை என்றா அம்மா.

இந்த நிலையில் ஒரு அனாமதேயக் கடிதம் ஒன்று வந்து சேர்ந்தது. அதில் உங்களுக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு, உங்கள் மகனுக்கு திருமணம் செய்து வைக்க வேறு பெண்ணே கிடைக்கவில்லையா? ஊருலகத்தில் படித்த அழகான பெண்கள் பலர் உள்ளார்கள்தானே, பேசிச் செய்யலாம்தானே. உந்த இடம் வேண்டாம் என்று எழுதப்பட்டிருந்தது.

திருமாறன் பெற்றோரிடம் கூறினான், “நாம் பெண் பார்த்தபோது அந்தப் பெண்ணிடம் தனியாகப் பேசினேன்தானே, அவள் இப்படி ஒரு பிரச்சனை இருப்பதாகக் கூறவில்லையே”.

அப்பா சொன்னார், “எந்தப் பெண்ணும் தனது பழைய காதல் விவகாரங்கள் பற்றியோ, முன்னாள் காதலன் யார்? என்ற விபரத்தைப் பற்றியோ யாரிடமும் பகிரங்கமாகத் தெரிவிக்கமாட்டாள். திருமணம் பேசுவதும், குழம்புவதும் வழக்கம்



தானே, நாம் சம்மதம் சொல்லவும் இல்லை தானே. மகனுக்கு விருப்பமில்லை என்று சொல்லி விடுவோம். ஒரு பிரச்சனையும் இல்லை".

"திருமாறன்" நாம் விருப்பமில்லை என்று சொன்னால், எமது பெண் கறுப்பா, அழகில்லையா, குருடா, செவிடா, ஏன் வேண்டாமென்கிறார்கள் என்று தமக்குள் யோசித்து மிகவும் வேதனைப் படுவார்கள். எமக்குக் கிடைத்த அனாமதேய செய்தி பொய்யாகவும் இருக்கலாமல்லவா.. எதற்கும் நான், ஒருக்கால் நேரில் போய்க் கேட்டு உண்மையை அறிந்து வருகிறேன்" என்றான்.

"ஓம் மோனை, அப்படியே செய். அந்தப் பெண் கூறும் பதிலை என்னிடம் வந்து சொல்லு. நான் மிச்ச வேலையைப் பார்க்கிறேன்" என்றார் அப்பா.

திருமாறன், பெண் வீட்டுக்கு சென்றான். "தம்பி வாருங்கோ" என்று பெண்ணின் தாய் வரவேற்றா.

"அன்ட்டி, என்னைத் தெரியும்தானே"

"ஓம் தம்பி, நல்லாத் தெரியும்".

"உங்கள் மகளிடம் ஒருக்கால் திருமண விடயமாகப் பேசலாமா"?

ஓம், தாராளமாக என்று கூறிய அம்மா மகளை அழைத்து ஹோலில் இருக்கப் பண்ணி இவர் ஏதோ கதைக்க வேணுமாம் என்று கூறி அப்பால் அகன்று போனா.

"என்னை ஞாபகம் இருக்கிறதா?"

"ஓம்"

"எனக்கு ஒரு அனாமதேய செய்தி வந்தி ருக்கு. உங்களுடன் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்த பையனை நீங்கள் காதலிப் பதாக சொன்ன செய்தியே அது? அது பற்றிக் கேட்கத்தான் வந்தேன்".

"ஓம் பாருங்கோ அது உண்மைதான். ஆனால் அப்பாவுக்கு அந்தப் பையனைப் பிடிக்க வில்லை. அதனால் என்னை உங்களுக்கு வலுக் கட்டாயமாகக் கட்டி வைக்கப் பார்க்கிறார்கள். இதுவே உண்மை".

"அந்தப் பையன் உங்களை இப்போதும் விரும்புகிறானா"?

"ஓம்".

"ஒருவனைக் காதலித்து, பின்னர் அவனை அம்போ என்று கைவிட்டு வேறு ஒருவரைத் திருமணம் செய்வது மாபெரும் பாவம். அந்தப் பையனின் மனம் எவ்வளவு வேதனைப்படும். அவன் வேதனையால் தற்கொலை செய்து கொண்டால் அல்லது குடிகாரனாக மாறினால் அல்லது பைத்தியக்காரனாக மாறினால் அத்தனை பாவமும் உங்களையே வந்துசேரும்".

"நான் அப்பாவுக்கு எவ்வளவோ சொன்னேன், அழுது அடம்பிடித்தேன். அப்பா எதற்கும் செவிசாய்க்கவில்லை. பெண் பார்க்க வருவார்கள் மாப்பிள்ளை உன்னுடன் தனியாகப் பேச விரும் பினால் பழைய காதல் விவகாரங்களைக் கண்டிப் பாகக் கூறிவிடக்கூடாது என்று அப்பா பயமுறுத் தினார். அதனால் நீங்கள் பெண் பார்க்க வந்த போது நான் உண்மையைக் கூறவில்லை. தயவு செய்து மன்னித்துவிடுங்கள். நான் கூறிய உண்மைகளை அப்பாவிடம் கூறவேண்டாம். வேறு காரணத்தை சொல்லி திருமணத்தைக் குழப்பிவிடுங்கள்".

மகன் திரும்பி வந்து தகப்பனிடம் விபரம் கூறினான். "மகனே, காதலைக் குழப்பி அப்பெண்ணைத் திருமணம் செய்தால் உனது நிம்மதி தொலைந்துபோய்விடும். அதனால் இவ்விவகாரத்தை உடன் நிறுத்திவிட வேண்டும். நான் பெண்ணின் அப்பாவுக்கு இது விடயமாக கடிதம் எழுதுகிறேன்".

"சரி அப்பா".

"உங்கள் பெண்ணுக்கு வேறொரு
பையனுடன் காதல் இருப்பதாக
எமக்கு செய்தி கிடைத்துள்ளது.
தயவுசெய்து அப்பையனுக்கே உங்கள்
மகளைத் திருமணம் செய்து வைப்பதே
சிறப்பானது. நாங்கள் இவ்விவகாரத்தில்
இருந்து கௌரவமாக விலகி விடுகிறோம்.

இப்படிக்கு
மாப்பிள்ளையின் அப்பா".

❍❍❍

# வாசகர் பேசுகிறார்

ஞானம், தை 2026 இதழ் கிடைக்கப்பெற்றது . எம் வரலாற்றுத் தடயங்களை அழியவிடுவதிலும் அழிப்பதிலும் எம்முடைய புறக்கணிப்பும் பெரும்பங்கு வகிப்பதைக் கண்டுகொள்ளலாம் எனும் கருத்தை நிலைநிறுத்தி யாழ்ப்பாண இராச்சியத்துடன் தொடர்புடைய ***மந்திரிமனை*** பாதுகாக்கப் படவேண்டியதொன்று என்பதை ஆசிரியர் ஆதங்கத்துடன் ஆசிரியர் பக்கத்தில் அலசியது வரவேற்கத்தக்கது. மேலும், ஞானம் பாலச்சந்திரனின் சூளாமணி சிறுகாப்பியம் பற்றிய தேடல் சிலாகிக்கத்தக்கது. விருத்தப்பாவால் அமைந்த அக்காப்பியத்தை இலகுவாக்கி வசன சூளாமணியாக அச்சுப்பதித்த ***சி.வை. தாமோதரம்பிள்ளை***யின் ஆளுமையைத்திறனை வெளிக்கொணர்ந்ததும், அப்பெருந்தகை பற்றிய தகவல்கள் இன்னும் தமிழுலகில் ஆய்வு செய்யப்படவேண்டியது என்பதை வலியுறுத்தியதும் பாலச்சந்திரன் அவர்களை திறமைசார் இலக்கியவாதியாக மட்டுமல்லாமல் ஓர் ஆய்வாளராகவும் எழுநிலை பெறச்செய்கின்றது. **– ராதா**

❍ ❍ ❍

ஜனவரி இதழ் கிடைக்கப்பெற்றேன், மகிழ்ச்சி. ***சி.வை.தா.*** சிறப்பு பதிவுகள், சிறப்பு. **– சண்**

❍ ❍ ❍

ஞானம் பொலிவோடு திகழ்வது மகிழ்வைத் தருகின்றது. காலமறிந்து சிறப்புக் கட்டுரைகளைத் தந்து கொண்டிருக்கிறீர்கள். அரிதான விடயங்களைத் தேடிப் பெற்றுத் தருகின்ற உங்கள் பணி பாராட்டுக்குரியது. தமிழுக்கும், இலக்கியத்திற்கும் நீங்கள் ஆற்றும் சேவை தொடர வாழ்த்துகிறேன். **– இராஜி கெங்காதரன்**

❍ ❍ ❍

## எனக்கு வயது எழுபது

எனது அப்பா
என் அப்பாவின் அப்பா
அப்பாவின் சகோதரர்
அப்பாவின் நண்பர்கள்
எப்போதோ இறந்து போயினர் !

சாகாத நினைவுகளோடு
சாட்சி சொல்ல
நான் மட்டுமே !

அமுத விழாவை எட்டுகிறது
அடையாத சுதந்திரம்
அடைந்த 48 தொடக்கம் !

இருந்த சுதந்திரமும்
இப்போது இழந்து போய்க்கொண்டே
நான் இருக்கிறேன்

முதியோருக்கான
அடையாள அட்டை
பெறத்தகுதியும்
பெற்று விட்டேன்
இனி !
நலன்புரி உதவி
நானும் பெறலாம் !!

***கலாநிதி செ.ஞானராசா***




**1984–85 மன்னார்ப் படுகொலைகள் சொல்வதென்ன? – 2025**
**செ. அன்புராசா**

மன்னார் மாவட்டத்தில் அரச படையினரால் சங்கிலித் தொடராக 1984 - 1885 ஆண்டுகளில் ஏழு மாதங்களில் நடைபெற்ற படுகொலைகளை வெளிச்சம்போட்டுக் காட்டுவதாக இந்நூல் அமைகின்றது. இக்காலப்பகுதியில் 250-300 எண்ணிக்கை யானோர், மன்னாரில் கொல்லப்பட்டாலும், இந்த எண்ணிக்கைக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருக்கலாம் என்பதை நூல் எடுத்துக் கூறுகின்றது. பொதுவெளியில் நடந்த இந்த கொலைகளுக்கு அரசு மௌனம் சாதித்தது. நாற்பதாம் ஆண்டு நினைவுகூரலாக வெளிவந்த இந்த நூலானது, இலங்கை வரலாற்றில் நடைபெற்ற இன அழிப்பின் ஒரு பதச்சோறாக அமைகின்றது எனலாம்.

**அறிந்தவர்களும் அறியாதவையும் (மறுபதிப்பு 2021)**
**என். சரவணன்**

காலனித்துவ கால அரசியல், சமூக மாற்றத்தில் தாக்கம் செலுத்திய இலங்கையரல்லாத 24 ஆளுமையாளர்களின் விபரங்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. இந்தக் கட்டமைப்பில் பதுதா, பிலிப்பு பால்டேஸ், ரொபர்ட் நொக்ஸ், நடேசையர் உள்ளிட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் மொழிவழக்கு பிரயோகங்களை ஆய்வுசெய்த ஹியு நெவில், இலங்கையில் தேயிலையை அறிமுகப்படுத்திய ஜேம்ஸ் ரெயிலர் எனும் இலங்கையரல்லாத ஆளுமையாளர்களின் சுவையான, வியப்புக்குரிய, பயனுள்ள புதிய செய்திகளை வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளது. இவர்களில் பெரும்பாலானோர், பின்னர் இலங்கையர் ஆனார்கள், இலங்கைக்காகவே வாழ்ந்தார்கள், இலங்கையிலேயே மரித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. வீரகேசரியில் வாராவாரம் வெளிவந்த கட்டுரைகளின் விரிவுபடுத்திய வடிவத்தை இந்நூல் உள்ளடக்கியுள்ளது.







**குருவிக்கூடுகள் (சிறுகதைத் தொகுப்பு) – 2025**
**கலாபூஷணம் உடப்பூர் வை. இராமச்சந்திரன்**

ஆசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாக அமையும் இந்நூலில், குருவிக்கூடுகள், மனசாட்சி, வினை விதைத்தவள், காணி நிலம் வேண்டும், உயிரில் கலந்த உறவு, ஆத்ம திருப்தி எனும் ஆறு சிறுகதைகள் உள்ளன. இவற்றில் குருவிக்கூடுகள் எனும் சிறுகதை, 2024ஆம் ஆண்டு, கலாசாரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அரச இலக்கியப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கிடைக்கப் பெற்றவை...

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/Magazine/38/2026




**கோகிலா மகேந்திரனின் பவளமல்லிகை (2025)**

பவளவிழா கொண்டாடும், கோகிலா மகேந்திரன் அவர்கள், ஓர் எழுத்தாளராக சிறுகதைகள், நாவல்கள், சிறுவர் இலக்கியங்கள், கவிதைகள், நாடகங்கள், உள சமூக நூல்கள், உளவியல் கட்டுரைகள், வரலாற்றுத் தகவல்கள், எனப் பல தளங்களில் ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். விஞ்ஞான ஆசிரியராகவும், பல்கலைகழகங்களில் விரிவுரையாளராகவும் சேவையாற்றியவர். இம்மலர், கலாபூஷணம் திருமதி கோகிலா மகேந்திரனின் படைப்புகளையும், ஆளுமைப் பண்புகளையும் 50க்கும் மேற்பட்ட கட்டுரைகள் மூலம் ஆய்வுசெய்து வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. பவளமல்லிகை நறுமணம் கமழுகின்றது.




**வவுனியூர் இரா. உதயணன் படைப்புலகம் (ஆய்வுகளின் தொகுப்பு) (2025)**

உதயணன் அவர்கள், புலம்பெயர் வாழ்வின் அவலங்களையும், போர் வடுக்களையும், தாயக நினைவோட்டங்களையும், அவலம்சூழ் வாழ்வையும், ஒடுக்குமுறைச் சவால்களையும் புனைகதைகளுக்குள் கொண்டுவருபவர். இந்த ஆய்வுத் தொகுப்பானது இலங்கையையும், தமிழ்நாட்டையும் சேர்ந்த நான்கு பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுப்பார்வைகளை உள்ளடக்கியுள்ளது. உதயணனின் நாவல்கள், சிறுகதைகள், படைப்பும் பார்வையும், நாவல்களில் பெண்பாத்திரங்கள் எனும் விடயங்களை பிரதானமாக அணுகியுள்ளன. படைப்பாளிகளை ஆய்வுலகம் எவ்வாறு நோக்குகிறது என்பதற்கு இந்நூல் உதாரணமாக அமைகின்றது.




**அந்தனி ஜீவா – முதலாம் ஆண்டு நினைவுமலர் (2026)**

தனது வாழ்நாள் முழுவதும் கலை, இலக்கியம் என்று சதா இயங்கிக்கொண்டிருந்த அந்தனிஜீவா மறைந்து முதலாம் ஆண்டு நினைவாக வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தனி ஜீவா ஞாபகார்த்தக் குழு அமைக்கப்பட்டதும். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நினைவாண்டு கொண்டாடப்பட்டதும் (11.1.2026), நினைவுமலர் வெளியிடப்பட்டதும், அந்தனிஜீவாவின் உருவம் தாங்கிய தனிப்பயன்பாட்டு முத்திரை வெளியிடப்பட்டதும் வரவேற்கத்தக்கது.

## கிடைக்கப் பெற்றவை...

ISSN 2478-0340
9 772478 034009
PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195